ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம்

சோம. லெ. இலக்குமணச் செட்டியார், பி. ஏ.,

பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை 1.

றது.

செயலாளர்.

ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம்

ஆசிரியர் :

சோம. லெ. இலக்குமணச் செட்டியார்

பாரி நிலையம்
59, பிராட்வே · சென்னை 1.

முதற் பதிப்பு : டிசம்பர், 1950
இரண்டாம் பதிப்பு : ஜூன், 1952
மூன்றும் பதிப்பு : ஜூன், 1953

Approved for Class use non-detailed study-Vide page-91
Fort St. George Gazette, Supplement to Part I-B. dated 13—5—1953.

PRICE :
School Edition Re. 1—0—0
General Edition Rs. 2—0—0

விரோதன் பிரஸ், சென்னை—1.

MESSAGE FROM
H. E. THE HIGH COMMISSIONER
FOR AUSTRALIA IN INDIA
Mr. H. ROY GOLLAN.

The author, Mr. Lakshmanan Chettiar, in books already published, has shown himself a keen and sympathetic observer of peoples, institutions and customs outside of his home land. I have no doubt that his gifts will be used to the full in the book which he is about to publish as a result of his visit to Australia.

A book about Australia for Indian students is especially welcome, for it is on the younger generation, and particularly the students, that we must rely for spreading a fuller mutual knowledge and a wider understanding as between our two countries. Already the Indian students in Australia are doing splendid work in promoting this ideal. Mr. Lakshmanan Chettiar's book may well enlist in the same good cause many young men and women in India to whom the opportunity of travel abroad may never be presented.

பதிப்புரை

நண்பர் சோமு. லெ. இலக்குமணச் செட்டியாரவர்கள் "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற மூதாட்டியின் மூதுரையைக் கொள்கையாக உடைய மரபில் வந்தவர்கள்; சென்னையில் நீண்டகாலமாக ஏற்றுமதி இறக்குமதி வாணிபத்தில் ஈடுபட்டிருப்பவர்கள்; தம் தொழில் முன்னேற்றம் கருதியும் பிறநாடுகளின் தொழிற் சிறப்பை அறியவும் 1948 ஆகஸ்டு முதல் 1949 பிப்ரவரிவரை உலகப் பிரயாணத்தை மேற்கொண்டவர்கள்.

பிரிட்டன், சுவீடன், ஜெர்மனி, செக்கோசுலவகியா, பிரான்சு, அயர்லந்து, அமெரிக்கா, ஹாவாய்த் தீவுகள், ஆஸ்திரேலியா, மலேயா ஆகிய நாடுகளில் அவர்கள் 40,000 மைல் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறார்கள். இத்தகைய விரிவான பிரயாணத்தின் நிகழ்ச்சிகளையும், அதன் வாயிலாக அவர்கள் அறிந்த செய்திகளையும் தொகுத்து இனிய தமிழில் சுவைபட எழுதித் தமிழ் இலக்கியத்திற்குப் பணியாற்றியுள்ளார்கள்.

ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம் என்ற இந்நூல், விவசாயத்தில் செழுமையும், தொழில் வளர்ச்சியில் மிகுந்த மேம்பாடும், பல செயல்களில் உலகத்தில் முதன்மைத் தன்மையையும் விரைவாக அடைந்துள்ள ஒரு நாட்டைப்பற்றி நன்கு விளக்குகிறது. இந்நூலை வெளியிடும் வாய்ப்பை எங்களுக்குத் தந்த ஆசிரியருக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சென்னை
1-12-1950

க. அ. செல்லப்பன்
பாரி நிலையம்

முன்னுரை

"மாசில் வீணையும், மாலை மதியமும்,
வீசு தென்றலும், வீங்கிள வேனிலும்,
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணை அடி நீழலே"

1948-49ல் நான் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றிருந்தேன். அந்த நாட்டைப்பற்றி எனது நினைவுகளை "அமுதசுரபி' ஆண்டுமலரில் சிலமாதங்களுக்குமுன் வெளியிட்டேன். அக்கட்டுரையைப் படித்த அன்பர் பலரின் வேண்டுகோளுக்கிணங்க, அதையே விரிவாக எழுதித் தனி நூலாகத் தந்திருக்கிறேன்.

இன்றைய உலகில் முக்கியமான நாடுகளுள் ஒன்றாக ஆஸ்திரேலியா விளங்குகிறது. அதன் செல்வாக்கு வருங் காலத்தில் மேலும் வளரக்கூடும். இத்தகைய நாட்டைப் பற்றிய விவரமான ஒரு நூல் தமிழிலோ, ஏனைய இந்திய மொழிகளிலோ இதுவரை வெளிவந்திருப்பதாகத் தெரியவில்லை. இக்குறையை இந்நூல் நிறையாக்குமென எண்ணுகிறேன்.

இந்நூலின் பெரும்பகுதி நான் ஆஸ்திரேலியாவில் கண்டதும் கேட்டதுமேயாம். நான் அங்கே ஒரு மாதந் தான் தங்கினேன். பெரியதொரு நிலப்பரப்பைப் பற்றி எழுத எனது பிரயாண அனுபவம் மட்டும் போதியதாகாது என்பதை உணர்ந்தேன். இந்தியாவுக்குத் திரும்பியவுடன் என்னைப்போல் பல நாடுகளுக்குச் சென்ற இந்தியருடனும் இந்தியாவுக்கு வந்த வெளிநாட்டாருடனும் பல பிரச்சினைகளைப்பற்றி விவாதித்தேன்; ஆஸ்திரேலியப் பத்திரிகை

கள் சிலவற்றை வரவழைத்தேன். கடந்த சில ஆண்டுகளில், ஹிந்துஸ்தான் டைம்ஸ், ஸ்டேட்ஸ்மென், பம்பாய் கிராணிகள், டைம்ஸ் ஆப் இந்தியா, ஹிந்து பத்திரிகைகளில் ஆஸ்திரேலியாவைப் பற்றி வெளியான எல்லாச் செய்திகளையும் கட்டுரைகளையும் கூர்ந்து படித்தேன். இவற்றின் விளைவே இந்நூல்.

ஐக்கிய ஆஸ்திரேலியா (Commonwealth of Australia) ஏற்பட்ட ஐம்பதாம் ஆண்டு நிறைவில் வெளியாகும் இந்நூல், அந்த நாட்டைப்பற்றி நம் நாட்டார் மேலும் அறியத் தூண்டுகோலாக இருக்கும் என்றும், தமிழ் மக்கள் இந்நூலுக்குத் தங்கள் பேராதரவைத் தருவார்கள் என்றும் நம்புகிறேன்.

சென்னை
21-11-1950

இங்ஙனம்
சோம. லெ. இலக்குமணச் செட்டியார்.

நன்றியுரை

முந்திய நூல்களைப் போலவே இந்நூலையும் உருவாக்கும் வகையில் **பல அன்பர்கள்** எனக்கு உதவி செய்தனர்; கையெழுத்துப் பிரதிகளையும் அச்சு நகல்களையும் படித்து, அரிய கருத்துக்களைத் தெரிவித்தனர்.

செய்திகளும், புத்தகங்களும், பத்திரிகைகளும், புள்ளி விவரங்களும், கட்டுரைகளும் அனுப்பிய நண்பர்கள் மிகப் பலர். இவர்களுள் இந்தியாவிலுள்ள ஆஸ்திரேலிய ஹை கமிஷனரும் எனது நண்பருமான **மேன்மை தங்கிய H. R. கோலான்** அவர்களை இங்கே சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். அவருடைய செய்திப் பகுதித் தலைவர் **மிஸ்டர் ஜான் டி. கிட்டிங்** ஆஸ்திரேலியாவைப்பற்றிய பல திரைப்படங்களை எனக்குக் காட்டினார். பம்பாயிலுள்ள ஆஸ்திரேலிய வணிகச் செய்தி அலுவலாளர் **மிஸ்டர் மாண்டில்** என்னுடைய எண்ணற்ற கேள்விகளுக்குப் பதிலளித்தார். இம் மூவரும் எனக்குச் சரியான தகவல்களைத் தருவதற்காகப் பல தடவை உரிய இடங்களுக்கு ஆஸ்திரேலியாவுக்கே எழுதி விவரங்களும் படங்களும் சேகரித்துத் தந்தனர்.

ஆஸ்திரேலியாவைப் பற்றி அமெரிக்காவில் அண்மையில் வெளியான நூல்களை **ஓர் அன்பர்** அனுப்பியிருந்தார்; நூலிற் கூறப்பட்டிருக்கும் பல செய்திகளை எனது "**ஆசி**" **நண்பர்கள்** தெரிவித்தனர்.

மேற்கூறிய அனைவருக்கும் கையெழுத்துப் பிரதியை எழுதித்தந்த திரு. **ந. அண்ணாமலைக்கும்** இந்நூலை வெளியிடும் **பாரி நிலையத்**தாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இலக்குமணச் செட்டியார்.

உள்ளுறை

—x—

ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம்

1. முன்னேற்பாடுகள்

*“வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.”*

செய்கின்ற ஒரு வினையாலேயே பிறிதொரு வினையை முடித்துக்கொள்ள வேண்டும் என்பது இக் குறளின் கருத்து. இந்த எண்ணமே என் ஆஸ்திரேலியப் பிரயாணத்தை உருவாக்கியது. ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் வியாபார வேலையாய்ச் செல்லத் திட்டமிட்ட நான் அமெரிக்காவிலிருந்து மீண்டும் ஐரோப்பா வழியாக இந்தியாவுக்குத் திரும்பி வருவதாக இருந்தேன். ஆனல் ஆஸ்திரேலியாவிலுள்ள எனது வியாபார நண்பர்களைச் சந்தித்துவிட்டு, அவ்வழியாக இந்தியாவை அடைந்தால், ஒரு கல் வீச்சிலேயே இரு மாங்கனிகள் பெற்றதாகுமே என்று எண்ணினேன். ஆகவே, பின்னதே மேல் என முடிவு செய்து, ஆஸ்திரேலியப் பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யத் தொடங்கினேன்.

இடையூறுகள்

ஆஸ்திரேலியா, கங்கரு போன்ற உயிரினங்களின் நாடென்றும், அங்கே செல்லுவதால் வியாபார முறையிற் பயனில்லை என்றும் ஒரு சில நண்பர்கள் சொன்னர்

கள்; ஒருகால் பயன் கிடைப்பதாயிருந்தாலும், வெள்ளை ஆஸ்திரேலியாவுக்குப் போகக் கறுப்பனுகிய எனக்கு அனுமதி கிடைக்காது என்றனர் வேறு சிலர். ஆனுல், என் உறுதி மட்டும் தளரவில்லை.

ஹைகமிஷனருக்குக் கடிதம்

பாஸ்போர்ட் என்னிடம் இருப்பதாகவும், வியாபார வேலையாய்ச் சில வாரங்கள் தங்குவதற்கு ஆஸ்திரேலிய அரசியலார் எனக்கு அனுமதி தர வேண்டுமென்றும் புதுடில்லியிலுள்ள ஆஸ்திரேலிய ஹைகமிஷனருக்கு நான் எழுதினேன்; என்னுடைய படங்களையும் சில ஆதரவுகளையும் அனுப்பினேன். அவர் எனக்கு அனுப்பிய பதிலில், சில பொதுவான சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுத் தனி மனுக்களின் மீது முடிவு செய்யும் உரிமையை ஆஸ்திரேலிய அரசியலார் நம் நாட்டிலுள்ள உறுப்பு அரசியலார்க்குக் கொடுத்திருப்பதாகத் தெரிவித்தார். உரிய அனுமதி பெற, சென்னை அரசியலாரிடமே நான் முயல வேண்டுமென்றும், அந்த அனுமதி பெற்றவுடன் பம்பாயிலுள்ள ஆஸ்திரேலிய வர்த்தகக் கமிஷனரை நான் சந்திப்பது நலமென்றும், என்னைப்பற்றித் தாம் அவருக்கு எழுதியிருப்பதாகவும் அந்த நிருபத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அனுமதி கிடைத்தது

அதன் பின்னர், சென்னை அரசியலாருக்கு யான் மனுச் செய்துகொண்டேன். என் மனுவைச் சென்னை

ஹைகமிஷனர் என்பது பிரிட்டிஷ் பேரரசுக்குட்பட்ட டொமினியனகள் தமக்குள் அனுப்பிக்கொள்ளும் தூதர்களின் பதவிப் பெயராகும்.

நகரப் போலீஸ் கமிஷனர் விசாரித்தார். நான் ஆஸ்திரேலியாவுக்குப் போவதாகச் சொன்னதும், அது எட்டாப்பழம் என்று அவருடைய ஊழியர் நகைத்தனர். பிறகு, ஆஸ்திரேலியாவுடன் என் கம்பெனி பெரிய அளவுக்கு வியாபாரம் செய்திருப்பதை, இந்திய அரசியலார் கொடுத்த இறக்குமதி லைசென்சுகள், என்னுடைய பேங்கு நிருவாகிகள் கொடுத்த கடிதம் இவற்றின்மூலம் யான் நிரூபித்தேன். ஆஸ்திரேலியக் கம்பெனிகள் சிலவற்றிற்குத் தென்னிந்தியாவில் பிரதிநிதியாயிருப்பதற்கும், என்னுடைய கம்பெனியின் சார்பில் நான் செல்லுகிறேன் என்பதற்கும் சான்றுகள் காட்டினேன். இந்த ஆதாரங்கள் சட்டத்தைத் திருப்தி செய்துவிட்டதால், சில நாட்களில் அனுமதி வந்தது.

இதற்கிடையில் என்னைப்பற்றியும், என்னுடைய கம்பெனியைப்பற்றியும் எண்ணிறந்த விவரங்கள் கேட்டு ஆஸ்திரேலிய வர்த்தகக் கமிஷனரிடமிருந்து கடிதங்கள் வந்தன. உரிய விடைகளுடன் அவற்றைத் திருப்பி அனுப்பினேன்.

வர்த்தகக் கமிஷனருடன் சந்திப்பு

லண்டனுக்குப் பயணமாய்ப் பம்பாய்க்குச் சென்றதும், 'மாடர்ன் ஹிந்து ஹோட்டலு'க்குச் சமீபத்திலுள்ள 'மென்க்வா' கட்டிடத்துக்குச் சென்று, ஆஸ்திரேலிய வர்த்தகக் கமிஷனர் **மிஸ்டர் சூபர்ட்**டைச் சந்தித்தேன். சிறிது அளவளாவிய பின்னர், ஆஸ்திரேலியாவைப் பற்றிய விவரமான பல புத்தகங்களும், இந்தியாவுக்கு 1947-இல் வந்த ஆஸ்திரேலியப் பொரு

ளாதாரத் தூதுகோஷ்டியின் அறிக்கையும், ஆஸ்திரேலிய வர்த்தக அமைச்சின் காரியதரிசிக்கு என்னை அறிமுகப்படுத்தி ஒரு கடிதமும், அவருடைய நல்வாழ்த்தும் தந்தார். இந்த அலுவலகம் சுறு சுறுப்பாகவும் திறமையாகவும் நடைபெறுகிறது என்பதையும், வெளிநாடுகளிலுள்ள நமது வர்த்தக அலுவலகங்களும் இவ்விதமே நடந்தால், மேலும் பல கோடி ரூபாய் பெறுமான பொருள்களை நாம் ஏற்றுமதி செய்ய இயலும் என்பதையும் இங்கே குறிப்பிடலாம்.

மேலும் சில ஏற்பாடுகள்

வெள்ளை ஆஸ்திரேலியாவில், நான் பல இடையூறுகளுக்கு உள்ளாவேனென்று, ஐரோப்பாவில் பல நண்பர்கள் என்னைப் பயமுறுத்தினர். ஆகையால், ஆஸ்திரேலியப் பிரயாணம் முடிந்ததும் சிங்கப்பூருக்குச் செல்ல லண்டனிலேயே **ரிட்டன் டிக்கட்** (Return Ticket) வாங்கிவிட்டேன்; நியூயார்க் நகரை அடைந்ததும், அங்குள்ள ஆஸ்திரேலியக் '**கான்சல்**' அலுவலகத்துக்குச் சென்று, என்னுடைய பிரயாணப் பத்திரங்களைச் சரிபார்த்துக் கொண்டேன். நான் சிட்னிக்குப் போய்ச் சேரும் விமானக் கம்பெனியின் பெயரையும், பிரயாணத் தேதியையும், மற்றும் சில விவரங்களையும் அந்தக் கான்சல் குறித்துக்கொண்டார். விமானம் விபத்துக்குள்ளானால், என்னைப்பற்றிய கடைசிச் செய்தியை இந்

கான்சல் என்பவர் வணிக உறவை மட்டும் கவனிப்பவர். அரசியல் விவகாரங்களைக் கவனிப்பது இவருடைய பொறுப்பு அன்று. எனவே, இந்த அதிகாரி துறைமுகப் பட்டினங்களிலேயே இருப்பார்.

தியாவில் யாருக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதை யும், மிகவும் கவனமாக எழுதிக்கொண்டு, என்னைச் சரிபார்க்கச் சொன்னார். அதன் பின்னர், என் னுடைய உடல்நிலையைப் பற்றி வைத்தியர்கள் கொடுத்த உறுதிமொழிகளையும் பார்வையிட்டு, அவை சரியாக இருப்பதாகவும், இந்தியாவிலுள்ள ஆஸ்திரேலிய அதிகாரிகளிடமிருந்து இன்ன தேதியிட்ட அறிமுகக் கடிதங்கள் என்னிடம் இருப்பதாகவும், நான் வியாபார வேலையாக ஆஸ்திரேலியாவில் நான்கு வாரங் கள் சுற்றுப் பிரயாணம் செய்யப் போவதாகவும், இந்திய ரிசர்வ் பேங்கு எனக்கு நாணயச் செலாவணி கொடுத்திருப்பதாகவும் என்னுடைய பாஸ்போர்ட்டி லேயே அவர் எழுதிக் கையெழுத்திட்டார்.

—x—

2. பீஜித் தீவுகள்

என்னுடைய அமெரிக்கப் பிரயாணத்தை முடித் துக்கொண்டு, 1948 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் எட்டாம் நாள் பிற்பகல் 3-30 மணிக்கு ஹாவாய்த் தீவுகளின் தலைநகரான **ஹோனலுலு**விலிருந்து, பேன் அமெரிக்கன் கம்பெனியைச் சேர்ந்த ஓர் ஆகாயவிமா னத்தில் நான் ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்டு, நள் ளிரவுக்குச் சற்று முன்னர் 1911 மைல் தொலைவி லுள்ள **கான்டன் தீவு**க்குப் போய்ச் சேர்ந்தேன். இது பிரிட்டனும் அமெரிக்காவும் கூட்டாக ஆட்சி செய்யும் ஒரு சிறு நிலப்பரப்பு (Condominium). எண்ணெய் நிரப்

பிக்கொண்டதும் விமானம் மீண்டும் பறந்தது. அங்கிருந்து 1246 மைல்களுக்கு அப்பாலுள்ள பீஜித் தீவுகளின் தலைநகரான **சூவா** (Suva) வுக்கு அருகிலுள்ள **நந்தி** விமான நிலையத்தில் இறங்கினேன். மிகுதியான இந்தியர் பீஜியில் வாழ்வதால், இத்தீவுகளைப் பற்றி விவரமாக நாம் அறிந்துகொள்வது பொருத்தமானது.

பெயர்க் காரணம்

பீஜி என்பது 250 பவளத்தீவுகளின் பெயராகும். இந்தத் தீவுக்கூட்டத்துக்குப் "பீஜி" (Feejee) என்பதுதான் தொன்மையான பெயர். பிரிட்டிஷ் ஆட்சியில், திருச்சிராப்பள்ளி '**ட்ரிச்சினுபலி**' என்றும் இலங்கையிலுள்ள திருக்கோணமலை '**ட்ரிங்கோமலி**' என்றும் மருவி வழங்கத்தொடங்கியது போலவே, பீஜி '**பிஜி**' ஆயிற்று. பீஜியின் முழுப்பெயர் **பீஜிமொகாம்போ** என்பது. இச்சொற்றொடருக்குச் **சந்திக்கும் இடம்** என்பது பொருள். ஆஸ்திரேலியா, நியூசிலந்து, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளை இணைக்கும் இடமாகப் பீஜி இருக்கிறது. பனமாக் கால்வாய் வெட்டப்பட்டதிலிருந்து பசிபிக் பகுதியின் தற்காப்புத் திட்டத்தில் பீஜி கேந்திரமானதோர் இடமாகிவிட்டது பல தேசத்துக் கப்பல்கள் அங்கு வந்துபோகின்றன. ஆகாயவிமானங்கள் வெளிநாடுகளுக்கு மட்டுமன்றி உள்நாட்டுக்குள் பல நகரங்களுக்கும் செல்லுகின்றன.

நாடும் மக்களும்

பீஜித் தீவுகள் பலவற்றில் பெரிய காடுகள் இருப்பதால், அங்கு மக்கள் வசிப்பதில்லை. மற்றத்

தீவுகளில் இரண்டரை லட்சம் மக்கள் வாழ்கின்றனர். இவர்களுள் பீஜியர் 1,16,000 பேர்; இந்தியர் 1,17,000 பேர். இவ்வளவு மிகுதியான இந்தியர் வாழ்வதால், பீஜிக்குச் **சிறிய இந்தியா** என்று பசிபிக் தீவுகளில் பெயர் வழங்கி வருவதாகக் கேள்விப்பட்டேன்.

இந்தியர் நிலை

பீஜியில் வாழும் நம் நாட்டினரில் மிகப் பலர் தமிழ் நாடு, வங்காளம், உத்தரப்பிரதேசம் ஆகிய பகுதிகளி லிருந்து சென்றவர்கள். இவர்க்ள் கரும்புத் தோட்டங் களிலும், சர்க்கரை ஆலைகளிலும் வேலை செய்கின்ற னர். இவர்களை நினைத்துத்தான்

"கரும்புத் தோட்டத்திலே—அவர்
கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி
வருந்துகின்றனரே"

என்று கவியரசர் **சுப்பிரமணிய பாரதியார்** உள்ளமுருகப் பாடினார் போலும்!

சர்க்கரைத் தொழில்

சர்க்கரை ஆலைகள் நந்திவிமான நிலையத்திலிருந்து 16 மைல் தொலைவிலுள்ள ஓரிடத்தில் இருக்கின்றன. இவை **கலோனியல் சுகர் ரிபைனிங் கம்பெனி லிமிடெட்** என்ற ஆஸ்திரேலியக் கம்பெனியைச் சேர்ந்தவை. பீஜித் தீவுகளில் இதுதான் மிகப்பெரிய வாணிபக் குழு. பீஜியிலுள்ள ரயில்பாதை இந்தக் குழுவைச் சேர்ந்ததே யாகும். கரும்பை ஆலைக்குக் கொண்டு போகவும் சர்க் கரையை ஆலையிலிருந்து துறைமுகத்துக்குக் கொண்டு

போகவும், இந்த ரயில் பாதை அமைக்கப்பட்டது. பிலிப்பைன்சிலும் கியூபாவிலும் சர்க்கரை ஆலைகளை அமெரிக்கர் நடத்துகின்றனர். மொரீசியசிலும், ஜாவாவிலும் தமிழ்நாட்டிலும் அவை முறையே பிரெஞ்சுக்காரரையும் டச்சுக்காரரையும் பிரிட்டிஷாரையும் சேர்ந்தவை. எனவே, சர்க்கரைக்கு எப்போதுமே வெளிநாட்டார்மீது விருப்பம் மிகுதிபோலும். பீஜியின் சர்க்கரைத் தொழிலை ஆஸ்திரேலியர் நான்கு கோடி ரூபாய் மூலதனம் போட்டு 1918 இல் தொடங்கினர். உற்பத்தியில் பெரும் பகுதியைப் பிரிட்டிஷார் எப்போதும் வாங்கிக் கொள்ளுவதாக உடன்பாடு செய்திருப்பதால், பீஜிச் சர்க்கரையின் விலையில் மிகுதியான ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுவதில்லை.

பீஜியின் பொருள்களெல்லாம் வெளிநாடுகளுக்கு ஆஸ்திரேலியக் கப்பல்களிலேயே செல்லுகின்றன. ஏனைய தொழில்களிலும் ஆஸ்திரேலியர் இங்கே ஈடுபட்டுள்ளனர். இதற்குத் துணையாக ஆஸ்திரேலியப் பேங்குகள் பீஜியில் வேலை செய்கின்றன. **பேங்கு ஆவ் நியூ சௌத் வேல்ஸ்** என்ற பெரியதோர் ஆஸ்திரேலியப் பேங்கின் கிளை நந்தி விமான நிலையத்திலும் இருக்கிறது. அங்கு யான் சிற்றுண்டி அருந்தியபோது அதன் நிருவாகி என்னைச் சந்தித்துப் பேசினர்; நான் ஆஸ்திரேலியாவுக்குச் செல்லுவதை அறிந்ததும், தம்முடைய பேங்கின் சிட்னி நகர அலுவலகத்திலுள்ள வெளிநாட்டுப் பகுதியின் தலைவருக்கு ஓர் அறிமுகக் கடிதம் தந்தார். அந்தப் பேங்கு வெளியிட்ட சில புத்தகங்களையும் அவர் எனக்கு அன்பளிப்பாகத் தந்தார். ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் வணிகருக்குப் பயன்

படும் பல செய்திகள் அந்தப் புத்தகங்களில் இருந்தன, ஆஸ்திரேலிய நாட்டின் பொருளாதார நிலையைப்பற்றிய புள்ளி விவரங்களும், அங்கே அமலிலுள்ள தொழில் வணிகச் சட்டங்களின் சுருக்கங்களும், அங்கே நிலவும் வரி விகிதங்களும், பிரயாணிகளுக்கு அந்தப் பேங்கு என்னென்ன உதவிகள் செய்யும் என்பதும் அவற்றில் விரிவாகத் தெரிவிக்கப்பட்டிருந்தன.

சர்க்கரை நிறைந்த சில உணவு வகைகளும், வாழைப் பழமும், அன்னாசிப்பழமும், மீனும் அன்று எனக்குச் சிற்றுண்டியாகக் கிடைத்தன. இவையே பீஜியின் முக்கிய ஏற்றுமதிகள்.

மற்ற இந்தியர்

சர்க்கரைத் தொழிலாளராக இல்லாத மற்ற இந்தியர் வாடகைக் கார் இயக்குகின்றனர்; அல்லது தாமே சிறு வியாபாரங்கள் செய்கின்றனர்; பஸ்களை நடத்துகின்றனர்; சிலர் வைத்தியர்களாக இருக்கின்றனர்; தையல் வேலை, ஆபாரணங்கள் செய்தல், தோல் தொழில், அரசியலாரிடம் ஊழியம் இவற்றால் வருவாய் பெறுவோரும் உள்ளனர். பீஜியில் ஹிந்தி மொழிக்குச் சிறப்பான இடம் உண்டு. இந்திய நாகரிகமும் கலையும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பீஜீயில் பரவியுள்ளது.

பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றபின், இந்திய அரசியலார் இங்கே ஒரு கமிஷனரை நியமித்துள்ளனர். பிரிட்டிஷ் காலனிகளில் இருக்கும் நமது பிரதிநிதிகளுக்குக் ‘கமிஷனர்கள்’ என்று பெயர்.

எல்லாக் கமிஷனர்களும் பிரிட்டனிலுள்ள இந்திய ஹைகமிஷனருக்கு உட்பட்டவர்கள். கமிஷனர் நியமிக்கப்பட்டபின், பீஜியிலுள்ள இந்தியருக்கும் இந்தியாவுக்கும் கலாசார உறவுகள் மிகுதியாக ஏற்பட்டுள்ளன. கலையுலகில் ஒரு மறுமலர்ச்சி பீஜியில் தோன்றியுள்ளது. இந்தியர் தங்களுடைய கல்வி நிலையங்களை அமைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். இராமகிருஷ்ண சங்கத்தின் கிளையொன்று பீஜியில் பணியாற்றி வருகிறது. பீஜியருக்கும் இந்தியருக்கும் இடையே நிலவும் நல்லுறவை மேலும் உறுதிப்படுத்துவதே நமது கமிஷனரின் முக்கிய அலுவலாக இருந்து வருகிறது. பீஜி இந்தியரின் பெருந்துயரம் ஆண்டுதோறும் அவர்கள் ஒவ்வொருவரும் 22 ரூபாய் தலைவரி செலுத்த வேண்டியிருப்பதாகும்.

இந்திய வானொலியின் நிகழ்ச்சிகள் சிலவற்றை மாதம் இருமுறை சூவா ஒலிபரப்பு நிலையத்தார் அஞ்சல் செய்ய இசைந்துள்ளனர். பீஜியிலுள்ள நம் நாட்டினர் இந்தியாவுக்குவந்து செல்லத் துணையாக, **சிர்சா** என்ற கப்பலை இந்தியாவுக்கும் பீஜிக்கும் நேரடியாகப் போய்வர நம் அரசியலார் ஏற்பாடு செய்திருக்கின்றனர்,

பீஜியர்

பீஜியர் குச்சிபோல் நிற்கும் தலைமயிரை உடையவர்கள். ஒருவிதமான எலுமிச்சம்பழச்சாற்றால் சாயம் செய்து அதைத் தலைமயிருக்குத் தடவி பயன்படுத்துவதே இதற்குக் காரணம். சாம்பல், கறுப்பு, மாநிறம் ஆகிய பல நிறத்தவர் பீஜியருள் உண்டு. உயரமான

தோற்றமும், அடர்த்தியான தலைமயிரும், கவனக் குறைவாக உடுத்திய உடைகளும், காலில் செருப்பு அணியாதிருப்பதும், நாற்கோண வடிவுள்ள தகரங் களில் மீன் பிடிப்பதும் பீஜியரின் பொதுவுடைமை. மிகச் சிலரைத் தவிர, எல்லாப் பீஜியரும் கிறிஸ்துவ மதத் தைப் பின்பற்றுகின்றனர். பீஜியில் ஒவ்வோர் ஐந்து ஆடவருக்கும் நான்கு பெண்டிரே இருக்கின்றனர். இதனால் சமூக வாழ்வில் பல தவறுகள் நிகழ்கின்றன. மிளகுச் செடியின் வேரிலிருந்து செய்யப்படும் ஓர் இனிப்பான பானத்தைப் பீஜியர் அருந்துவர். உருளைக் கிழங்கின் சுவை இதில் உண்டு. இதற்குக் 'காவா' என்று பெயர்.

பீஜியர் எதாவது ஒரு நிகழ்ச்சியைக் குறித்துப் பெயர் வைத்துக் கொள்ளுகிறார்கள். உதாரணமாக, ஒருவன் தன் பாட்டன் இறந்த நாளில் பிறந்தால், 'பாட்டன் இறந்தபோது பிறந்தவன்' என்று அவனுக் குப் பெயரிடுவர். இதனால், பீஜியருடைய பெயர்கள் மிக நீளமாக இருக்கின்றன.

பீஜியில் இருப்பவை : தங்கச் சுரங்கங்கள், தென்னந் தோப்புகள், மிளகாய் கத்திரிச் செடிகள், 2018 வானொலிக் கருவிகள். **பீஜியில் இல்லாதவை :** புலி, நரி, கரடி, பாம்பு, தேள், இந்தியர் நடத்தும் பேங்கு.

அரசியல் நிலை

பீஜி கத்தியின்றி இரத்தமின்றிப் பிரிட்டிஷா ரிடம் 1874-இல் வலிய வந்து சேர்ந்தது. இப்போது அது பிரிட்டிஷ் முடியின்கீழ் ஒரு காலனியாக இருந்து வருகிறது. அங்கிருந்துதான் பிரிட்டிஷார் பசிபிக்

பெருங்கடலில் தங்களுக்குள்ள பல தீவுகளை ஆளுகின்றனர். பீஜியில் 13,000 ஐரோப்பியர் வாழ்ந்து வருகிறார்கள். பீஜியிலோ பசிபிக்கின் மற்றத் தீவுகளிலோ சுதந்திரக் கிளர்ச்சி பொதுமக்களின் இயக்கமாக உருவாகவில்லை.

பிறப்பு விகிதம் விரைவாக இருப்பதால், இந்தியர் பீஜியில் சில ஆண்டுகளில் மிகப் பெரும்பான்மையான மக்களாகிவிடுவர் என்றும், அதன் பயனாகச் சுயஆட்சி உரிமை பெற்றால், இந்தியாவிலிருந்து 10,000 மைல் தொலைவிலுள்ள இப்பகுதி இந்தியாவுக்கு உட்பட்டுவிடுமென்றும் பிரிட்டிஷார் அஞ்சுகின்றனர். இந்தியரின் செல்வாக்கைக் குறைத்து அவர்களைச் சிறுபான்மையோராக்கிவிடும் நோக்கத்தோடு, பீஜியை நியூசிலந்துடன் ஐக்கியப்படுத்திவிட வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசியல் வட்டாரங்களில் சிலர் கருதுகின்றனர்.

—x—

3. ஆஸ்திரேலியாவை அடைதல்

நியூ கலிடோனியா

பீஜியிலிருந்து சிட்னி நகரை அடைவதற்கு முன் நியூ கலிடோனியாத் தீவிலுள்ள நௌமியா என்ற இடத்தில் மட்டும் விமானம் சிறிது நேரம் தங்கிற்று. நௌமியா பீஜியிலிருந்து 848 மைல் தொலைவில் இருக்கிறது. நியூ கலிடோனியா இப்போது பிரெஞ்சு ஆட்சிக்கு உட்பட்டிருக்கிறது. இங்கே நிக்கலும் வேறு சில உலோகங்களும் கிடைக்கின்றன. இவற்றை ஆஸ்திரேலியர் தம் நாட்டுக்குக் கொண்டு போய்ப் போர்க்

காலத்தில் பயன்படுத்திக் கொண்டனர். இங்கிருந்து 1200 மைல்கள் பிராணம் செய்ததும், டிசம்பர் 10-ம் நாள் பிற்பகல் 5–30 மணிக்குச் சிட்னி ஆகாய விமான நிலையத்தில் போய் இறங்கினேன்.

சிட்னி துறைமுகப் பாலம்

விமானம் சிட்னியை நெருங்கியதும், துறைமுகப் பாலந்தான் என் கண்ணுக்குத் தென்பட்டது. அதன் வளைவும் நெளிவும், அழகும் அமைப்பும் இனிய காட்சியை அளித்தன. விஞ்ஞான வளர்ச்சியின் சிறந்த அறிகுறியாக அமைந்திருப்பதால் இது சிறப்புடையதாகும். 13 கோடி ரூபாய்ச் செலவில் இம்மாபெரும் பாலம் கட்டப்பட்டிருக்கிறது. இதை அமைக்க எட்டு ஆண்டுகள் ஆயினவாம். இரண்டேமுக்கால் மைல் நீளமுள்ள இந்தப் பாலத்தின் வில்போன்ற வளைவு உலகிலேயே பெரியது. சிட்னி நகரின் நடுவில் இப்பாலம் அமைந்திருக்கிறது. ஆறு வரிசைகளில் வாகனங்கள் இதன் மீது செல்லக்கூடிய அளவு இது அகலமாகப் போடப்பட்டிருக்கிறது. இத்தகைய ஒரு விஞ்ஞான விந்தையைப் பார்த்ததும், ஒருகால் ஆஸ்திரேலியாவை அடைவதற்குப் பதிலாக மீண்டும் அமெரிக்காவுக்கே வந்துவிட்டேனோ என்ற ஐயம் எனக்குத் தோன்றியது.

விமான நிலையம்

சிட்னியில் நான் இறங்கிய விமான நிலையத்தின் பெயர் **கிங்ஸ்போர்ட் ஸ்மித்** என்பது. இதுதான் வெளிநாட்டுப் பிரயாணங்கள் தொடங்கும் அல்லது முடியும்

இடம் (Terminus). **சர் சார்ல்ஸ் கிங்ஸ்போர்ட் ஸ்மித்** என்பவர் ஆஸ்திரேலிய விமானிகளில் தலைசிறந்தவர். பெருங் கடல்களை வான வழியாய்த் தாண்டமுடியும் என்பதை உலகம் ஒப்புக்கொள்ளச் செய்த அறிஞர் இவரே. இவருடைய வாழ்க்கை திரைப்படமாக எடுக்கப்பட்டிருக்கிறது; இந்த விஞ்ஞானியின் பெயரே சிட்னியின் முக்கியமான விமான நிலையத்திற்கு இடப்பட்டிருக்கிறது.

டாலர் பற்றுக்குறை

ஒரு நாட்டிலிருந்து வாங்கும் பொருள்களுக்குப் பணம் செலுத்தப் பொருளை வாங்கும் நாட்டினரிடம் பொருளை விற்கும் நாட்டின் செலாவணி இருக்கவேண்டும். ஏற்றுமதி மூலம் வெளிநாட்டு செலாவணியைப் பெறுவதே முறையான வழி. வேறு விதமாக இதைப் பெற, 1. அந்த நாட்டில் கடன் வாங்கலாம், 2. அந்த நாட்டு மாணவர் தம் நாட்டுப் பல்கலைக் கழகங்களில் படிக்க வசதி செய்யலாம்; அல்லது, 3. அந்த நாட்டு மக்கள் பொழுது போக்குவதற்காகத் தம் நாட்டைச் சுற்றிப் பார்க்க வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம். இக்காலத்தில் பல இயந்திரங்களையும் இன்றியமையாத மற்றப் பொருள்களையும் எல்லா நாடுகளும் அமெரிக்காவிலிருந்தே வாங்குகின்றன. இவற்றின் விலையைச் செலுத்த, மற்ற அரசியலார்களைப் போலவே ஆஸ்திரேலிய அரசியலாருக்கும் அமெரிக்க டாலர்கள் வேண்டியிருக்கின்றன. இந்த அவசியத்தின் ஒரு பகுதியையாவது, அமெரிக்கப் பிரயாணிகள் ஆஸ்திரேலியாவில் வந்து செலவிடும் தொகை

யின் மூலம் சரிக்கட்டி விடலாம் என்று அந்த அரசியலார் கருதுகின்றனர். எனவே, அமெரிக்காவிலிருந்து வருபவர்களை வரவேற்பது அங்கே வழக்கமாகி விட்டது. நான் அமெரிக்கா வழியாகவே வந்ததால், விமான நிலையத்திலுள்ள அலுவலாளர்கள் என்னுடைய பிரயாணப் பத்திரங்களைப்பற்றி அக்கரை கொள்ளவில்லை. ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் இருப்பதைப் போன்ற **இமிகிரேஷன்** தாளில் மட்டும் என்னைப்பற்றிய விவரங்கள் எழுதிக் கொடுத்தேன். அடுத்த கணமே எனது ஆஸ்திரேலிய வணிக நண்பர்களான **வில்சன், ராபர்ட்ஸ்** இருவரும் என்னை எதிர்கொண்டழைத்தனர்.

குறிப்பிட்ட ஒருமாத முடிவில் நான் ஆஸ்திரேலியாவை விட்டு வந்துவிட்டேன். அதன் பின்னரும் அங்குத் தங்கியிருந்தால் என்னை ஆஸ்திரேலியாவிலிருந்து வெளியேற்ற யாரும் முயன்றிருக்கமாட்டார்கள் என்றே தோன்றுகிறது. ஏனெனில், ஓராண்டு முடிந்த பின்னரே, நான் இன்னும் ஆஸ்திரேலியாவில் இருக்கிறேனு என்றும், ‘ஆம்’ என்றால் ஆஸ்திரேலியாவில் என்னுடைய முகவரி என்ன என்றும் சிட்னியிலுள்ள இந்திய வர்த்தகக் கமிஷனர் வாயிலாக ஆஸ்திரேலிய அரசியலார் என்னைக் கேட்டிருந்தனர்.

சுங்கச் சோதனை

விற்பனைக்குப் பயன்படும் பொருள்கள் என்னிடம் ஒன்றும் இல்லை என்று முறைப்படி ஓர் உறுதிமொழி மட்டும் வாங்கிக்கொண்டு, பெட்டிகளைக்கூடத் திறவாமல், சுங்க அலுவலாளர் என்னை விடுவித்தார்.

ஆஸ்திரேலியாவைக் காணவேண்டுமென்ற எனது பன்னெடுநாள் விருப்பம் நிறைவேறியது. வெள்ளை ஆஸ்திரேலியா என்ற அச்சத்தால் பல மாதங்களாக முன்னேற்பாடுகள் செய்ததெல்லாம் வீண் எனக் கருதினேன். ஆசி* நண்பர்களோடு யானும் உரிமையுடன் விமான நிலையத்தை விட்டு நகருக்குள் சென்றேன்.

—x—

4. சிட்னி நகரம்

சிட்னி விமான நிலையத்தை விட்டு நாங்கள் வெளியே வந்தபோது பிற்பகல் 5-45 மணியிருக்கும். அப்போது வெப்பம் 95 டிகிரி இருந்தது. கதிரவனின் கொடுமையால் அன்று இருவர் உயிரிழந்தனரென்று மறுநாள் செய்தித் தாளில் படித்தேன். இவ்வளவு மிகுதியான வெப்பத்தை நான் பார்த்துப் பல மாதங்களாகியிருந்தன. நியூயார்க்கில் நவம்பர் மாதத்தில் பிற்பகல் 4-30 மணிக்கே இருட்டிவிடும். அங்கிருந்து வந்த எனக்கு ஆஸ்திரேலிய வெப்பம் தாங்க முடியாததாகத் தோன்றியது.

ஹோட்டலுக்குப் பயணம்

10 மைல் தொலைவிலுள்ள (யான் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்த) ஹோட்டலுக்குச் சிறிது நேரத்தில் காரில் புறப்பட்டோம். சென்னையின் சிறந்த கிரிக்கட் ஆட்டக்காரரான **திரு. ரெங்காச்சாரி**யின் நலனையும், இந்தியக் கிரிக்கட் பற்றிய கடைசிச்

* ஆஸ்திரேலியா என்பதைச் சுருக்கமாக ஆசி (Aussie) என்று கூறுவதுண்டு.

செய்திகளையும் நண்பர் வில்சன் அப்போதே கேட்கத் தொடங்கிவிட்டார். கல்வி, கலை, விளையாட்டுப் போன்ற துறைகளிலும் வியாபாரிக்கு ஆழ்ந்த அறிவும் அக்கறையும் இருக்க முடியும் என்பதை யான் அமெரிக்காவுக்குப் போனபின்புதான் உணர்ந்தேன். இதைப் போன்ற பல குணச்சிறப்புகள் அமெரிக்கருக்கும் ஆசிகளுக்கும் பொதுவானவை.

விமான நிலையத்திலிருந்து சிட்னி நகருக்குச் செல்லும் வழியில், ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க் நகரிற்போல பாழடைந்த கட்டிடங்களையோ, சுவிட்சர்லந்திலுள்ள சூரிக் நகரிற்போல இயற்கை அழகையோ, அமெரிக்காவிலுள்ள சான்பிரான்சிஸ்கோவிற்போலப் பல இனத்தவரையோ நான் அங்கே காணவில்லை. வருங்காலத்தில் உலகில் ஒரு முன்னணி நாடாக விளங்குவதற்கு இன்றியமையாத பல தொழிற்சாலைகள் அமைக்கப்படுவதையே நான் அங்கே கண்டேன்.

புதிய கார் வெள்ளோட்டம்

அன்று ஆஸ்திரேலியாவுக்கு மிக முக்கியமான நாளென்றும், முழுமையும் ஆஸ்திரேலியாவிலேயே செய்யப்பட்ட ஹோல்டன் [1] என்னும் மோட்டார் கார்கள் ஆஸ்திரேலியாவெங்கும் அன்றுதான் வெள்ளோட்டம் விடப்பட்டன என்றும் நண்பர்கள் பெருமையுடன் கூறினர். ஆஸ்திரேலியாவில் ஒவ்வொரு நான்கு பேரிலும் ஒருவர் கார் உடையவரென்றும்

1. இப்போது ஆஸ்திரேலியாவில் ஆண்டுக்கு 20,000 ஹோல்டன் கார்கள் செய்யப்படுகின்றன.

அன்று கேள்விப்பட்டேன். தோட்டக்காரனும் தன் காரிலேயே வேலைக்கு வரும் காட்சியைச் சில நாட்களில் கண்டேன். ஐந்து கோடி மக்களுள்ள சென்னை இராஜ்ஜியத்தில் 24,000 கார்கள் மட்டுமே இருப்பது குறிப்பிடத்தக்கது. லாரிகளையும் பஸ்களையும் கணக்கிட்டால் ஆஸ்திரேலியாவில் நான்கு லட்சமும், நமது இராஜ்ஜியத்தில் 15,000மும் இருக்கின்றன.

வாகனங்களை மெல்ல ஓட்டினால் விபத்துகள் குறைவாக ஏற்படும். இதற்காக ஹாலந்தில் டிரைவர் இருக்கும் இடத்துக்கு முன்னால், அவருடைய மனைவி மக்களின் படம் மாட்டப்பெற்று, அப்படத்தின்கீழ் "**எங்களை நினைத்துக் கொள், கவனமாக ஓட்டு**" என்று எழுதப்பட்டிருக்குமாம். மிகுதியான வாகனங்களுள்ள ஆஸ்திரேலியாவில் இந்த முறையைப் பின்பற்றலாமென்று, அங்கே குடியேறியுள்ள என்னுடைய டச்சு நண்பர் ஒருவர் என்னிடம் கூறினார்.

ஹோட்டல்கள்

ஆஸ்திரேலிய நகரங்களில் பெரிய ஹோட்டல்களும் ஒரு சிலர் மட்டுமே தங்குவதற்குரிய சிறு விடுதிகளும் உண்டு. பெரும்பாலான மக்கள் நகரங்களிலேயே வாழ்வதாலும், குடியேறவும் பிரயாணம் செய்யவும் வெளி நாடுகளிலிருந்து பலர் வருவதாலும் ஆஸ்திரேலிய ஹோட்டல்களிலும் இடம் கிடைப்பது மிக அரிதாயுள்ளது. என்னுடைய பிரயாணத் திட்டம் சில மாதங்களுக்கு முன்பே உருவாகிவிட்டதால், அங்குள்ள நண்பர்கள், நான் செல்லவிருந்த நகரங்களிலெல்லாம் ஹோட்டல்களில் தங்குவதற்கு இடவசதி ஏற்பாடு செய்

திருந்தனர். பிரயாண முடிவில் நான் ஆஸ்திரேலியாவை விட்டுப் புறப்பட்ட கப்பலின் பயணம் சில நாட்கள் தாமதித்தபோது, பெர்த் நகரிலுள்ள ஹோட்டல்களில் ஒன்றிலேனும் இடம் கிடைக்காததால், அந் நகரத்துக்கு அணித்தாயுள்ள பிரீமாண்டில் துறைமுகத்தில் கப்பலிலேயே சில நாட்கள் தங்கினேன்.

ஆஸ்திரேலிய ஹோட்டல்கள் அனைத்தையுமே குடிவகைகளை உற்பத்தி செய்யும் குழுவினர் நடத்துகிறார்கள். அவர்களுடைய பொருள்கள் ஹோட்டல்களிலேயே மிகுதியாக விற்பது இதற்குக் காரணமாகும். சிட்னியில் சைவ உணவு மட்டும் கிடைக்கும் இடம் **அடையாறு லாட்ஜ்** என்பது; இது சென்னை அடையாற்றிலுள்ள பிரம்மஞான சபையின் அஸ்திரேலியக் கிளையால் நடத்தப்படுகிறது. சீனர் நடத்தும் பல உணவு விடுதிகளும் ஆஸ்திரேலியாவின் மூலை முடுக்குகளிலெல்லாம் உள்ளன. பிறருடன் எளிதில் பழகும் இயல்புள்ள அமெரிக்கர், போர்க்காலத்தில் ஆஸ்திரேலியாவுக்கு வந்து இந்த உணவுச் சாலைகளுக்குப் பேராதரவு தந்தனர். ஆசிகளும் அதன் பின்னர் அவ்வாறு செய்யத் தொடங்கினர். சிட்னியில் நான் தங்கிய இடம் **ஆஸ்திரேலியா ஹோட்டல்.** இது ஆஸ்திரேலியாவிலேயே சிறந்த உணவுச் சாலை. ஆஸ்திரேலிய ஹோட்டல்கள் அனைத்துமே இப்போது அமெரிக்க வணிக முறைகளைப் பின்பற்றி வருகின்றன.

குடியேற்ற வரலாறு

சிட்னி நகரச் சிறப்பை அறிவதற்கு முன், அங்கே பிரிட்டிஷார் குடியேறிய வரலாற்றைக் கவனிப்போம்.

1780-ஆம் ஆண்டு அளவில் (பிரிட்டனிடமிருந்து) அமெரிக்கர் சுதந்தரப் பிரகடனம் செய்தனர். அதன் விளைவாகப் பிரிட்டிஷார் தம் நாட்டுக் குற்றவாளிகளை அமெரிக்காவுக்கு அனுப்பும் உரிமையை இழந்தனர். பிரிட்டிஷ் சிறைகளில் இட நெருக்கடி ஏற்பட்டது. இதைத் தடுக்க, நடைமுறைச் செலவு குறைவாக உள்ளதும், நெடுந் தொலைவில் அமைந்ததுமான ஓரிடத்தைப் பிரிட்டிஷார் தேடினர். ஆஸ்திரேலியா தக்க இடமெனக் கருதியதால், 1788-ல் பிரிட்டிஷார் அதைத் தம்முடையதாக ஆக்கிக்கொண்டு, கைதிகளை அங்கே அனுப்பினர். தங்கம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் கைதிகள் நன்னிலை அடைந்து உழவுத் தொழிலை மேற்கொண்டனர்; ஆஸ்திரேலியாவைச் செழிப்படையச் செய்தனர்; தாமும் பெரும் செல்வராயினர். ஆஸ்திரேலியாவில் நிருவாகப் பதவிகளில் இருந்தவர்களின் உறவினர் முதலில் அங்கே குடியேறத் தொடங்கினர். செழிப்பான நாடு என்று கேள்விப்பட்ட ஏனைய பிரிட்டிஷாரும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றனர். இதைப் போன்ற குடியேற்றம் இன்று அந்தமான் தீவில் நிலவி வருவதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு குடியேறிய பிரிட்டிஷார், சிட்னியில் தான் மிகுதியாக வந்து சேர்ந்தார்கள். இவர்கள் உலகின் மற்றப் பகுதிகளுடன் தொடர்பின்றி வாழ நேர்ந்தது. இரண்டாம் உலகப்போர் தொடங்கும் வரையிலும், இரங்கூனில் வாழும் தமிழர் சென்னையிலிருந்து வரும் கப்பலைத் திங்கட்கிழமை தோறும் எதிர்நோக்கியது போலவே, ஆஸ்திரேலியர் பிரிட்டனி

லிருந்து வரும் ஒவ்வொரு கப்பலையும் எதிர்பார்த்து ஏங்கினர்.

ஆஸ்திரேலியாவில் பிரிட்டிஷ் ஆட்சி சிட்னியில் தான் தொடங்கிற்று. அதற்கு அடிகோலியவர் **கவர்னர் மக்வாரி** என்பவர். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு அடிகோலிய கிளைவின் நினைவாகக் கல்கத்தாவில் **கிளைவ் சாலையும், திருச்சிராப்பள்ளியில் கிளைவ்ஸ் ஹவுசும்** ஏற்படுத்தப்பட்டன. சிங்கப்பூரில் பிரிட்டிஷ் ஆட்சியை ஏற்படுத்திய **ராபிள்ஸ்** பெயரால் பல இடங்களும் நிலையங்களும் அந்த நகரத்தில் நிறுவப்பட்டுள்ளன. இவை போலவே, மக்வாரியின் நினைவாகச் சாலையும், சிலையும், ஓவிய மண்டபமும் வேறு சில கட்டிடங்களும் சிட்னி நகரில் உள்ளன.

நகரச் சிறப்பு

மேற்கூறிய சூழ்நிலையில் தோன்றிய சிட்னி இன்று ஆஸ்திரேலியாவின் முதல் நகரமாகவும் மிகப் பெரிய வியாபார ஸ்தலமாகவும் விளங்குகிறது. சிட்னியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் குடியேறிய பிரிட்டிஷாரில் பலர் பிரிட்டனின் ஒரு வட்டாரமாகிய வேல்ஸ் மக்களே, தாம் குடியேறிய பகுதிக்குத் "தென்கோடியில் கண்ட புதிய வேல்ஸ்" என்னும் பொருள்பட **நியூ சௌத் வேல்ஸ்** என்று இவர்கள் பெயரிட்டனர். ஆஸ்திரேலிய இராஜ்ஜியங்களிலே மிக முக்கியமானதும் பொருள்வளம் நிறைந்ததும் நியூ சௌத் வேல்ஸ்தான். இதன் தலைநகராக விளங்கும் பெருமையுடைய சிட்னி உலகின் எழில் மிக்க நகரங்களுள் ஒன்று. சென்னை

நகரில் போல இங்கும் 17 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். மேட்டுநிரையும் பள்ளத்தூரையும் போலவே மேடும் பள்ளமுமான பூமியில் சிட்னி அமைந்திருக்கிறது. நேரான சாலைகள், கண்ணைக் கவரும் பூங்காக்கள், எண்ணிக்கையில் அடங்காத மரங்கள், கிரிக்கட் மைதானங்கள், பல மாடிகளுள்ள கட்டிடங்கள், மிகப் பெரியதொரு நகரமண்டபம், பாராளுமன்றம், உலகிலேயே பெரிய தொழிற் கல்லூரி, 32 சினிமாத் தியேட்டர்கள், செல்வம் பொழியும் கடைகள், கிறிஸ்மஸ் பண்டிகைக்காகப் பொருள்கள் வாங்க அக் கடைகளை மக்கள் மொய்க்கும் காட்சிகள், மங்கையர் கண்டக்டராக உள்ள சுத்தமான டிராம்கள், மாடியுள்ள வசதியான பஸ்கள், கட்டுப்பாட்டுக்கு அடங்கிய மக்களின் சுறுசுறுப்பு இவற்றைத் தெற்குக் கடல்களின் உல்லாச நகரமான சிட்னியில் நான் கண்டேன்.

சிட்னித் துறைமுகம் உலகிலேயே மிக அழகிய இயற்கைத் துறைமுகமாகும். வீட்டிலேயே நீராட விரும்புவோரையும் கடலில் நீராட வசீகரித்து அழைக்கும் அழகிய கடற்கரையில் அது அமைந்திருக்கிறது. சிட்னியில் கடற்கரையோரத்தில் குடியிருப்பவர்கள் வீடு கட்டுமுன்னர் பெரிய மதில்களைக் கடலுக்கு அரணாக எழுப்பிக் கொள்ளுகின்றனர். இவ்வாறு மதில்களை எழுப்பாவிட்டால், திடீரென்று ஓர் இரவில் வீட்டுத் திண்ணையில் கடலைப் பார்க்கலாமாம். கடலில் உள்ள ஷார்க் என்னும் கொடிய மீன்களால் ஏற்படும் இடையூற்றைத் தடுக்கும் நீந்து குளங்களும் ஆஸ்திரேலியாவில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

உயிரினக் கூடம்

உலகிற் சிறந்த உயிரினக்கூடம் (Zoo) ஒன்று சிட்னியின் எல்லையில் ஒரு சிறு தீவில் அமைக்கப்பட்டுள்ள 'தோரங்கப் பார்க்' என்னும் பூங்காவனத்தில் இருக்கிறது. இங்கேதான் யான் கங்கருக்களைப் பார்க்க நேர்ந்தது. கங்கரு ஆறு அடி உயரமுள்ளது; ஒரே சமயத்தில் 30 அடி தாவக்கூடியது. சிவப்பு, சாம்பல் நிறங்களிலும் கங்கருக்கள் உள்ளன. மனிதன், குரங்கு, மான், நரி, கழுதை இவற்றின் கலப்புப்போலவே கங்கரு காட்சி தருகின்றது. இந்தியாவுக்கு யானையும், பர்மாவுக்கு மயிலும், மலேயாவுக்குப் புலியும், இந்தோனேஷியாவுக்குக் கருடனும் போலவே ஆஸ்திரேலியாவுக்கு கங்கரு முக்கியமான உயிரினம்.

உல்லாசப் பிரயாணம்

தோரங்கப் பார்க்குக்கும், 30 மைல் சுற்றளவுக்குள் உள்ள கரையோரத் தீவுகளுக்கும் விடுமுறை நாட்கள் தோறும் சிட்னி மக்கள் செல்லுகின்றனர். இந்த உல்லாசப் பிரயாணங்களுக்கென்று ஒலிபரப்புக் கருவிகளுடன் கூடிய வசதியான சிறு கப்பல்கள் சிட்னித் துறைமுகத்திலிருந்து புறப்படுகின்றன. இவற்றில் இன்னிசை நிகழ்ச்சிகள் நடந்தவண்ணமாக இருக்கும். ஒரு நாள் இந்த இயந்திர மரக்கலங்களில் (Motor and Steam Boats) இரண்டு மணி நேரம் அலைந்து திரிந்துவிட்டு சிட்னி துறைமுகத்தில் உலகப் புகழ்பெற்ற 'சர்குலர் குவே' (Circular Quay) என்ற இடத்தில் நான் களைப்புடன் வந்து இறங்கினேன். ஒரு கடையில் இருந்த

மாம்பழம் என் கண்ணில் படவே, 8 பென்ஸ்[1] (ஆறு அணு) கொடுத்து வாங்கி, அந்த மாம்பழத்தைச் சிறு துண்டுகளாக அறுத்துத் தரும்படி கடைக்காரனைக் கேட்டேன்.

"ஏ அசடே'[2] உள்ளே கொட்டை இருக்கிறது. எப்படி அப்பா அறுக்க முடியும்? முன்பின் மாம்பழம் சாப்பிட்டிருந்தால்தானே உனக்குத் தெரியும்! சரி கடித்துச் சாப்பிடு" என்று கடைக்காரன் கூறினான். மாம்பழத்தை நானே அறுத்துக் காட்டினேன். இருபது ஆண்டுகளுக்குமுன் ஆகாய விமானத்தை நம் கிராம மக்கள் பார்த்த அதே ஆச்சரியக் கண்களோடு என் செயலைக் கண்டு என்னைச் சுற்றிலும் கூடிவிட்டனர் ஐம்பது ஆஸ்திரேலியர். மூத்தோர் வாக்கும் முதுநெல்லிக்கனியும்

---

1 இந்நூலில் யான் குறிப்பிட்டிருப்பதெல்லாம் ஆஸ்திரேலிய நாணயமேயாகும். பிரிட்டனில்போலவே ஆஸ்திரேலியாவிலும் ஒரு பவுனுக்கு 20 ஷில்லிங்கும், ஒரு ஷில்லிங்குக்கு 12 பென்சும் உண்டு. ஆனால் பவுன் என்பதெல்லாம் ஒரே வித நாணயமன்று. இந்தியா, இலங்கை, பர்மா, பாக்கிஸ்தான் ஆகிய நாடுகளிலெல்லாம் ரூபாய் என்ற நாணயம் வழங்குகிறது. ஆனால் இலங்கை ரூபாய் இந்தியாவில் செல்லாது. பாக்கிஸ்தான் ரூபாயின் மதிப்பும் இந்திய ரூபாயின் மதிப்பும் வேறு வேறு. இவைபோல, பிரிட்டிஷ் ஆஸ்திரேலியப் பவுன்கள் இருக்கின்றன. 4 பிரிட்டிஷ் பவுனுக்கு 5 ஆஸ்திரேலியப் பவுன் சமமானது. *1950* ஆகஸ்டில் நிலவும் நாணய மாற்றுப்படி ஓர் ஆஸ்திரேலியப் பவுன் இந்திய ரூ. *10-12-0* க்குச் சமம் ஆகும்.

2 அசடு (Bloke) என்பது ஆஸ்திரேலியாவில் ஓர் அன்புச் சொல்.

போல, ஆஸ்திரேலிய மாம்பழமும், முன் கசக்கும் பின் இனிக்கும் என்பதை அன்று உணர்ந்தேன்.

இந்த நிகழ்ச்சி மற்றொரு நிகழ்ச்சியை எனக்கு நினைவுறுத்தியது. பர்மாவில் போர்க்காலத்தில் ஜப்பானியப் படைவீரர் இளநீர் பறிக்க விரும்பினராம். ஆனால், மரம் ஏறத் தெரியாததால், தென்னைமரங்களையே ஆயுதங்களால் வெட்டி, மரங்கள் கீழே விழுந்தபின் இளநீரை அவர்கள் பறித்து நீரைப் பருகினராம். மேலும், இனிப்பையே அருந்தாத ஜப்பானியர் பர்மிய மாம்பழத்தை உண்டதும் பர்மாவிலுள்ள எல்லாப் பழங்களுமே இனிப்புச் சுவையுடையன என்று நினைத்துக் கண்ட பழங்களைத் தின்று ஏமாற்ற மடைந்தனராம்.

சில குறிப்புக்கள்

மொழி, நாகரிகம், வாழ்க்கைமுறை ஆகியவற்றால் ஆஸ்திரேலியா ஹோட்டலின் சூழ்நிலை லண்டனை ஒத்திருந்தபோதிலும், செக்குகளை மாற்றியபோது ஆஸ்திரேலிய நாணயங்களே கிடைத்தன. ஆஸ்திரேலியா எனக்கு இன்னும் ஒரு புதிராகவே இருந்தது. புதிய நாட்டில் புதிய இனத்தவரை அவ்வளவு எளிதில் புரிந்துகொண்டுவிட முடியுமா? விஞ்ஞான வளர்ச்சி, மொழி, வெப்பம் இவற்றால் முறையே அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா இவற்றின் கதம்பம்போல் ஆஸ்திரேலியா எனக்குத் தோன்றிற்று. தோற்றம் என்ன? உண்மையும் அதுதான்.

ஆப்பிரிக்கா, ஆசியா, அமெரிக்கா, ஐரோப்பா ஆஸ்திரேலியா ஆகிய ஐந்து பெரிய நிலப்பரப்புகளும்,

முறையே ஒரு பெண்ணின் பெதும்பை, மங்கை, மடந்தை, தெரிவை, பேரிளம்பெண் என்ற, ஐந்து பருவங்களைப் போன்று இருப்பதாகவும், எனவே ஆஸ்திரேலியாவைப்பற்றி அறிந்துகொள்வதில் பலருக்கு ஆவல் இல்லையென்றும் வேடிக்கையாகச் சொல்லுவதுண்டு. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலக விவகாரங்களில் ஆஸ்திரேலியா மிக முக்கியமான நாடாக விளங்குகின்றது. ஆகையால், ஆஸ்திரேலிய மக்களைப்பற்றி விரிவாக அறிதல் நமக்கு இன்றியமையாததாகும். அவர்களுடைய பழக்க வழக்கங்களை அடுத்த கட்டுரையில் ஆராய்வோம்.

—x—

5. பழக்க வழக்கங்கள்

மக்களின் பழக்கவழக்கங்கள் அவர்கள் வாழும் இடத்தில் நிலவும் தட்ப வெப்ப நிலையையும், அவர்கள் உட்கொள்ளும் உணவையும் பொறுத்தவை. கால நிலையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது பெரும்பாலான மாதங்களில் சிட்னி, மெல்பர்ன், பெர்த் நகரங்கள் முறையே கோவை, பெங்களூர், சென்னை ஆகிய நகரங்களை ஒத்திருக்கின்றன. எனவே இந்தியாவில் வேனிற் காலம், முதுவேனிற் காலம் என்ற இருவகைக் காலநிலைகளே உண்டு என்று சிலர் கேலியாகச் சொல்வது ஆஸ்திரேலியாவுக்கும் பொருந்தும்.

ஆஸ்திரேலியர் நம்மைப்போலச் சூரிய நமஸ்காரம் செய்யாவிட்டாலும், நிச்சயமாகச் சூரியன்மீது மிக்க

விருப்பமுடையவர்கள். சூரியன் விளங்காவிட்டால், பகல் முழுவதும் எப்படிக் கிரிக்கட் ஆட முடியும்? நாம் சூரியனை வணங்குவதற்கும் ஆஸ்திரேலியர் சூரிய வெப்பத்தில் கிரிக்கட் ஆடுவதற்கும் அடிப்படைக் காரணம் ஒன்ருகத்தான் இருக்கவேண்டும். ஞாயிறு ஒளி உடம்பின்மேல் விழுவதால், 'D' என்னும் உயிர்சத்துக் கிடைப்பதே இதற்குக் காரணமாகும். நாகரிகத்தின் பெயராலும் பகுத்தறிவுக் கொள்கையாலும் சூரிய வணக்கம் செய்யாதவர்கள் கிரிக்கட்டாவது ஆடலாம்!

தனி இனம்

ஆஸ்திரேலியாவில் குடியேறிய அனைவரும் பிரிட்டனிலிருந்து வந்தவர்களே. ஆனுல் இந்தத் தலைமுறையினரில் பெரும்பாலோர் பிரிட்டனில் இருந்ததில்லை. 11,000 மைல்களுக்கு அப்பால் வாழ்வதால், ஆஸ்திரேலியர் தனி இனத்தவராகிவிட்டனர்.

உயிரினங்களின்மீது பற்று

அமெரிக்கரைப்போல மிகுதியான இயந்திரங்களைப் பயன்படுத்தித் தாமும் ஓர் இயந்திரமாகிவிடாமல், விவசாயத்தில் கவனம் செலுத்துவதாலும் கால்நடைகளோடு பழகுவதாலும் ஆஸ்திரேலியர் மனிதத்தன்மை நிரம்பியவராயிருக்கின்றனர். 400 வகை உயரினங்கள் தம் நாட்டில் இருப்பதைப்பற்றி அவர்கள் பெருமை பாராட்டுகிருர்கள். பல நிறக்கிளிகளும் **கூக்காபாரா** என்னும் சிரிக்கும் கழுதையும், குரலை எதிரொலி செய்யும் **லயர்** என்னும் பறவையும் ஆஸ்திரேலியாவில் உண்டு. நடு ஆஸ்திரேலியாவில் போக்கு வரவுக்குக்

குதிரைகள் மிகவும் பயன்படுகின்றன. ஆடுமாடுகள் அந்த நாட்டின் பெருஞ் செல்வமாயிருப்பதைப் பிறிதோரிடத்தில் விளக்கிக் கூறுவோம். உயிரினங்களின் படங்களைத் தபால் ஸ்டாம்புகளில் ஆசிகள் அச்சிடுகின்றனர். முக்கியமாக, நாய்கள்மீது ஆஸ்திரேலியருக்குத் தனிப் பிரியம் உண்டு. இரண்டு மணி நேரம் நாய் எசமானைப் பிரிந்து திரும்பி வராவிட்டால், அதன் படத்தைப் பிற்பகல் பத்திரிகையில் பிரசுரித்து விடுவர்! நாய் திரும்பி வந்துவிட்டால் அடுத்த பதிப்பில் அதையும் விளம்பரம் செய்து விடுவார்கள்!

இயற்கை விநோதங்கள்

உலகில் வேறு எங்கும் இல்லாத மரம், செடி கொடிகள் ஆஸ்திரேலியாவில் உண்டு. நீலகிரித் தைலம் தரும் மரங்கள் அங்கே மிகுதி. இவற்றுள் சில 300 அடி உயரமுள்ளவை. இம்மரங்களிலிருந்து இலை உதிருவது கிடையாது. அந்த நாட்டில் பூக்கும் பல வகைப் பூக்களும் பல்லாண்டுகள்வரை வாடுவதில்லை. இயற்கைக் காட்சிகளைக் கண்டு இன்புறுவோர் சங்கங்களும், குழுவாக நடந்து செல்லுவோர் சங்கங்களும் அங்கே உண்டு. அமைதிக்காகவும் ஓய்வுக்காகவும் மக்கள் காடுகளுக்குச் செல்லுவர். அவர்கள் காடுகள் என்ற பொருளில் சிறிய தோப்புகளையும் அடர்ந்த புதர்களையும் குறிப்பிடுவர். தோட்டமில்லாத வீடே அந்த நாட்டில் இல்லை எனலாம். மாடியில்லாத சிறிய வீடுகளில் தனித்தனியே குடியிருப்பது ஆசிகளின் இயல்பு. சுவர்களில் பழுப்பு, சாக்லட் வர்ணங்களை அடிப்பதில் அவர்களுக்கு விருப்பம் அதிகம். பொது

வாகக் கூறுமிடத்து நம் கிராம மக்களைப்போல ஆசிகளும் நற் பண்புகள் நிரம்பியவர்கள்.

உடை

வெப்பமான காலநிலை இருந்தபோதிலும், ஆஸ்திரேலியர் வைபவங்களின் போதும், விழாக்காலத்திலும் மேனாடுகளில் வாழும் நம் இனத்தவரைப் போலவே உடை உடுத்துவர். மக்கள் நம் நாட்டுடையே உடுத்த வேண்டுமென்பது உலகிற் பலரின் கருத்து. வெளிநாடுகளுக்குச் செல்லும் இந்தியர், ஓரிருவர் நீங்கலாக, ஆங்கிலம் தெரிந்தவராகவும், ஆங்கில உடை உடுத்துபவராகவும் இருப்பதால், இந்தியர் அனைவருமே ஆங்கிலம் பேசுவோர் என்றும், ஆங்கில உடை உடுத்துவோர் என்றும் பிறநாட்டார் கருதுகின்றனர். வெளி நாடுகளில் இந்திய உடையை உடுத்துவதற்கு நாம் ஒவ்வொருவரும் **மகாத்மா காந்தியாகவோ ஜி. டி. நாயுடுவாகவோ** இல்லை. ஆனால் நம் நாட்டிலாவது, நாம் நம் உடையை அணியலாம். அதுவும் இயலாவிட்டால், வைபவங்களின் போதாவது நம் உடைகளைத் தரிக்கலாம். திருமணத்தன்று மணமகன் பிறநாட்டு உடையில் காட்சி அளிக்கும் சென்னை நகர அலங்கோலத்தை நான் ஆஸ்திரேலியாவில் காணவில்லை. அங்கு ஆடவரைவிட, பெண்டிரே நல்ல உடை அணிகின்றனர். ஆடவரில் நல்ல உடை உடுப்போர் தொழிலாளரே ; அவர்களுடைய முதல்வாரச் சம்பளம்* துணிக் கடைக்குத்தான் போய்ச் சேருகிறது.

* ஆஸ்திரேலியாவில் மாதச் சம்பளம் கிடையாது. ஒவ்வொரு வார இறுதியிலும் சம்பளம் கொடுக்கப்படுகிறது.

உணவு முறை

பிரிட்டிஷாரைப் போலவே, ஆசிகளும் பகட்டான வாழ்வில் விருப்புடையவர்; விருந்துகளையும் நடனங்களையும் நாள்தோறும் நிகழ்த்துவர்; ஆண்டுதோறும் தலைக்குச் சராசரியில் 203 பவுண்டு கோதுமையும், 212 பவுண்டு இறைச்சியும், 400 பவுண்டு பழங்களும், மிகுதியான உருளைக்கிழங்கும் காய்கறியும் முட்டையும் உட்கொள்ளுவர். காரமான உற்சாக மூட்டும் குடிவகைகளைத் தவிர, தேயிலையையும் ஆஸ்திரேலியர் மிகுதியாக அருந்துவர். இதற்குத் துணையாக, தேயிலையின் விலையில் ஒரு பகுதியைத் தாம் ஏற்றுக்கொண்டு, மலிவான விலைக்கு அரசியலார் அதை மக்களுக்கு விற்றுவருகின்றனர்.

பாலும் தேனும்

வளம் நிறைந்த நாட்டைப் "பாலும் தேனும் ஓடும் நாடு" என்று கவிஞர் வருணிப்பதுண்டு. உண்மையாகவே, இச் சிறப்பையுடைய நாடு ஆஸ்திரேலியா. பால் தொழிலைப்பற்றி விவசாயம் என்ற கட்டுரையில் விரிவாக எழுதியுள்ளேன். தேன் உற்பத்தியைப்பற்றி மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன். பழங்களிலும் கேக்குகளிலும் பிஸ்கோத்துகளிலும் வேறு பலவகை உணவுகளிலும் ஆசிகள் தேனைச் சேர்க்கிறார்கள். தேனைப் பயன்படுத்தி என்னென்ன உணவுகள் தயாரிக்கலாம் என்ற விவரங்களைத் தேன் உற்பத்தியாளர் குழுவினர் இலவசமாக வெளியிடுகின்றனர். ஆறு மாதத்திற்கு உட்பட்ட குழந்தைகளுக்குத் தேன் அளித்தால், அவர்களுடைய நிறை கூடுமென்றும் இவர்கள் உறுதி கூறு

கிறார்கள். பல்லாயிரம் டன் நிறையுள்ள தேன் ஏற்று மதியாவதால், ஆஸ்திரேலியாவுக்குப் பெரும் ஊதியம் கிடைக்கிறது. எனவே, தேனைத் தங்கத் தண்ணீர் (Liquid gold) என ஆசிகள் புனைந்துரைப்பது பொருத்தமானது.

உணவு—அன்பளிப்பு

ஆசிகளின் தேசீய உணவு செம்மறியாட்டு இறைச்சி. எல்லாவிதமான உணவுப் பொருள்களும் அங்கே தங்கு தடையின்றிக் கிடைக்கின்றன. பிரிட்டனுடைய உணவுப் பற்றுக்குறையைத் தீர்ப்பதற்குத் துணையாக அந்நாட்டுக்கு ஏற்றுமதியை மிகுதிபடுத்த, போர்க் காலத்தில் மட்டும் ஆஸ்திரேலியாவில் ஒரு சில பொருள்கள் பங்கீடு செய்யப்பட்டன ; வேறு சில பொருள்கள் கட்டுப்படுத்தப்பட்டன. பிரிட்டனிலுள்ளவர்களுக்கு ஆஸ்திரேலியர் சிறு அளவுகளில் தபால்மூலம் அன்பளிப்பாக உணவு அனுப்பும் திட்டம் வகுக்கப்பட்டது. பர்மா, இந்தோசைனா, சயாம் ஆகிய நாடுகளிலுள்ள இந்தியர் நம் நாட்டுக்கு இவ்வாறு உணவு அனுப்ப அனுமதிக்கப்பட்டிருந்தால், நமது உணவுநிலை ஓரளவு திருந்தியிருக்கும்.

மொழி

அமெரிக்காவைப் போலவே ஆஸ்திரேலியாவிலும் வழங்கும் ஒரே மொழி ஆங்கிலமாகும். பிரிட்டிஷ் ஆட்சி முடிந்துவிட்டதால், ஆங்கில மொழி ஞானமே இனி நமக்குத் தேவையில்லை என்ற அபாயகரமான கருத்தை நம் நாட்டினர் சிலர் பரப்பி வருகின்றனர். ஆங்கிலம்

உலகமொழி என்பதையும் பிரிட்டிஷாரின் தனிச் சொத்து அன்று என்பதையும் இங்கே நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஆஸ்திரேலியரின் ஆங்கிலத்துக்கும் பிரிட்டிஷ் வானொலி ஒலிபரப்பும் ஆங்கிலத்துக்கும் சில வேறுபாடுகள் உண்டு. இவை திருப்பதியில் வழங்கும் தமிழுக்கும் யாழ்ப்பாணத்தில் வழங்கும் தமிழுக்கும் உள்ள வேறுபாடுகளைப் போன்றவை. உழவன், போலீஸ்காரன், ரேடியோ, காடு என்பவற்றுக்கு முறையே, **காக்கி, ஜான், வயர்லஸ், புஸ்,** என்று ஆசிகள் கூறுவர். உச்சரிப்பிலும் வேறுபாடு உண்டு. சனிக்கிழமை முற்பகல் 11-30க்குச் சிட்னியில் பரபரப்பாகத் திரியும் யாரைக் கேட்டாலும் "**ரைஸ்க்குப்** போகிறேன்" என்று சொல்லுவார்கள். சிட்னியின் கிண்டியாகிய ராண்டுவிக்கில் நடைபெறும் குதிரைப் பந்தய **ரேசுக்குச்** செல்வதையே அவர்கள் அப்படிக் கூறுவர்.

கலைப்பற்று

ஆசிகள் கலைப் பிரியர்கள். ஆனால் அவர்களுடைய கலை இன்னும் தொடக்க நிலையிலேயே இருக்கிறது. இப்போது அவர்கள் சுவைப்பவை ரஷ்ய நடனம், ஹாலிவுட் சினிமாப்படங்கள், காங்கோ இசை, ஷேக்ஸ்பியரின் நூல்கள் ஆகியவையே. அஜந்தா அல்லது சித்தன்ன வாசல் ஓவியங்கள் போன்றவை ஆஸ்திரேலியாவில் இல்லை. கான்பராவில் நான் பார்வையிட்ட கட்டிடங்கள் அமெரிக்கச் சிற்பக் கலையின் சின்னங்களேயாகும். கடந்த சில ஆண்டுகளில்தான் ஓவியக்கலையும் சிற்பக்கலையும் முன்னேறியுள்ளன. புதிதாய்க் குடியேறி

யுள்ள சில ஆயிரம் யூதர் 'பிளாக் மார்க்கட்' உள் படப் பல புதிய கலைகளை இந்நாட்டில் பரப்பி வரு கிறார்கள்.

ஆஸ்திரேலியருள் கேலிச் சித்திரம் வரைவோர் பலர் உண்டு. ஆழிசூழ் உலகமெல்லாம் புகழ்பெற்ற **டேவிட் லோ** ஓர் ஆஸ்திரேலியரே. **கார்டன் கர்ரி** என்ப வர் மற்றொருவர். இவர் 15 **வினாடிகளில்** ஒருவருடைய படத்தை வரைந்து விடுவாராம். கேலிச் சித்திரங்கள் தீட்டி லண்டன் **பஞ்ச்** பத்திரிகையைச் சிறப்பித்த காலஞ் சென்ற **வில் டைசன்** என்பவரும் ஆஸ்திரேலியரே யாவார்.

நாடகம்

மெல்பர்ன் நகரிலுள்ள காமிடி தியேட்டரில் சில நாடகங்களைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஆஸ்திரேலியாவின் ஏனைய பெரு நகரங்களிலும் நாடகங்களுக்குக்கென்றே தனி மண்டபங்கள் பெருவாரி யாக உள்ளன. ஆண்டு முழுவதும் நாடகங்களைப் பார்க்க ஏராளமானவர் கூடுகின்றனர். ஆசிகளிடம் நாடகக்கலையில் ஈடுபடும் மனப்பான்மை புதிதாக ஏற்பட்டிருப்பதால், குழந்தைகள் மட்டுமே இப்போது நாடகங்களில் நடிக்கின்றனர். பிற பாத்திரங்களாக நடிப்பவர் அண்மையிலுள்ள நியூசிலந்து வாசிகளே. தக்க உடலமைப்பைப் பெறுவதற்காக நடிகைகள் சிலம்ப வித்தை பழகுகின்றனர்; இதற்கெனச் சில கழகங்கள் அங்கே இருக்கின்றன. வானொலி நிலையங் கள் தாம் ஒலி பரப்பும் நாடகங்களின் கையெழுத்துப் பிரதிகளைத் தொகுத்து நூலுருவில் வெளியிடுகின்றன.

மெல்பர்னிலும் சிட்னியிலும் ஒவ்வொன்றும் ஒரு கோடி ரூபாய்ச் செலவில் **ஸ்டேட் தியேட்டர்** அமைத்திருக்கும் ஆஸ்திரேலியருக்கும், பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வந்த நாடகக் கலைக்குத் தக்க ஆதரவு தராத தமிழ் மக்களுக்கும் என்னே வேற்றுமை !

திரைப் படம்

ஆஸ்திரேலியாவில் நாடகக் கலை சிறப்புற்று விளங்குவதற்கு ஒரு முக்கிய காரணம் அங்கே திரைப் படத் தொழில் வளர்ச்சியடையாதிருப்பதாகும். நாடகக் குழுக்களைப் புறக்கணித்துத் திரைப்படக் குழுக்களுக்கு நடிகர் சென்றுவிடுதல் அருமை. ஆஸ்திரேலியாவில் ஓராண்டுக்கு இரண்டு அல்லது மூன்று திரைப் படங்கள் தான் எடுக்கப்படுகின்றன. அண்மையில், அங்கு வெளியான படங்களுள் குறிப்பிடத்தக்கது **ஓவர்லாண்டர்ஸ்** மட்டுமே யாகும்.

நடனம்

ஆஸ்திரேலியாவில் குழு நடனம் விரைவாக வளர்ந்து வருகிறது. சென்னையில், இயல் இசை நாடக விழாக்கள் டிசம்பர் மாதத்தில் நிகழ்வது போல, மெல்பர்னில் நடன 'சீசன்' ஆண்டுதோறும் ஜூன்மாதம் மூன்றாவது வாரத்தில் தொடங்குகிறது. **மிஸ் லேட்புட்** என்ற ஆஸ்திரேலியப் பெண் கதகளி நடனப் பயிற்சி பெற்றிருக்கிறார். அவருடைய முயற்சியால், இந்திய நடனக் குழுவினர் சிலர் ஆஸ்திரேலியாவில் சுற்றுப் பிரயாணம் செய்து தம் கலைத் திறனைக் காட்டியுள்ளனர்.

மற்றும் சில வழக்கங்கள்

ஆஸ்திரேலியாவுன் சிறந்த எழுத்தாளர்கள், சிற்பிகள், சிந்தனையாளர் ஆகியோரின் திறமையான புலமையெல்லாம் வெளிநாடுகளில்தான் ஆதரிக்கப்படுகிறது. ஆஸ்திரேலிய நிபுணர் பலர் லண்டனில் பெரிய பதவிகளை வகிக்கின்றனர். இது ஆஸ்திரேலிய நாட்டின் குறைபாடென்று சொல்லவேண்டும்.

ஆஸ்திரேலியாவில் அமைச்சராயினும் சரி, ஆண்டியாயினும் சரி, குறிப்பிட்ட சில முறைகளைப் பின்பற்றுகின்றனர். மெல்பர்னில் ஒரு கிரிக்கட் பந்தயத்துக்குப் போயிருந்தேன். அமைச்சர் சிலரும் அங்கே வந்திருந்தனர். மற்றவர்களைப்போலவே அவர்களும் க்யூ வரிசையில் பொறுமையாக நின்று தேயிலை பருகினர்.

ஆஸ்திரேலியருக்கு ஞாயிற்றுக்கிழமை மிக முக்கியமான நாள். அலுவலகங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் மட்டுமன்று; கடைகளுக்கும் ஹோட்டல்களுக்கும் பத்திரிகைகளுக்கும் தபால் தந்தி நிலையங்களுக்கும் அன்று முழு விடுமுறை நாள். பெரும்பாலான பஸ்களும் ரயில்களும் விமானங்களும் ஞாயிற்றுக்கிழமை முழு ஓய்வு அடையும். கிரிக்கட் பந்தயங்கூட ஞாயிற்றுக்கிழமை நடப்பதில்லை என்றால், மேலும் சொல்லவா வேண்டும்?

நாணயங்களுக்குப் பெயரிடுவதில் நம்மைப் போன்ற பழக்கம் ஆசிகளிடம் உண்டு. இரண்டு அணு நாணயத்தையும், நூறு ரூபாய் நோட்டையும் தமிழ் நாட்டின்

சில பகுதிகளில் முறையே 'பணம்' என்றும், 'பச்சை நோட்டு' என்றும் சொல்லுகிறோம். இவைபோலவே ஆஸ்திரேலியர் 3 பென்ஸ் நாணயம், 5 பவுன் நோட்டு, 100 பவுன் நோட்டு ஆகியவற்றை **த்ரம், பைவர், செஞ்சரி** என்று சொல்லுகிறார்கள்.

கதம்பம்

கடிதங்களில் ஸ்டாம்பு குறைத்து ஒட்டியிருந்தால், மீதத்தை இரட்டிப்பாக வசூலிப்பதற்காக ஒரு தனி ஸ்டாம்பை ஆஸ்திரேலியத் தபால் இலாகாவினர் ஒட்டுவர்.

விருந்தினர் பல நாட்கள் தங்கிவிட்டால், தமிழ் நாட்டில் சில இடங்களில் காராவடை போடுவது அல்லது கீரை சமைப்பது உண்டு. விருந்தினரைப் போகச்சொல்ல இது மறைமுகமான வேண்டுகோள். ஆஸ்திரேலியாவிலும் இதைப் போலவே 'ஸ்பாஞ்கேக்' (Sponge Cake) என்ற உணவைப் பரிமாறுவது வழக்கமாம்.

ஆஸ்திரேலியருக்கு மிகவும் விருப்பமானவை: கிரிக்கட், செங்கலாலும் பலகையாலும் கட்டிய வீடு, பிரிட்டன், தேயிலை, உருளைக்கிழங்கு ஆகியவை.

ஆஸ்திரேலியாவில் இருப்பவை: 38,000 மைல்களுக்கு ஆகாய விமானப்போக்கு வரவு, மூன்று ஸ்டுடியோக்கள், ஒவ்வொரு நான்கு பேர்களுக்கும் ஒரு கார், ஒரு சைகிள், ஒரு வயர்லஸ், ஒவ்வோர் ஏழு பேர்களுக்கும் ஒரு டெலிபோன், 80 லட்சம்

மக்கள், 12 கோடி செம்மறி ஆடு, ஒன்றரைக்கோடி மற்றக் கால்நடைகள், 15 லட்சம் குதிரைகள், 18 லட்சம் பன்றிகள்.

ஆஸ்திரேலியாவில் இல்லாதவை : உள்நாட்டுக்கலகம், பெரிய மலைத் தொடர்கள், போதிய அளவு தண்ணீர், பண்டைப் பெருமை, ஏசி டிசி என்ற வேறுபட்ட மின்சார நிலைகள், எல்லா அதிகாரங்களையும் மத்திய அரசியலாரே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கருத்து, இடையர்*.

ஆஸ்திரேலியாவின் சிறந்த தூதர்கள் : கங்கரு, கிரிக்கட் ஆட்டக்காரர்கள், பந்தயக் குதிரை ஓட்டுவோர், டென்னிஸ் ராக்கட்டுகள், சாக்லேட்.

நகைச்சுவை : ஆஸ்திரேலியர் நகைச்சுவை படைத்தவர்கள். இவ்விஷயத்தில் இவர்கள் பிரிட்டிஷாருக்கு முற்றிலும் மாறுபட்டவர்கள். ஒருநாள் ஏதோ நினைவில், ஆஸ்திரேலியர் சிலரிடம் நான் தமிழில் பேசிய போது, அவர்களும் என்னுடன் சேர்ந்து சிரித்தனர். ஜெர்மானியராகவோ, பிரிட்டிஷாராகவோ இருந்திருந்தால் நான் அவர்களை அவமதித்ததாகவே கருதுவர். வேதாந்த மனப்பான்மையாலும் வாழ்க்கைத் துயரங்களாலும் அல்லற்படும் நாம், நகைச்சுவை உணர்ச்சியை வளர்க்க வேண்டும். அதுவே இன்பத்துக்கு மணம் தந்து, துன்பத்துக்குச் சுவை யூட்டும் ஊறுகாய். **"இடுக்கண் வருங்கால் நகுக"** என்பது தமிழ் மறையன்றோ?

---

* ஆஸ்திரேலியாவில், செம்மறி ஆட்டு நாய்கள் என்ற ஒருவகை நாய்களே இடையர் வேலையைச் செய்கின்றன.

6. மெல்பர்ன் நகரம்

ஆஸ்திரேலியரில் மூன்றில் இரு பங்கினர் நெய்தல் நிலத்திலேயே—அதிலும் துறைமுகப்பட்டினங்களும் இராஜ்ஜியத் தலைநகரங்களுமான சிட்னி, மெல்பர்ன், பிரிஸ்பேன், அடிலெய்ட், பெர்த், ஹோபார்ட் ஆகியவற்றிலேயே—வாழ்கின்றனர். முன்னைய இந்திய சுதேச சமஸ்தானங்களுள் மைசூரும் திருவாங்கூரும் பல துறைகளில் முன்னணியில் இருந்ததுபோல ஆஸ்திரேலிய இராஜ்ஜியங்களுள் செல்வத்தாலும், செல்வாக்காலும், ஜனத்தொகையாலும், இயற்கை வளத்தாலும், தொழில் வளர்ச்சியாலும் நியூ சௌத் வேல்சும் விக்டோரியாவும் முக்கியமானவைகளாக இருக்கின்றன. முன்னதன் தலைநகர் சிட்னி; பின்னதன் தலைநகர் மெல்பர்ன்.

மெல்பர்ன் ஆஸ்திரேலியாவின் இரண்டாவது பெரிய நகரம். 1927-ல் கான்பரா ஆஸ்திரேலியாவின் தலைநகராக ஏற்படும்வரை அரசியலாரின் அலுவல்கள் மெல்பர்னிலேயே நடந்தன. இதன் ஜனத்தொகை 13 லட்சம். **விக்டோரியா அரசியின்** காலத்தில் பிரிட்டிஷார் குடியேறிய பகுதிக்கு அவர் பெயரும், அப்பகுதியின் தலைநகருக்கு அவ்வரசியின் முதலமைச்சராயிருந்த **மெல்பர்ன் பிரபுவின்** பெயரும் இடப்பட்டன.

பூங்காக்கள்

மெல்பர்னுக்குச் சிறப்புத் தருவது அந்நகரத்திலுள்ள **பொட்டானிகல் கார்டன்ஸ்** (Botanical Gardens)

என்பது. இது பெங்களூரிலுள்ள 'லால்டாக்' போன் றது. இந்தப் பூங்காவில் அன்னப் பறவைகள் உள்ள இடம் சாலச்சிறப்புடையது. அவற்றின் எழில் என் மனத்தைக் கவர்ந்தது. உணவு அருந்துவதற்கு இப் பூங்காவுக்கு வரும் ஆசிகளிற் சிலர் அன்னங்களுக்குச் சிறிதளவு உணவு தந்து, பின்னரே தாம் உண்டனர். காகத்துக்கு உணவிட்ட பின்பே தாம் உண்ணும் தமிழ ரின் பண்பாட்டை இந்நிகழ்ச்சி எனக்கு நினைவுறுத்தி யது. அடிப்படையில் உலக மக்கள் அனைவரும் ஓரியல்பினரே என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட் டாகும்.

பொட்டானிகல் கார்டன்சைப்போலப் பல பூங்காக் கள் மெல்பர்னில் உண்டு. இவற்றின் மொத்தப் பரப்பு 2000 ஏக்கர் இருக்கலாம்; அதாவது நகர அளவில் நான்கில் ஒரு பங்கு. இந்தப் பூங்காக்களில் மட்டுமன்றி, நகர முழுவதும் இனிய காட்சிகளும், வானளாவிய மரங் களும், வழி நெடுகப் பூங்கொடிகளும், ஒழுங்காக அமைக் கப்பட்ட சாலைகளும் உண்டு.

நகர அமைப்பு

மெல்பர்ன் திட்டமிட்டுக் கட்டப்பட்ட நகரம். பொறியியற் கலை வல்லுநரின் கனவு நனவானதை இங்கே காணலாம். இங்குள்ள பெரிய சாலைகள் 99 அடி அகலமுள்ளவை. குறுக்கு வீதிகள் 33 அடி அகலம் இருக்கின்றன; இவை ஒடுங்கிய வீதிகள் என்பதைக் குறிப்பிடுவதற்காக இச்சாலை

களின் பெயருக்கு முன்னால் ‘சிறிய’ என்ற அடைமொழி சேர்க்கப்படுகிறது.

மெல்பர்ன் நகரில் கிழக்கு மேற்கில் செல்லும் பெரிய சாலைகளும், தெற்கு வடக்கில் செல்லும் பெரிய சாலைகளும் சரியாக ஒவ்வொரு பர்லாங்குத் தொலைவிலும் ஒன்றையொன்று நேராக வெட்டுவது நகர அமைப்பின் ஒரு சிறப்பு; மற்றொரு சிறப்பு அங்கு அடிக்கடி மழை பெய்வதாகும். எனவே, சாலைகளில் தூசி படிவதில்லை. ஏதாவது ஒரு விடுமுறை நாளில், **‘இன்று எங்கேயாவது கடைகள் திறந்திருக்கின்றனவா?’** என்று கேட்டால், **‘இன்று குடைகள் மட்டுந்தான் திறந்திருக்கின்றன’** என்ற மறுமொழியே கிடைக்கும்.

இரவில் மெல்பர்ன்

மெல்பர்ன் நகரில் மின்சார டிராம்களின் சக்கரங்களுக்கு ரப்பர் உறை போடப்பட்டிருப்பதால், அவை ஓசையின்றியே செல்லுகின்றன. டிராம் பாதை இரவில்தான் செப்பனிடப்படுகிறது. இரவில் நடக்கும் மற்ற நிகழ்ச்சிகளில் குறிப்பிடத்தக்கவை இரண்டு. அவை, நகராண்மைக்கழக ஊழியர் சாலைகளைச் சுத்தம் செய்வது; ஒலிபரப்புக் கருவியுள்ள வாகனங்களில் ரோந்து சுற்றிப் போலீசார் வேவு பார்ப்பது.

சிட்னியும் மெல்பர்னும்

சிட்னி, மெல்பர்ன்போல ஒன்றுக்கொன்று மாறுபட்ட இருநகரங்களை உலகில் வேறு எங்கும் காணுதல் அரிது. சிட்னி மேடும் பள்ளமும்

நிறைந்தது. மெல்பர்ன் சமதரையில் இருப்பது. சிட்னி கடற்கரையில் அமைந்திருக்கிறது. மெல்பர்ன் நகரம் ஆற்றங்கரையில் எழுப்பப்பட்டிருக்கிறது. சிட்னியில் வெப்பம் மிகுதி. மெல்பர்னில் குளிர் மிகுதி. சிட்னி மக்கள் அமெரிக்கப் பாணியில் விரைவாக முன்னேற விரும்புவோர். மெல்பர்ன் மக்கள் பிரிட்டனைப் பின் பற்றி ஆர அமர எதையும் செய்ய விரும்புவோர். சிட்னியில் புதுமைப் பித்தத்தைக் காணலாம். பழமை யில் மோகமுள்ள மெல்பர்னில் பழைய கட்டிடங்களை இடிப்பதை மக்கள் ஆதரிப்பதில்லை. கோயமுத்தூரில் வாழும் ஒரு சில ஆலை முதலாளிகளால் அங்கு வாழ்க்கை செலவு மிகுதியாக இருப்பதுபோலவே, ஒரு சில செல் வந்தர் இருப்பதால் மற்ற ஆஸ்திரேலிய நகரங்களைவிட மெல்பர்னில் விலைவாசிகள் கூடுதலாக இருக்கின்றன.

தொழிற் சிறப்பு

விக்டோரியா இராஜ்ஜியத்தில் நிலக்கரிச் சுரங்கங் களும், தங்கச் சுரங்கங்களும் இருக்கின்றன. தோல் பத னிடும் தொழில் அங்கே விரிவாக நடைபெறுகிறது. பால் பண்ணைகளும் மிகுதியாக இருக்கின்றன. மற்ற இந்திய இராஜ்ஜியங்களை விடச் சென்னையில் மின்சார அபிவிருத்தி கூடுதலாக இருக்கிறது. ஆஸ்திரேலியாவில் இந்தப் பெருமை விக்டோரியா இராஜ்ஜியத்திற்கு உண்டு. மெல்பர்னில் மட்டும் 3000 மின்சார 'லிப்ட்'கள் உள்ளன. மின்சாரத்தால் இயங்கும் பல தொழிற்சாலை கள் இந்நகரைச் சுற்றிலுமுள்ளன.

லிப்ட் என்பது மேல்மாடிக்குச் செல்வதற்குப் பயன் படும் கருவி.

7. விளையாட்டுகள்

ஆஸ்திரேலியருக்கு விளையாட்டுகளில் மிக விருப்பம்; பயித்தியம் என்று கூறலாம். அவர்களுடைய பழமொழிகள்கூட விளையாட்டைப் பற்றியனவாய் இருக்கும். முறை தவறி ஒரு காரியத்தைச் செய்தால், "அது கிரிக்கட் இல்லையே" என்று அவர்கள் கூறுவர்.

தேசீய விளையாட்டு

ஆஸ்திரேலியரின் தேசீய விளையாட்டு—கிரிக்கட். ஆங்காங்கே உள்ள சிறந்த கிரிக்கட் ஆட்டக்காரர்கள் அந்தந்த ஊர்களில் வீரராக மதிக்கப்படுகின்றனர். உலகில் வேறு எந்த நாட்டினரையும் விடத் தாமே கிரிக்கட்டை நன்ருக ஆடுவதைப்பற்றி ஆஸ்திரேலியர் பெருமைப்படுகிருர்கள். **பிராட்மன்** என்பவர் உலகிற் சிறந்த கிரிக்கட் ஆட்டக்காரர். இவர் ஓர் ஆஸ்திரேலியர்; கிரிக்கட் ஆடுவதிலிருந்து இவர் 1948-ல் ஓய்வு பெற்ருர்; அதுவரை பல ஆண்டுகளுக்கு ஆஸ்திரேலியக் கிரிக்கட் கோஷ்டிகளுக்குக் 'காப்டன்' ஆக விளங்கினுர்; இவரளவுக்குப் புகழ்பெற்ற ஆஸ்திரேலியர் இந்த நூற்ருண்டில் ஒருவருமில்லை என்று துணிந்து கூறலாம். **கிரிக்கெட்டிலிருந்து விடுதலை** (Farewell to Cricket) என்ற இவருடைய நூல் தொடர்கதைபோல் எல்லா ஆஸ்திரேலியத் தினசரிகளிலும் பகுதி பகுதியாக வெளிவந்தது.

ஆஸ்திரேலியப் பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகள் கிரிக்கட்டைப்பற்றியே இருக்கும். ஆசிரியர் குறிப்புக்களிலும் வாரம் ஒரு முறையாவது கிரிக்கட்

இடம் பெற்றுவிடும். கிரிக்கட்டைப்பற்றிய விவரங்கள் கேட்டுப் பத்திரிகைகளுக்குப் பொதுமக்கள் கடிதங்கள் எழுதுகின்றனர். பொது அறிவைச் சோதிக்கும் கேள்விகளிலும் கிரிக்கட்டைப் பற்றியனவே மிகுதியாக இருக்கும். சில நாட்களில் 14 பக்கங்களுடன் பத்திரிகைகள் வெளிவரும்; வேறு சில நாட்களில் 6 பக்கங்களுடன் மட்டுமே அவை வெளியாகும். ஆனால் கிரிக்கட்டைப் பற்றிய செய்தியின் அளவுமட்டும் குறைவதில்லை.

விளையாடும் இடங்கள்

ஆஸ்திரேலிய இராஜ்ஜியங்களின் தலைநகரங்களிலெல்லாம் கிரிக்கட் விளையாடுவதற்கெனச் சிறந்த இடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆட்டத்தின் நிலையை உடனுக்குடன் தெரிவிக்கும் பலகைகள் இவற்றில் உள்ளன. ஒவ்வொரு பந்தையும் எடுக்கிறவர்களுடைய பெயருக்கு எதிரே அவ்வப்போது வர்ண விளக்கொன்று மின்சாரத்தால் இப்பலகைகளில் இயக்கப்படுகிறது.

மக்களின் ஆர்வம்

பிரிட்டனுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் பல ஆண்டுகளாகக் கிரிக்கட் - 'டெஸ்ட்' பந்தயங்கள் நடந்து வருகின்றன. இவை இருநாடுகளிலும் மாறி மாறி நிகழும். பிரிட்டனில் ஆட்டம் காலை 11 மணிக்குத் தொடங்கும்போது ஆஸ்திரேலியாவில் இரவு 9-மணியாக இருக்கும். எனினும், குளிர்காலத்திலுங்கூட நெருப்பருகே அமர்ந்து இரவெல்லாம் கண்விழித்து, ஆட்டத்தின் போக்கை வானொலி வாயிலாக ஆஸ்திரேலியர் அறிவதுண்டு.

நமது ஹைகமிஷனர்

கிரிக்கட்டை மறந்துவிட்டு ஆஸ்திரேலியாவை நினைப்பது எளிதன்று. இத்தகைய நாட்டுக்கு நமது சிறந்த கிரிக்கட் ஆட்டக்காரரும் நவநகர் இளவரசருமான துலிப் சிங் ஜீ ஹைகமிஷனராக நியமிக்கப்பட்டிருப்பது மிகப் பொருத்தமானது. இவர் ஏற்கனவே இருமுறை ஆஸ்திரேலியாவுக்குச் சென்றவர்; ஆஸ்திரேலிய இளைஞரிடையே நல்ல செல்வாக்குள்ளவர்.

மற்ற ஆட்டங்கள்

டென்னிஸ், ஹாக்கி விளையாட்டுகளிலும் ஆசிகள் பெரு முன்னேற்றம் அடைந்துள்ளனர். சில ஆண்டுகளுக்கு முன்னும் இவ்வாண்டும் அவர்கள் விம்பள்டன் டென்னிஸ் பந்தயங்களில் வெற்றியடைந்திருக்கின்றனர்; 'டேவிஸ் கப்' என்ற பரிசையும் பெற்றிருக்கின்றனர். பெண்கள் ஹாக்கி ஆடக்கூடாதென்ற ஒரு கட்சி இப்போது ஆஸ்திரேலியாவில் ஏற்பட்டுள்ளது. நீந்துவதில் இப்போதுதான் ஆசிகள் கவனம் செலுத்தி வருகின்றனர். இவ் விளையாட்டில் ஜப்பானியரைப் போன்ற உன்னத நிலையை இவர்கள் சில ஆண்டுகளில் அடைந்துவிடுவர்.

குதிரைப் பந்தயம்

குதிரைப் பந்தயம் ஆஸ்திரேலியாவில் சிறப்பாக நடைபெறுகிறது. மெல்பர்னிலுள்ள திடல் சிறந்த பந்தய மைதானமாகும். அங்கே முக்கியமான பந்தயம் நிகழும் நாள் ஆஸ்திரேலியாவுக்கு ஒரு திருநாளாகும். இந்தியா உள்பட, பல நாடுகளின் குதிரைப் படைக

ளுக்கு ஆஸ்திரேலியாவிலிருந்து குதிரைகள் தருவிக்கப் படுகின்றன. குதிரைமீதேறி ஓட்டும் பயிற்சிக்கான பள்ளிக்கூடங்கள் ஆஸ்திரேலியாவில் உள்ளன. பந்தயக் குதிரை ஓட்டுவோரில் சிறந்தவரும் இந்நாட்டினரே.

மீன் பிடித்தல்

பொழுது போக்குக்காகவும் வாணிபத்திற்காகவும் மீன் பிடிப்போர் ஆசிகளுள் மிகப் பலர் உண்டு. ஆற்றில் மீன் பிடிக்க எவ்விதக் கட்டுப்பாடும் இல்லை. மற்ற இடங்களில் மீன் பிடிப்பதற்கு வேறுபட்ட சிறு கட்டணங்கள் உண்டு. மீன் பிடிக்கும் தொழில் ஆஸ்திரேலியாவுக்குப் புதியது எனினும் இது மிக விரிவான முறையில் இப்போது நடந்து வருகிறது. 20 பெரிய வாணிபக் குழுக்கள் இத் தொழிலில் ஈடுபட்டுள்ளன. வலை வீசும் கப்பல்களையும் நீராவிப் படகுகளையும் (Trawlers) பயன்படுத்தி, மீன்களையும் பெருங்கடல்களிலுள்ள மற்ற உயிரினங்களையும் பிடித்து, பின்னர் தக்க முறையில் பக்குவப்படுத்தித் தகரங்களில் அடைத்து, பெரும் அளவில், இக்குழுவினர் விற்கின்றனர்.

படகு ஓட்டுதல்

குழுவாகச் சேர்ந்து படகு ஓட்டுதலும் ஆசிகள் பலருக்கு விருப்பமான ஒரு விளையாட்டு. பிரிட்டனில் பல்கலைக் கழகங்களுக்கிடையே நிகழ்வது போன்ற படகோட்டும் போட்டிகள், சிட்னி துறைமுகத்திலும் மெல்பர்ன் 'யாரா' ஆற்றின் கரையிலும், ஆஸ்திரேலியப் பள்ளிக்கூடங்களுக் கிடையே நிகழ்கின்றன.

8. பெண்கள்

ஆஸ்திரேலியாவில் ஆடவரைப்போலவே பெண்களும் எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். பெண்களுக்குத் தனிச் சலுகைகளும் காட்டப்படுகின்றன. ஆடவர்–பெண்டிர் உறவு அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் உள்ளது போலவே இங்கும் உளது. உதாரணமாக, அலுவலக லிப்ட்டில் ஓர் ஆண் ஒரு பெண்ணைச் சந்தித்தால், தன் தொப்பியை எடுக்கவேண்டாம்; ஆனால் வேறு இடங்களில் சந்தித்தால் தொப்பியைத் தலையிலிருந்து நீக்கிவிட வேண்டும். பொது இடங்களில் ஆண்கள் பகிரங்கமாகக் கண்ணாடியில் முகம் பார்க்கக்கூடாது. பெண்கள் பொது மன்றங்களில் பலர் முன்னிலையில் முகப்பூச்சுக்கூடத் தடவலாம்; மதுபானக் கடைகளில் பெண்கள் குடிவகைகளைப் பயன்படுத்தக்கூடாது.

ஆஸ்திரேலியப் பெண்களும், உலகின் மற்ற தேசத்துப் பெண்களைப்போலவே குடும்ப வாழ்வில் எந்த வேலையையும் ஆமைவேகத்திற் செய்வர். 'உம்' என்றால் நான்கு மணி நேரம் ஆகிவிடும். இதோ ஓர் ஆஸ்திரேலியத் துணுக்கு :—

கணவன் : என்ன நேரமாகிறதே, புறப்படலாமா, சினிமா தொடங்கியிருப்பார்களே?

மனைவி : ஒன்றும் நேரமாகாது, இதோ வந்துவிட்டேன். முகத்தைக் கழுவிப் பவுடர் போட்டுக்கொண்டு, நகத்தை வெட்டி, பூட்சைப் பாலிஷ் செய்து புது உடை அணிந்து புறப்பட வேண்டியதுதான்!

தொழிலாளர் குறைவாக இருப்பதாலும் நல்ல ஊதியம்[1] கிடைப்பதாலும், 15-வயது நிரம்பாத பெண்களும் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றனர். பொறுப்பான பல பதவிகளையும் பெண்கள் வகிக்கின்றனர். உதாரணமாகச் சிட்னிப் பல்கலைக் கழக 'ரிஜிஸ்டிரார்' பதவியில் இப்போது ஒரு பெண்தான் அமர்ந்திருக்கிறார்.

பொழுது போக்குகள்

பொழுது போக்கவும், வாழ்க்கைச் செலவைக் குறைத்துக் கொள்ளவும் தங்கள் குடும்பத்திற்குத் தேவைப்படும் ஜாம்[2], ரொட்டி (Pastry) ஆகிய உணவுகளை ஆஸ்திரேலியப் பெண்கள் சிலர் தம் ஓய்வு நேரத்தில் செய்துகொள்ளுகின்றனர். வேறு சிலர் தங்களுக்கும் தங்கள் குழந்தைகளுக்கும் வேண்டிய உடைகளைத் தைத்துக்கொள்ளுவர். குறிப்பிட்ட இடைவேளைகளில் சிறிது நேரத்திற்குத் தையல் இயந்திரத்தை வாடகைக்கு விடும் சங்கங்கள் ஆஸ்திரேலியாவில் இருப்பதால், இக் கருவிகளைச் சொந்தமாக வைத்துக்கொள்ள வேண்டியதில்லை.

பின்னல் வேலையில் பெண்கள் மிகுதியாக ஈடுபடுகின்றனர். இதைப்பற்றி ஒரு நண்பர் என்னிடம் சுவைபடக் கூறியதாவது; "**ஆசிப்பெண்கள் ரயிலிலும் டிராமிலும் பிரயாணம் செய்யும்போது பின்னுவர்; நீந்தும்போது இடைவேளையிலும் பின்னுவர்; பகலுணவு இடைவேளை**

1. எந்த வேலையிலும் ஆண்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியத்தில் $\frac{3}{4}$ பங்குதான் ஆஸ்திரேலியப் பெண்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

2. 12-ம் கட்டுரையில் ஜாம் பற்றிய விவரம் காண்க.

யிலும் பின்னுவர்; அல்லும் பகலும் அறுபது நாழிகையும் பின்னிக்கொண்டே யிருப்பர்.

வார்ட்ஸ் ஆப் ஸ்டேட்

நீதிமன்றங்கள் குற்றவாளிகளெனக் கூறும் குழந்தைகளையும், தாய் தந்தையரில்லாக் குழந்தைகளையும், ஏழ்மையான நிலையிலுள்ளவர்களின் குழந்தைகளையும் வளர்த்து நன்னிலைக்குக் கொண்டுவரும் பொறுப்பை ஆஸ்திரேலிய அரசியலார் மேற்கொண்டுள்ளனர். இக்குழந்தைகளுக்கு வார்ட்ஸ் ஆப் ஸ்டேட் (Wards of State) என்று பெயர். ஆண்பாலர் தனியாகவும் பெண்பாலர் தனியாகவும் வளர்க்கப்படுகின்றனர். குழந்தைகளைக் கவனிப்பதற்குச் செவிலித் தாய்மார்கள் (Foster-mothers) சில நூறு பேரை அரசியலார் வேலையில் அமர்த்தியுள்ளனர்.

அரசியலார் உதவி

ஆஸ்திரேலியர் அளவோடு குழந்தைகளைப் பெறுகின்றனர். மக்களுடைய நலனைக் காக்கப் பெருவாரியான வசதிகளை அரசியலார் செய்திருக்கின்றனர். மதஸ்தாபனங்களிலிருந்தும் பெண்கள் பல உதவிகளைப் பெறுகின்றனர். பள்ளிக்கூடத்துக்குச் செல்லும் குழந்தைகளை அங்குள்ள வளர்ப்புத் தாய்மார் (Nurses) பேணுகின்றனர். கணவனும் மனைவியும் படம் பார்க்கவோ வேறு வேலையாகவோ வெளியே செல்லும்போது அவர்களுடைய குழந்தைகளைக் கல்லூரிப் பெண்கள், சிறு ஊதியம் பெற்றுக் கவனித்துக் கொள்ளுகின்றனர். மின்சாரத்தால் இயங்கும் பல கருவிகள் வீடுகளில்

இருக்கின்றன. இவற்ருல், ஆஸ்திரேலியப் பெண்கள் சமையல் செய்வது, துணி துவைப்பது போன்ற அலுவல்களையும் வேலைக்காரர் இன்றித் தாமே செய்து கொள்ளுகின்றனர்.

ஒவ்வொரு பெண்ணுக்கும் பிள்ளைப் பேறு காலத்தில் அரசியலார் 15 பவுன் (ரூ. 160) கொடுக்கின்றனர். அப்போது தம் மனைவிமாருக்குத் துணையாக இருக்கவும், வீட்டு வேலைகளைச் செய்யவும் எல்லாத் தொழிலாளருக்கும் ஒருவார ஓய்வு கொடுக்கவேண்டுமென்று ஆஸ்திரேலியத் தொழிற் சங்கத்தார் கேட்டிருக்கின்றனர்.

மிஸ் ஆஸ்திரேலியா

'மிஸ் ஆஸ்திரேலியா' என்ற பட்டத்துக்கு ஆண்டு தோறும் போட்டி நடைபெறுகிறது. வெற்றி பெறுபவருக்கு வேண்டிய ஆடைகளும், உல்லாச உலகச் சுற்றுப் பிரயாணச் செலவிற்கான பொருளும் பரிசாகக் கொடுக்கப்படுகின்றன. மிஸ் ஆஸ்திரேலியா மிகக் கவர்ச்சியான உடற்கட்டும், ஒளி நிறைந்த முகமும், நேரான முதுகும், அழகிய தோற்றமும் பெற்றிருப்பதுடன் மெல்லிய குரல், நல்ல பகுத்தறிவு, இசை ஞானம், பண்பாடு முதலியனவும் உடையவளாயிருக்க வேண்டும்.

—x—

9. ஆதி ஆஸ்திரேலியர்

மிகப் பழமையான நிலப்பரப்பு ஆஸ்திரேலியா என்று இயற்கை வரலாற்று அறிஞர் (Geologists) கூறுகின்றனர். 180 ஆண்டுகளுக்கு முன் இந்நாட்டைக் கண்டுபிடித்த வெள்ளையர் கடந்த 100 ஆண்டுகளில் தான் அங்கே குடியேறினர். அதற்குப் பிற்பட்ட வரலாறு மட்டுமே ஆஸ்திரேலிய வரலாறாக இன்றைய உலகம் ஒப்புக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. வெள்ளையருக்குப் பல நூற்றாண்டுகள் முன்னிருந்தே ஓரினத்தார் ஆஸ்திரேலியாவில் வாழ்ந்து வந்திருக்கின்றனர். படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வரும் இவர்களுக்கு **அபாரிஜின்ஸ்** (Aborigines) என்று பெயர்.

" கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முன்தோன்றி மூத்த குடி "

ஆகிய இத் தொல்குடியினரே உண்மை ஆஸ்திரேலியர் ஆவர்; இவர்களை 'ஆதி ஆஸ்திரேலியர்' என அழைப்போம்.

வாழ்க்கை முறை

குயின்ஸ்லந்தில் சிறு தொழில்கள் நடத்தும் ஓரிருவர் நீங்கலாக, மற்ற ஆதி ஆஸ்திரேலியர் 1,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தவாறே கவலையின்றிக் காடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். வறுமையிலும், அறியாமையிலும் மூழ்கி, மூடநம்பிக்கைகளுடன் மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கும் இவர்களை நாகரிக

ராக்க வெள்ளை ஆஸ்திரேலியர் முன் வரவில்லை. ஆதி ஆஸ்திரேலியர் அமைதியை விரும்புபவர்கள். உடையைப்பற்றி இவர்கள் அக்கறை கொள்ளுவதில்லை. மானத்தைக் காக்க ஒரு சிறு துணி மட்டும் உடுப்பர். கூச்சம் என்பது இவர்கள் அறியாத ஒன்று. எருமை வேட்டையில் மிகவும் விருப்பமுடைய இவர்கள் பொதுவாக வேட்டையாடுவதில் கைதேர்ந்தவர்கள்; அம்பு எய்வதிலும் வல்லுநர். இவர்கள் பயன்படுத்திய போர்க் கருவிகள் ஆஸ்திரேலியப் பொருட்காட்சி மண்டபங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. இவர்கள் உயிரினங்களை உண்பர். உடலுறுப்புகளுக்குச் சிவப்பு நிறம் தீட்டுவர்; கிளிஞ்சல்களைச் சேர்த்து மாலையாக அணிவர்; போக்குவரவுக்குக் குதிரைகளைப் பயன்படுத்துவர். குழந்தைகளும் மிக எளிதில் குதிரை ஏறப் பழகிக் கொண்டு விடுகின்றனர். மீனுக்கு எவரும் நீந்தக் கற்றுக் கொடுப்பதில்லை அன்றோ? இக்குழந்தைகளும் ஆசிரியர் உதவியின்றித் தாமே குதிரை ஏறப் பயின்று விடுகின்றனர். வேறு வாகனங்களை இவர்கள் அறியார். பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இவர்கள் இலங்கையோடு தொடர்பு கொண்டிருந்தனர்.

தொன்மை

ஆதி ஆஸ்திரேலியரின் வரலாறு சரியாகத் தெரியாத போதிலும் ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் சிறு துணுக்குகளின் வாயிலாக இவர்கள் தொன்மையை ஒருவாறு அறியவேண்டியிருக்கிறது. பல நகரங்களின் பெயர்கள் இவர்களுடைய வரலாற்றினை உணர்த்தும் கருவூலங்களாயுள்ளன. '**டூவூம்பா**' (Toowoomba)-

என்பது ஓர் ஆஸ்திரேலிய நகரம்; இது வரலாற்றுச் சிறப்புப் பெற்ற ஊர்; பிரிஸ்பேணிலிருந்து 85-மைல் தொலைவிலுள்ளது; இப்பெயர் இதற்கு ஆதி ஆஸ்திரேலியர் கொடுத்ததே. '**கான்பரா**' என்பதும் ஆதி ஆஸ்திரேலியர் வழங்கிய பெயரே. இவர்கள் மொழியில் இச் சொல்லுக்குப் 'பெண்ணின் மார்பு' என்று பொருள். ஒரு பள்ளத்தாக்கிலுள்ள உயரமான இரு மலைகளின் மீது கான்பரா நகரம் அமைந்திருப்பதை இந்தப் பெயர் அழகாகச் சித்தரிக்கிறது.

வெள்ளையருடன் உறவு

ஆதி ஆஸ்திரேலியர் தனித்துப் புறம்பாக வாழ்வதால் வெள்ளை ஆஸ்திரேலியருக்கு எவ்வித இடையூறும் இவர்களால் உண்டாவதில்லை. வெள்ளையரும் இவர்களுடைய வாழ்க்கை முறையிலோ, பழக்க வழக்கங்களிலோ தலையிடுவதில்லை. ஆஸ்திரேலியப் பாராளுமன்றத்தில் ஆதி ஆஸ்திரேலியருடைய பிரதிநிதிகள் ஒருவரும் இல்லை. ஆயினும், ஆஸ்திரேலிய வாழ்க்கையில் இந்த இனத்தவருக்குச் சிறப்பான இடம் கொடுக்க வேண்டுமென்ற முன்னேற்றக் கருத்துடைய பலர் வெள்ளை ஆஸ்திரேலியரில் இருக்கத்தான் செய்கின்றனர். 1956-ல் நடக்கவிருக்கும் ஒலிம்பிக்ஸ் விழாவின் தொடக்க நிகழ்ச்சியில் ஆதி ஆஸ்திரேலியரே பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென "**ஆஸ்திரேலியன் போஸ்ட்**" என்ற பத்திரிகை கூறியிருக்கிறது.

வட பிரதேசம் (Northern Territory)

இப்போது ஆதி ஆஸ்திரேலியர் சற்றேறக் குறைய 50,000 பேர் உளர். இவர்களுடைய தொகை குறைந்து

கொண்டு வருகிறது. காலப்போக்கில் இவர்கள் அடியோடு மறைந்துவிடவும் கூடும். இவர்களில் சில ஆயிரம் பேர் மேற்கு ஆஸ்திரேலியாவிலும், சில நூறு பேர் கான்பராவிலும் மற்றவர் வட பிரதேசத்திலுமாக வாழ்கின்றனர்.

நிருவாக வசதிக்காக இப்பகுதி ஓர் இராஜ்ஜியமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதற்குத் தனியான சட்டசபை கிடையாது. நம் நாட்டில் ஆஜ்மீர், கூர்க் பகுதிகள் போன்று ஆஸ்திரேலியாவில் வட பிரதேசம் அந்நாட்டு அரசியலாரால் நேரடியாக ஆளப்படுகிறது. இப்பிரதேசத்தின் பரப்பு 5-லட்சம் சதுர மைல்; அதாவது தமிழ்நாட்டைப்போல் ஐந்து மடங்கு பெரியது. இங்கே விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில வெள்ளையரே வாழ்கிறார்கள்; பிரிட்டிஷாருக்குச் செக்கோசுலவகியாவைப் பற்றி எவ்வளவு தெரியுமோ அவ்வளவே ஆஸ்திரேலியருக்கு வட பிரதேசத்தைப் பற்றித் தெரியும். செப்பு, மைகாச் சுரங்கங்களும், கால்நடைப் பண்ணைகளும் (Cattle Stations) மிகுதியாக இருப்பதால், இப்பகுதி ஆஸ்திரேலியாவின் உயிர்நாடியாக விளங்குகிறது.

டார்வின்

வட பிரதேசத்தின் நிருவாகத் தலைநகர் டார்வின். பூகோள அமைப்பால் இப்பிரதேசத்தின் நடுவிடத்திலிருப்பது ஐந்து நூறு மக்களுள்ள **ஆலிஸ் ஸ்பிரிங்ஸ்** (Alice Springs) என்னும் நகரம். டார்வினுக்கும் சிட்னிக்குமுள்ள கப்பல் பாதைக்கு இடையூறு வரலா

மென அஞ்சிப் போர்க்காலத்தில் 600 மைல் நீளமுள்ள ரயில் பாதை ஒன்று டார்வினுக்கும், ஆலிஸ் ஸ்பிரிங்சுக்குமிடையே மிக விரைவாகப் போடப்பட்டது. குயின்ஸ்லந்துக்கும் வட பிரதேசத்துக்கும் ஒழுங்கான விமானப் போக்கு வரவும் தொடங்கப்பட்டது. இதற்குத்தான் **குவான்டாஸ்** (Qantas=Queensland and Northern Territory Air Service) என்று பெயர். போதிய போக்கு வரவின்மை, தாங்க முடியாத வெப்பம், தண்ணீரில்லாக் குறை இம்மூன்றும் இங்கே அடிப்படையான பிரச்சினைகள். விஞ்ஞான உதவிகொண்டு இக்குறைகளுக்குப் பரிகாரம் தேட அரசியலார் முற்பட்டிருக்கின்றனர். ஆஸ்திரேலியாவிலிருந்து சென்னை வழியாகப் பிரிட்டனுக்குச் செல்லும் தந்திக் கம்பிப் பாதையில், ஒரு முக்கிய இடமாக 1869-ல் டார்வின் ஏற்பட்டது. வேறு சிறப்பில்லாத இந்த ஊரின் ஜனத்தொகை 1941-ல் 1600தான். இவருள் நூறுபேர் வெள்ளையர். அந்த ஆண்டில் ஜப்பான் போர் தொடங்கியதும் டார்வினின் கடல், விமானத்தளங்கள் விரிவாக்கப்பட்டன. இப்போது ஜாவாவுக்கும், சிங்கப்பூருக்கும் அங்கிருந்து கப்பல்கள் செல்லுகின்றன. டார்வினின் தற்போதைய ஜனத்தொகை 6,000. இரண்டாவது உலகப் போரில் சேதமடைந்ததால், இந்த நகரம் இப்போது புதிதாக நிருமாணிக்கப்பட்டு வருகிறது. இன்றுங்கூட அங்கே நல்லதோர் உணவு விடுதி இல்லாததால், அங்குத் தங்கும் நேரத்தில் விமானப் பிரயாணிகள் உண்பதற்காகச் சிட்னியிலிருந்து நாள்தோறும் ஆகாய மார்க்கமாக உணவு வருகிறது. முட்டைகளும் காய்கறிகளும் அன்றுடம் இவ்வாறே வருகின்றன.

தனித்த வாழ்க்கை

ஆதி ஆஸ்திரேலியர் இன்றைய உலகுக்கு எவ்வளவு அப்பாற்பட்டு வாழ்ந்து வருகின்றனர் என்பதைப் பின்வரும் குறிப்பு மூலம் உணரலாம்.

"இந்தப் பிரதேசத்தில் 15 ஆண்டுகளுக்கு முன் முதன் முறையாக ஆகாய விமானம் பறந்தபோது, ஆதி ஆஸ்திரேலியர் கூட்டம் கூடி அதன் ஓசை மிகுதியாக இருக்கிறது, ஆதலால் அது ஒரு பறவையாக இருக்க முடியாது என்று முடிவு செய்தார்களாம்!"

"பூமிராங்" (Boomerang)

இன்றுள்ள ஆதி ஆஸ்திரேலியருக்கு ஆகாய விமானக்கலே புதியதாயிருக்கலாம்; ஆனால் இன்றைய உலகம் பயன்படுத்தும் ஆகாய விமானத்தின் கருவிகளுள் முதன்மையானதைப் போன்ற ஒன்றைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இவ்வினத்தவர் பயன்படுத்தியிருக்கின்றனர். இந்த மந்திரக் கருவிக்குப் **பூமிராங்** என்று பெயர். பூமிராங் மரத்தால் செய்யப்பட்டது; ஓட்டுப் பலகையிலும் சிலவகைத் தகடுகளிலும் இதைச் செய்யலாம்; இஃது அழகிய வளைவுகளுடன் கூடியது; வளர் பிறையைப் போன்ற அமைப்பையுடையது; இதை நன்றாகச் சுற்றி வீசி எறிந்தால், நெடுந் தொலைவுக்குச் சென்று, பின்னர் எறிந்தவரிடத்திலேயே வந்து சேர்ந்துவிடுமாம்!

போரில் எதிரிகளின் தளத்தில் குண்டுகளை வீசி விட்டுப் புறப்பட்ட இடத்துக்கே மீண்டும் வந்து

சேர்ந்துவிடும் விமானங்களுக்கு, இப்போது பூமிராங் என்று பெயரிடப்பட்டிருக்கிறது; வெள்ளை ஆஸ்திரேலியர் ஒருவருக்கொருவர் பொருள்களை இரவலாகக் கொடுத்துக்கொள்ளும்போது, அப் பொருள் தமக்கு மீண்டும் வந்து சேரவேண்டும் என்பதைக் குறிக்க **"அது ஒரு பூமிராங்; நினைவிருக்கட்டும்"** (Remember, it is a Boomerang) என்று நகைச்சுவை தோன்றக் கூறுவர்.

—x—

10. கல்வி முறை

ஆஸ்திரேலியாவில் நூற்றுக்கு நூறுபேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். 14 ஆண்டுவரை இலவசக் கட்டாயக் கல்வி முறை அங்கே அமலில் இருக்கிறது. புத்தகங்கள், பென்சில்கள் போன்றவற்றிற்கு மட்டும் பெற்ருேர் செலவு செய்யவேண்டும். இந்தச் செலவுகளை ஈடுகட்டும் வகையில் ஒரு குழந்தைக்கு ஒரு வாரத்திற்கு ரூபாய் 3-10-0 விகிதம் 16 ஆண்டு நிறைவடையும் வரை அரசியலார் பெற்ருேர்களுக்குப் பண உதவி செய்கின்றனர்.

தொடக்கப் பள்ளிகள்

தொடக்கப் பள்ளிகளில் குழந்தைகள் அக்கரையாகப் படிப்பதற்கேற்ற பல அமைப்புக்கள் உண்டு. சலிப்புத் தட்டிவிடாதபடி காலைப் பாடங்களுக்கு இடையில் கால் மணி நேர ஓய்வும், அவ்வாறே மாலை நேரத்திலும் கால்மணி நேர ஓய்வும் கொடுக்கப்படுகிறது,

பகல் இடைவேளையின் அளவு இரண்டு மணி நேரம். அப்போது மாணவருக்கு இலவச உணவு தரப்படுகிறது. இந்தச் செலவுகளையும் அரசியலார் ஏற்றுக்கொள்கின்றனர். அவரவர்களுக்கு விருப்பமான பாலர் பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்ப்பதற்காகப் பெற்றோர்கள் அப்பள்ளிகளில் தம் குழந்தைகளுக்கு இடம் கிடைக்க, கருப்பத்தில் இருக்கும்போதே பெயர் பதிந்துகொண்டு விடுகிறார்கள்.

ஆஸ்திரேலியாவில் நான்குவிதமான தொடக்கப் பள்ளிகள் இருக்கின்றன.

பப்ளிக் ஸ்கூல்கள் (Public Schools):-இவை அரசியலாரால் நடத்தப்படுகின்றன. உயர்நிலைப் பள்ளிகளில் சேரும் தகுதியுடையோராக மாணுக்கரைச் செய்வது இவைகளின் வேலை. இந்தப் பள்ளிக்கூடங்கள், அந்தந்த ஊரிலுள்ள, பெற்றோர்-பிரஜைகள் சங்கத்தால் மேற்பார்வையிடப்படுகின்றன. இச்சங்கத்தார் பள்ளிக்கூடக் கட்டிடங்களை உடனுக்குடன் பழுது பார்த்து விடுவர். எண்பது மாணவர் இருக்கும் ஊரிலும் பள்ளிக்கூடம் ஒன்றை ஏற்படுத்திவிடுவது ஆஸ்திரேலியர் வழக்கம். இப்பள்ளிக்கூடங்களைப் புதிதாகப் பல இடங்களில் விரைவாக அமைப்பதற்காக, பகுதி பகுதியாயுள்ள எஃகுக் (Prefabricated Steel) கட்டிடங்களை அரசியலார் பிரிட்டனிலிருந்து தருவித்திருக்கின்றனர்.

சப்சிடைஸ்டு ஸ்கூல்ஸ் (Subsidised Schools):—இந்தப் பள்ளிகளின் நிருவாகச் செலவில் ஒரு பகுதியை

அரசியலார் ஏற்றுக்கொள்கின்றனர். மீதியை அந்த ஊரார் கொடுக்கின்றனர். இந்தப் பள்ளிகளில் ஆசிரியரின் ஊதியம் குறைவு. இதற்கு ஈடாக ஆசிரியருக்கு இலவச உணவு கிடைக்கிறது; பல குடும்பங்கள் மாறி மாறி ஆசிரியருக்கு உணவு படைப்பது இங்கு வழக்கம். முட்டை, பால், கோழி முதலியவற்றை உழவர் ஆசிரியருக்கு அன்பளிப்பாகக் கொடுப்பதுண்டு. பெற்றோரும் ஆசிரியரும் மிக நெருங்கிப் பழகுகின்றனர்.

"ஊருக்கு ஏழை, பிள்ளையார் கோயில் ஆண்டி ;
அவனுக்கும் தோக்கு ஆரம்ப ஆசிரியன்"

என்ற நிலை அங்கே இல்லை.

கரஸ்பாண்டன்ஸ் ஸ்கூல்ஸ் (Correspondence Schools) :—ஆஸ்திரேலியாவில் ஆயிரக் கணக்கான பண்ணைகள் இருக்கின்றன. இவை ஒன்றுக்கொன்று 50 அல்லது 100 மைல் தொலைவில் உள்ளன. இப் பண்ணைகளில் விரல் விட்டு எண்ணத்தக்க மாணவர் உண்டு. இவர்களுக்காகப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த இயலாதாகையால் அஞ்சல் வாயிலாகக் கல்வி கற்பிக்கப் படுகிறது. இப் பள்ளிக்கூடங்களுக்குக் 'கரஸ்பாண்டன்ஸ் ஸ்கூல்ஸ்' என்று பெயர். இவை ஓரிரு இடங்களில் பல்கலைக் கழக மேற்பார்வையிலும், மற்ற இடங்களில் அரசியலாரின் மேற்பார்வையிலும் நடைபெறுகின்றன. கடிதங்கள், ஒலிப்பதிவுத் தட்டுகள், படங்கள் வாயிலாகப் பாடங்கள் போதிக்கப்படுகின்றன. 35,000 மாணவர் இந்த முறைப்படி கல்வி பயின்றிருக்கின்றனர்.

இவர்களுக்கும் தேர்வுகள், தேர்வு முடிவுகள், விடுமுறை நாட்கள் எல்லாம் உண்டு. பெற்றோர் தக்க கவனம் செலுத்திஞல் மாணவர் இந்த முறையால் பெரும் பயனடையலாம். இந்தக் கல்வி முறை வெற்றி பெறுவ தற்கு ஆஸ்திரேலிய வாஞெலிக் குழுவினர் பேருதவி செய்து வருகின்றனர்; திரைப்பட வாயிலாகக் கல்வி புகட்டவும் அரசியலார் பல லட்சம் ரூபாய்களைச் செலவிடுகிருர்கள்.

ஏரியா ஸ்கூல்ஸ் (Area Schools)—இவை, டாஸ் மேனியாவில்* மட்டும் இருக்கின்றன. ஓர் ஏரியா ஸ்கூலுக்குச் சற்றேறக் குறைய 40 ஏக்கர் இடம் உண்டு. இவை பெரிய கட்டிடங்களில் நடைபெறுகின்றன. 12-முதல் 15-வயது வரையுள்ள மாணவர் இங்கே வாசிக்கின்றனர். அணைகட்டுதல், கான்கிரீட் போடுதல், மரம் செடி கொடி பயிரிடுதல், கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல், தச்சுவேலை, கொல்லுவேலை, தோல் பதனிடு தல் போன்ற குடிசைத் தொழில்கள் இப்பள்ளிகளின் நிகழ்ச்சிகளில் பெரும் பகுதியாகும். ஆஸ்திரேலியாவின் மற்றக் குடிசைத் தொழில்களையும் இங்கே குறிப்பிட லாம். கங்கருவின் தோலில் பைகள் செய்வது, பலவித மரங்களை அழகாகச் சிறுசிறு துண்டுகளாக ஆஸ்திரேலிய நாட்டைப் போன்ற அமைப்பில் வெட்டி, அவற்றில்

---

* டாஸ்மேனியா என்பது ஓர் ஆஸ்திரேலிய இராஜ்ஜியம்; இலங்கையின் அளவு உள்ளது; இது ஆஸ்திரேலியாவுக்குத் தென் கிழக்கில் உள்ள ஒரு தனித் தீவு. பழத் தோட்டங்களும் காடுகளும் மிகுதியாக இங்கே உண்டு; இதன் அழகிய தலைநகர் ஹோபார்ட். இது உலகிலேயே ஆழமான துறைமுகத்தையுடையது.

நல்ல மேற்கோள்களைப் பொன் எழுத்துக்களாகப் பொறிப்பது முதலியவை.

அந்தந்த ஊரிலுள்ள நிலைமைக்குத் தக்கபடி பாடத்திட்டங்களை மாற்றி அமைக்கவும், ஆங்காங்குள்ள வாழ்க்கை நிலைக்கும் சமூக நன்மைக்கும் பயன்படும் நிகழ்ச்சிகளைச் சேர்த்துக்கொள்ளவும், தலைமை ஆசிரியருக்கு உரிமை உண்டு. அவருடைய வீட்டை மாணவரே கட்டியிருக்கின்றனராம். மாணவருக்குப் போக்கு வரவு வசதிகளும் பகலுணவும் பள்ளிக்கூடச் செலவில் ஏற்பாடு செய்யப்பட்டுள.

ஒவ்வொரு பகுதியிலும் தனிப்பயிற்சி பெற்ற பல ஆசிரியர்களும், மிகுதியான கருவிகளும், வேறுபட்ட சமூக நிலைகளிலுள்ள குழந்தைகளுடன் பழகும் வாய்ப்பும் இப்பள்ளிகளில் உண்டு. விவசாய விஞ்ஞானம், வியாபார நுட்பம் ஆகியவற்றின் அடிப்படைத் தத்துவங்கள் குழந்தைகளின் மனத்தில் பதியும் வண்ணம் இங்கே கற்றுக்கொடுக்கப்படுகின்றன. பலவகையான வேலைகளை ஆசிரியர் மாணவருக்குச் செய்துகாட்டி விளக்குகிறார்.

உயர்நிலைப் பள்ளிகள்

13 ஆண்டுவரை இருபாலாருக்கும் ஒரு பள்ளிக்கூடத்திலேயே கல்வி யளிக்கப்படுகிறது. குடும்பத்தைப் பேணுவதற்கான பாடங்கள் பெண்களுக்குத் தனியே சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. மிகுதியாக உள்ள உயர்நிலைப் பள்ளிகள் **மல்டிலேடரல் உயர்நிலைப் பள்ளிகள்**

(Multilateral High Schools) எனப்படும். பிறநாட்டு மொழி, இசை, வணிகம் ஆகிய பாடங்களை இவை கற்பிக்கின்றன. தொழிற் பள்ளிக்கூடங்களும் தனியே உள்ளன; இப்பள்ளிக்கூடங்களுக்குத் தொழிற்சாலைகள் தொழிலாளரை அனுப்ப வேண்டுமென்றும், பள்ளிக் கூடங்களில் தொழிலாளர் இருக்கும் நேரத்தையும் அவர்கள் வேலைபார்த்த நேரமாகக் கருதவேண்டு மென்றும் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

மெல்பர்னில் பள்ளிக்கூட நிருவாகிகள் பாடப் புத்தகங்களை விலைக்கு வாங்கி மாணவருக்கு ஓராண் டுக்கு வாடகைக்கு விடுகின்றனர். கல்லூரிகளில் ஆசிரியர்களாயிருந்தவர்களே உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியராக நியமிக்கப்படுகின்றனர்; தலைமை ஆசிரியருக்குப் பள்ளிக்கூட எல்லைக்குள்ளேயே இல்லம் கொடுக்கப்படுகிறது; பல பள்ளிக்கூடங்களில் சேமிப் புப் பேங்குகள் உண்டு. அச்சகமுள்ள பள்ளிக்கூடங் களில் மாத மிருமுறைப் பத்திரிகை ஒன்றை மாணவர் அச்சிடுகின்றனர். மாணவர் விடுதிகளில், ஒரு மாணவர் வாரத்துக்கு ஒரு ரூபாய்தான் உபரிச் செலவு செய்ய லாம். மூன்று வாரங்களுக்கு ஒரு முறையே திரைப் படங்களுக்குச் செல்லலாம்.

பல்கலைக் கழகங்கள்

ஆஸ்திரேலியாவில் ஆறு பல்கலைக் கழகங்களும் 25 கல்லூரிகளும் இருக்கின்றன. இவை அமெரிக்க முறையில் அமைந்திருக்கின்றன. கல்லூரிகளைப் போலவே பல்கலைக் கழகங்களும் கல்வி கற்பிக்கும்

நிலையங்களாக உள்ளன; பல்கலைக் கழகங்களைப் போலவே கல்லூரிகளும் தேர்வு நடத்திப் பட்டம் கொடுக்கும் உரிமை பெற்றிருக்கின்றன. இடம் பெறக் கோருவோர் எல்லோரையும் கல்லூரிகள் கட்டாயமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற சட்டம் அங்கே உள்ளது. கல்வி கற்றுக்கொள்ள மக்களுக்குப் பிறப்புரிமை உண்டு என்று ஆஸ்திரேலியர் கருதுவதால், கல்லூரிகளில் இடமில்லை என்ற சொல் அங்கில்லை.

கிராமங்களில் புதிய பல்கலைக் கழகங்கள் அமைக்கப்படுவதும், அவற்றில் பணியாற்றும் ஆசிரியருக்கு நகரங்களிலுள்ள பல்கலைக் கழகங்களில் கொடுக்கப்படுவதை விடக் கூடுதலான ஊதியம் கொடுக்கப்படுவதும், ஆசிரியர் பல பல்கலைக் கழகங்களில் மாறிமாறிப் பணியாற்றுவதும், ஒவ்வொரு கல்லூரிக்கும் 100 ஏக்கர் பரப்புள்ள பூங்காவும் விளையாடுமிடமும் இருப்பதும் ஆஸ்திரேலியக் கல்வி முறையின் சிறப்புக்களாகும்.

சிட்னி பல்கலைக் கழகத்தில் வைத்தியக் கல்வி சிறப்பாகப் பயிற்றுவிக்கப்படுகிறது. இந்திய மாணவர் சிலர் இங்கே கல்வி கற்று வருகின்றனர். மேலும் பல இந்தியர் ஆஸ்திரேலியப் பல்கலைக் கழகங்களில் கல்விகற்க உதவியாக, அந்த அரசியலார் சில ஏற்பாடுகள் செய்துள்ளனர்.*

---

* ஆஸ்திரேலியாவில் கல்வி பயிலும் இந்திய மாணவர்களின் நற்பணியை ஆஸ்திரேலிய ஹைகமிஷனர் பாராட்டியிருப்பதை அவருடைய செய்தியில் காண்க.

இலக்கிய வளர்ச்சி

மெல்பர்ன் பல்கலைக் கழகத்தார் ஆஸ்திரேலியாவைப் பற்றி அரிய நூல்கள் சிலவற்றை அண்மையில் வெளியிட்டிருக்கின்றனர். அதற்கு முன்னர் ஆஸ்திரேலிய நாட்டைப் பற்றிய சிறந்த நூல்கள் வெளிநாட்டாரால்தான் இயற்றப்பட்டன. இவற்றுள் சிறந்ததை **ஹார்ட்லி கிராட்டன்** என்னும் அமெரிக்கப் பத்திரிகாசிரியர் எழுதினர். கிரிக்கட்டையும் உயிரினங்களையும் பற்றிய நூல்களையும், குழந்தை இலக்கியத்தையுமே ஆஸ்திரேலியர் எழுதிவந்தனர். 1930-ஆம் ஆண்டுக்குப்பின் எல்லாத் துறைகளிலும் நூல்கள் எழுதப்பட்டு வருகின்றன. இந்தச் சிறந்த பண்பாட்டை ஆஸ்திரேலியர் அமெரிக்கரிடமிருந்து கற்றுப் பின்பற்றி வருகின்றனர் என்று கூறலாம். இவ்வாறு நாமும் முனைந்து நம் மக்களின் அறிவு வளர்ச்சிக்காகத் தமிழில் சிறந்த நூல்களை எல்லோரும் படிக்கும்படி எளிய நடையில் எழுதி வெளியிடவேண்டும்; நமது நாட்டிற்குப் பெருமை தரும் கலைகளைப் புதுமுறையில் எழுதிப் பரப்ப வேண்டும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் பத்திரிகைகள் வெளிவராததாலும், திரைப்படக் காட்சிகள் நடைபெறாததாலும், பெரும்பாலான ஆஸ்திரேலியர் புத்தகங்களைப் படிப்பதிலே அன்று தம் நேரத்தைப் பயன்படுத்துகின்றனர். ஆஸ்திரேலிய இலக்கியம் அண்மையில் பெரிதும் முன்னேறியிருக்கிறது. அது வளம் நிரம்பியது. **ஹென்றி லாசன், டாம் காலின்ஸ்** இருவரும் புகழ்பெற்ற சிறுகதை எழுத்தாளர்கள். பெர்த் பல்கலைக் கழகத்தின் துணைத் தலைவரான **வால்ட்டர் முர்டோக்** என்பவரின்

கட்டுரைகள் மிகுதியாகப் படிக்கப்படுகின்றன. **ஹென்றி ஹான்டர் ரிச்சர்ட்சன், காத்தரைன் பிரிச்சர்ட்** இருவரும் நல்ல சிந்தனையாளர்கள். பின்னவரின் நாவல்கள் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதின் விளைவாக ஆஸ்திரேலிய வரலாற்றில் ஏற்பட்ட மாறுதல்களைச் சித்திரித்துக் காட்டுகின்றன. இவை பிரெஞ்சு ரஷ்ய மொழிகளிலும் வெளியாகியுள்ளன.

இந்தியாவைப் பற்றிய புத்தகங்களை விரும்பிப் படிப்போர் பலர் ஆஸ்திரேலியாவில் இருக்கின்றனர். ஆனால் இவர்கள் வெளிநாட்டார் வாயிலாகவே நம் நாட்டைப்பற்றி அறிந்து கொள்ளுகின்றனர். ஆஸ்திரேலிய நகரங்களிலுள்ள கடைகளில் காந்தியடிகளைப் பற்றிய பல புத்தகங்களைக் கண்டேன். அவை **ஸ்டான்லி ஜோன்ஸ், கால் ஹீத், லூயி பிஷர், ஜான் கந்தர்** போன்றோர் எழுதியவை. நமது நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் உலகின் மற்ற மக்களைப்போல ஆஸ்திரேலியரும் இந்தியக்கலை, சமூகப் பழக்க வழக்கங்கள், சமய ஒழுக்கம் இவைகளைப் பற்றி அறிய ஆவல் கொண்டுள்ளனர். இந்த நிலையை நாம் தக்கபடி பயன்படுத்தி, நம் நாட்டைப் பற்றிய செய்திகளைப் பரப்பவேண்டும்.

தேசியப் பல்கலைக் கழகம்

ஆஸ்திரேலிய நாட்டுப் பண்பாட்டை வளர்க்கவும், பட்டம் பெற்றோர் ஆராய்ச்சியில் ஈடுபடவும் துணையாக **ஆஸ்திரேலிய தேசியப் பல்கலைக் கழகம்** கான்பராவில் உருவாகியிருக்கிறது. சீனாவில் ஆஸ்திரேலியத் தூதராயிருந்த **டாக்டர் கோப்லண்டு** இப் பல்கலைக் கழகத்தின்

துணைத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். 17,000 மக்களே கான்பராவில் இருந்தும், இங்கு ஒரு பல்கலைக் கழகமும் ஏற்பட்டிருப்பது ஆஸ்திரேலியரின் முற்போக்குக்கு ஏற்ற எடுத்துக்காட்டாகும். இப்போது உலகத் தலை நகரங்களிலேயே, பல்கலைக் கழகம் இல்லாதது ஈராக் நாட்டின் தலைநகரான **பாக்தாத்** (Bagdad) மட்டுந்தானும்! பல்கலைக் கழகக் கல்வியை மிகுதியான் மாணவர் பெறவேண்டுமென்ற நோக்கத்தோடு ஆஸ்திரேலிய அரசியலார் பெற்றோர்களுக்கு வருமான வரியில் சலுகை காட்டுகின்றனர்; பொருளாதார காரணங்களால், மூத்த மகனுடைய பல்கலைக் கழகக் கல்விச் செலவுக்கு மட்டுமே இந்தச் சலுகை உண்டு. மேற்கு ஆஸ்திரேலியாவில்* மட்டும் பல்கலைக் கழகக் கல்விகூட இலவசமாகக் கற்பிக்கப்படுகிறது; அந்த இராஜ்ஜிய அரசியலார் கல்விச் செலவு முழுவதையும் ஏற்றுக் கொள்ளுகின்றனர்.

மொழிப் பிரச்சினை

மொழிப் பிரச்சினையைப்பற்றியும் ஈண்டுக் குறிப்பிடலாம். ஆஸ்திரேலியாவில் வந்து குடியேறுவோர் தம் முன்னோர் மொழி எதுவாயினும் சரி அங்கு வந்த

* மேற்கு ஆஸ்திரேலியா; இது ஆஸ்திரேலிய இராஜ்ஜியங்களுள் நிலப்பரப்பால் பெரியது; ஜனத்தொகையால் சிறியது; இங்கு 5 லட்சம் மக்களே உள்ளனர். இதில் 3 லட்சம் பேர் தலைநகரான பெர்த்தில் வாழ்கின்றனர். சுவான் ஆற்றின் கரையில் இந்த அழகிய நகரம் அமைந்திருக்கிறது. தங்கச் சுரங்கங்கள் இருப்பதால் இந்த இராஜ்ஜியம் செல்வச் சிறப்புடன் விளங்குகிறது.

வுடன் வட்டார மொழியாகிய (Regional Language) ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ளுவதையே தம் முதற் கடமையாகக் கொண்டுள்ளனர். உயர்நிலைப் பள்ளிகளிலும் அந்த வட்டார மொழி ஒன்று மட்டுமே புகட்டப்படுகிறது. பல்கலைக் கழக மாணவர் மற்றோர் ஐரோப்பிய மொழியையும் கட்டாயமாகக் கற்ருக வேண்டும்.

மற்ருெரு சிறப்பு

ஆஸ்திரேலியக் கல்வி முறையின் ஒரு சிறப்பு, தகுதியுள்ள மாணவருள் சிலர் ஓர் ஆண்டுக்கு வெளி நாடுகளிலுள்ள ஆஸ்திரேலியத் தூதர்களுடன் இருந்துவர அனுமதிக்கப்படுவதாகும். குறிப்பிட்ட மாணவர் அந்தத் தூதருடன் அந்த நாட்டின் பல இடங்களில் பிரயாணம் செய்து, அனுபவம் பெற்று, அந்நாட்டின் மொழியைப் பயின்று, வருங்காலத்தில் அரசியல் துறையில் முதலிடம் பெற வாய்ப்புப் பெறுகிருர். இதைப் போன்ற முறை நம் நாட்டில் கையாளப்பட்டால் தூதர் வேலைக்குப் பொருத்தமான ஆட்கள் கிடைப்பதிலுள்ள சிரமம் சில ஆண்டுகளில் நீங்கிவிடும். ஆங்கிலம் மட்டும் தெரிந்தவர்களையே ஆங்கிலம் பேசாத நாடுகளுக்கும் தூதராக நியமிக்கவேண்டிய நிலையும் மாறும்.

—x—

11. விவசாயம்

ஆஸ்திரேலியா ஒரு விவசாய நாடு ; அதன் உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் பெரும் அளவு உணவுப் பொருள்களே. இந்தியாவுக்கு மட்டும் ஆண்டுதோறும் 20 கோடி ரூபாய் விலையுள்ள உணவு வருகிறது. இதில் பெரும் பகுதி கோதுமையும், கோதுமைப் பொருள்களுமே ஆகும்.

நிலையான விற்பனை விலை

பொருளாதார நிலையிலுள்ள மாறுதல்கள், தங்க விலையில் ஏற்ற இறக்கம், போர், சில நாடுகளில் உணவுப் பற்றுக்குறை ஆகிய காரணங்களால் உணவின் உலகவிலை அடிக்கடி மாறுகிறது. சாதாரண உழவன் தன் விளை பொருள்களை இம்மாதிரி திடீரென மாறும் விலைக்கு விற்பது அவனுடைய எதிர்காலத்துக்கு நன்மை தருவதன்று. ஆகவே, ஆஸ்திரேலிய அரசியலார் சில ஆண்டுகளாக ஒரு கொத்து* 5 ஷில்லிங் 2 பென்ஸ் என்ற விலைக்கே (Guaranteed Home Consumption Price) உள்நாட்டில் விற்கின்றனர் ; ஏற்றுமதியாகும் விளை பொருள்களை உழவரிடமிருந்து குறிப்பிட்ட ஒரு விலைக்கு (Wheat Stabilisation Price) அரசியலாரே வாங்குகின்றனர். இவ்வாறு சேகரித்த உணவை வெளியுலகச் சந்தைகளின் நிலவரப்படி மற்ற நாடுகளுக்கு விற்கின்றனர். உழவரிடமிருந்து வாங்கும் விலைக்கும் மற்ற நாடுகளுக்கு விற்கும் விலைக்கும் உள்ள வேறுபாட்டுக்கு **வீட்டிபரன்ஷியல்** (Wheat Differential) என்று பெயர்.

---

* கொத்து (Bushel) என்பது 60 பவுண்டுக்குச் சமானமாகும்.

இந்தத் தொகையை விவசாயத் தொழில் வளர்ச்சிக்குப் பயன்படுத்துகின்றனர்.

பார்சன் பிரதர்ஸ் என்னும் ஒரு வாணிபக் குழு மெல்பர்னில் இருக்கிறது. இக்குழுவினர், கோதுமையை உள்நாட்டில் நிலவும் விற்பனை விலைக்கு வாங்கி, ரவை, சீமை அவல் போன்ற பொருள்களாகச் செய்கின்றனர். ஏற்றுமதி செய்யும்போது அரசியலாருக்கு வீட் டிபரன் ஷியல் செலுத்த வேண்டியிருப்பதாகவும் இக்குழுவின் தலைவர் என்னிடம் கூறினர்.

கோதுமையின் சர்வதேச விலையைத் தங்கத்தின் விலையுடன் இணைத்து ஐக்கியநாடுகள் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர்; இதன்பயனாக 1949-ல் நாணய மதிப்புக் குறைந்தவுடன் தங்கத்தைப்போல கோதுமையின் விலையும் தானே ஏறிவிட்டது, சணல்போன்ற நமது ஏற்றுமதிப் பொருள்களின் விலையை இவ்வாறு தங்கத்தின் விலையுடன் இணைக்க நம் நாட்டின் பிரதிநிதிகள் முயற்சி செய்யாமல் விட்டுவிட்டதை எவ்வளவு கண்டித்தாலும் தகும்.

ஆஸ்திரேலியாவில் பல ரயில் நிலையங்களில் குழவு இரும்பால் குதாம்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு லட்சம் கொத்து கோதுமையை வைத்திருக்கலாம். இவை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மாற்றத்தக்க முறையில் உள்ளன. அதாவது, மிக விரைவில் இவைகளைப் பகுதி பகுதியாய்ப் பிரித்து ஒன்று சேர்த்து விடலாம். ஒரு மணி நேரத்தில் 1600 டன் கோதுமையை ரயிலில் ஏற்றிவிடும் கருவிகளும் இந்நிலையங்களில் உண்டு. கோதுமையை அவ்வப்போது நிறுத்துச்

சாக்குகளில் கட்டி ஏற்றுமதி செய்ய மிகுதியான சணலை இந்தியாவிலிருந்து வாங்க வேண்டியிருக்கிறது; பலதடவை நிறுப்பதாலும், சாக்குகளில் கட்டுவதாலும் நேர்மும் வீணுகிறது. இவற்றைத் தடுக்க ஒரு குறுக்கு வழியை ஆசிகள் கண்டுள்ளனர். கோதுமையைப் பெரும் அளவில் கொள்ளும் பகுதிகள் 'ட்ரெய்லர்'களிலும் ரயில்களிலும், கப்பல்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. வயலில் அறுவடையானது தொடங்கி வெளிநாடு செல்லும்வரை இயந்திரங்கள் மூலமே பல வாகனங்களில் கோதுமை வருகிறது; துறைமுகத்தில் இருக்கிற ஒரு குழாயின் வாயில்மூலம் கோதுமை கப்பலில் கொட்டப் படுகிறது. இக்கருவிக்கு வீட் டெர்மினல் என்று பெயர். இது 50 லட்சம் ரூபாய் செலவில், கான்கிரீட்டால் செய்யப்பட்டிருக்கிறது. இது தன் வாயிலாகச் செல்லும் கோதுமையை நிறுத்துவிடுகிறது. ஒரு நேரத்திலேயே 50 டன் நிறையை இதன் வழியாக அனுப்ப இயலுமாம்! கோதுமையிலுள்ள தூசியை இந்தக் கருவியின் சல்லடை பிரித்து விடுகிறதாம்; இவ்வாறு சேரும் தூசி சில விஞ்ஞான முறைகளின்படி பக்குவமான உணவாக்கப் பட்டுக் கால்நடைகளுக்கு ஊட்டப்படுகிறதாம்.

உற்பத்தியும் அடக்க விலையும்

ஆண்டுதோறும் 210 மிலியன் கொத்து கோதுமை உற்பத்தியாகிறது. மழை குறைவாகப் பெய்தும் விளைவு கூடுதலாயிருக்கிறது. விதை விதைத்தது முதல் கதிரறுக்கும்வரை மழை பெய்கிறது. செயற்கை முறைகளாலும் நீர்ப்பாசனம் செய்யப்படுகிறது. இவற்றால் கோதுமையின் அடக்க விலை மிக மலிவாக இருக்கிறது.

விவசாயப் பண்ணைகள்

மற்றத் தொழில்களைப்போலவே விவசாயத்திலும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. உழவுசால் தோண்டுவது, விதை விதைத்தல், உரம் போடுதல், அறுவடை செய்தல், தாளடித்தல், மகசூலையும் வைக்கோலையும் எடைபோட்டுக் கட்டுதல் ஆகிய வேலைகளைக் குதிரைகளின் உதவியுடன் ஓரிருவர் இயக்கும் சிறு இயந்திரங்கள் செய்துவிடுகின்றன. ஆஸ்திரேலியாவில் சிறு விவசாயப் பண்ணைகளைக் காணுதல் அரிது. 500 முதல் 1000 ஏக்கர்வரை பரப்புள்ளவைகளாக இருப்பதால், அவை பெரிய தொழிற்சாலைகள் போல் தோற்றமளிக்கின்றன. இந்து சட்டப்படி தந்தையினுடைய சொத்து மக்களுக்குள் தலைமுறை தலைமுறையாகச் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டு வருவதால் விவசாய நிலங்கள் நம் நாட்டில் மிகக் குறுகிய பரப்புள்ளவையாக இருக்கின்றன. இவை மேலும் சிறுதுண்டுகளாகி விடாதபடி சட்டமியற்ற வேண்டும்.

இடையூறுகள்

மண்ணரிப்பைத் தடுக்கவும் பாலைவனத்தைப் பண்படுத்தவும் ஆஸ்திரேலியர் பௌதீக இராசயனப் பொருள்களைப் பயன்படுத்தி வருகின்றனர். பசிபிக் பெருங்கடலில் எவ்வளவு மீன்கள் இருக்கின்றனவோ அவ்வளவு வெள்ளை முயல்கள் ஆஸ்திரேலியாவில் இருக்கின்றன. இவை உழவருக்குப் பெரும் இடையூருக இருக்கின்றன. இந்த இடையூறுகளைக் குறைக்கவும் பயிர்களைத் தாக்கும் பூச்சிகளால் ஏற்படும் நோய்களைத் தடுக்கவும் அரசியலார் முயன்று வருகின்றனர்.

விவசாயத்துக்கு மற்ருேர் இடையூறு மழைக் குறைவால் தண்ணீர் போதியதாக இல்லாதிருப்பதாகும். தரைமட்டத்துக்குக் கீழே ஊற்று இருப்பதால் குழாய்களை இறக்கித் தண்ணீர் வசதிசெய்ய முயற்சி நடைபெறுகிறது. சிற்சில இடங்களில் 6000 அடிக்குக் கீழும் குழாய்கள் இறக்கியுள்ளனர். பூமிக்குக் கீழே உள்ள தண்ணீர் ஊற்றுக்களைக் கண்டுபிடிப்பதில் அரசியலார் பெரும் பொருள் செலவிடுகின்றனர். **இட்ரிஸ்** என்பவரும் மற்றச் சிறந்த நாவலாசிரியர்களும் தங்கள் எழுத்தோவியங்களின் வாயிலாகத் தண்ணீர் பிரச்சினையை மக்களின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றனர். கடலுடன் கலந்து வீணுகும் தண்ணீரைப் பயன்படுத்தி மின்சார உற்பத்தியைப் பெருக்கி அதைத் தொழிற்சாலைகளுக்குக் கிடைக்கும்படி செய்யவும், ஒரு பேரணை உருவாகி வருகிறது.

விவசாயக் கல்வி

விவசாய அனுபவத்துடன் விஞ்ஞான அறிவும் கூடியவர்கள் விவசாயத் தொழிலிற் சிறப்படைவதால், இளைஞருக்குத் தொழிற்கல்வியின் அடிப்படையைப் புகட்டும் பொறுப்பை அரசியலார் ஏற்றுக்கொள்கின்றனர். விவசாய இலாகா வயல்களில் சோதனை நடத்துகிறது; விவசாய முறைகளைப்பற்றிய ஆலோசனைகளைத் தெரிவிக்கிறது; விவசாயப் பிரச்சினைகள் பற்றி அரங்கங்களைக் கூட்டுகிறது.

விவசாயத்தை ஆஸ்திரேலியர் நுட்பமான ஒரு தொழிலாகக் கருதுகின்றனர். விவசாயக் கல்வியில் இந்நாடு வெகுவாக முன்னேறி இருக்கின்றது. உழவருக்

கான பத்திரிகைகள் அவர்களுக்குப் பயன்படும் செய்தி களை அவ்வப்போது தெரிவிக்கின்றன. கம்பளி, பால் பண்ணைப் பொருள்கள் இவற்றிற்கான அரசியலாரின் பகுதிகளும் உழவர் சங்கங்களும் விவசாயிகளின் கல்வி நிலையை மேம்படுத்த முயன்று வருகின்றன. உயர்நிலைப் பள்ளிகள் விவசாயத்தில் அனுபவ வாயிலாகப் பயிற்சி கொடுக்கின்றன. இவற்றில் விவசாயத்திற்கெனத் தனியே சில உண்டு. இவை பொதுவான கல்விப் பயிற்சியோடு, கிராம வாழ்க்கையில் ஈடுபடக்கூடியவர் களுக்குத் தக்க பயிற்சியும் டிராக்டர் என்னும் இயந் திரக் கலப்பையைப் பயன்படுத்தும் பயிற்சியும் கொடுக் கின்றன. இவ்வாறு பயின்றவர்கள் விவசாயக் கல்லூரி யிலும், உயிரினங்களின் மருத்துவக் கல்லூரியிலும் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

காமதேனு

ஆஸ்திரேலியாவின் காமதேனு ஆடுகளேயாகும். அவற்றின் மாமிசமும் ரோமமும் தோலும் மொத்த ஏற்றுமதியில் சரிபாதிக்குமேல் இருக்கின்றன; இவ் வகையில் தங்கச் சுரங்களை விட மிகுதியான செல்வம் கிடைக்கிறது. செல்வ நிலையைக் குறிக்கும் அளவு கோலாகவும் ஆடுகள் விளங்குகின்றன. ஒருவருடைய செல்வம் இன்னதென்று குறிப்பிட, இத்தனை வேலி நில முள்ளவர் என்று தஞ்சையிலும், இத்தனை கதிர்கள் (Spindles), வேலை செய்யும் ஆலை முதலாளி என்று கோவையிலும், இத்தனை ஏக்கர் ரப்பர்த் தோட்டம் உடையவர் என்று மலேயாவிலும் கூறுவதுபோல, இவ் வளவு ஆடுகள் உடையவர் என்று ஆஸ்திரேலியாவில் கூறுவர்.

ஆடு நமக்கு உணவும் உடையும் தருகிறது; பயிருக்கு வேண்டிய உரத்தையும் அளிக்கிறது. எனவே, ஆஸ்திரேலியர் ஆடுகளைச் சீரிய முறையில் பண்ணைகளில் வைத்துப் பேணுகிறார்கள்; பண்ணைகளை விஞ்ஞான முறைப்படி நடத்துகிறார்கள். முதல்தரமான கம்பளியும் அடர்த்தியான கம்பளியும் உள்ள செம்மறி ஆடுகளைப் பராமரிப்பவருக்குப் பல, பரிசுகள் ஆண்டுதோறும் நடைபெறும் மாநாடுகளில் கொடுக்கப் படுகின்றன. இவ்விழாக்களில் ஆடுகள் ஏலம் போடப் படுகின்றன. செம்மறி ஆடுகளில் சில ஒவ்வொன்றும் 3,000 ரூபாய்க்கு விற்பனையாகின்றன.

பழங்கள்

ஆஸ்திரேலியாவின் மற்றோர் ஏற்றுமதி ஆப்பிள் பழம். இது டெமக்ராட்ஸ், ஜோனதன், கிளியோபாட்ரா, க்ரானிஸ்மித், கோல்டன் டெலிசியல் எனப் பல ஜாதிகளாகப் பிரித்து விற்கப்படுகிறது. பீச்சஸ், திராட்சை, அன்னுசி, செர்ரிஸ், டோரியன், ஆரஞ்சு போன்ற பலவகைப் பழங்களும் அபரிமிதமாகக் கிடைக்கின்றன. பல நாட்களுக்குப் பின்னரும், சுவை குன்றாதபடி இந்தப் பழங்களை உண்பதற்கு ஏற்ப, இவற்றைப் பக்குவப்படுத்தித் தகர டப்பிகளில் அடைக்கும் தொழில் (Canning and Food Processing Industry) உயர்ந்த நிலையை அடைந்திருக்கிறது. டோரியன் பழத்தை ஆஸ்திரேலியர் ஐஸ்கிரீமிலும் கேக்குகளிலும் சேர்க்கின்றனர். வாழைப்பழம் அழுகிவிடுமுன், அதை இந்த முறைப்படி விவாசாய இலாகாவினர் பாதுகாக்கின்றனர். சரக்கு மிகுதியாயிருக்கும்போது, ஒரு பகுதி பக்குவமாக்கப்படுவதால், சரக்குக் கூடுதலாக இருந்தா

லும் குறைவாக இருந்தாலும் சந்தைகளில் ஒரே விலை இருந்து வருகிறது. பழங்கள் உட்பட அநேகமாக எல்லாப் பொருள்களும் எடைக் கணக்குப்படிதான் விற்கப்படுகின்றன. விறகைக் கார்டு (Cord) கணக்காக விற்பனை செய்யவும் ஏற்பாடு நடந்து வருகிறது. ஒரு கார்டு என்பது 28 கன அடி கொண்டதாகும். பழங்கள் சேகரிப்பவர் பெரும்பாலும் காலை ஐந்து மணிக்கு வேலை தொடங்கிவிடுகின்றனர். பறிக்கும் அளவுக்குத் தக்கபடி இவர்களுக்குக் கூலி உண்டு.

முட்டை ஏற்றுமதி

ஆஸ்திரேலியாவில் கோழிப்பண்ணைகள் மிகுதியாக இருக்கின்றன. முட்டை உற்பத்தியைப் பெருக்க அரசியலார் பெருமுயற்சி செய்து வருகிறார்கள். முட்டையை வகைவகையாகப் பிரிக்கவும், சரியான விலைக்கு விற்கவும் ஒரு குழு (Egg Marketing Board) இருக்கிறது. முட்டையினுள் உள்ள வெள்ளை, மஞ்சள் தாதுக்களை மட்டும் பிரித்து எடுத்துவிடும் ஓர் இயந்திரத்தை இந்தக் குழுவின் ஆராய்ச்சிப் பகுதியினர் கண்டுபிடித்துள்ளனர். இரண்டாயிரம் முட்டைகளிலுள்ள உணவுப் பகுதிகளை எடுத்துச் சேர்த்து ஏற்றுமதி செய்வதற்கேற்ற பல அளவுகளுள்ள புட்டிகளில் எட்டுமணி நேரத்தில் இந்த இயந்திரம் அடைத்துவிடுகிறது.

பால் பண்ணைகள்

ஆஸ்திரேலியாவில் பால் பண்ணைகள் பெரிய அளவில் நடத்தப்படுகின்றன. இவற்றில் ஆடையுடன் கூடிய பால், சத்துள்ள பால், இனிப்புச் சுவை நீக்கப்பட்ட பால், நுரை நீங்கிய பால் (Skimmed milk)

உறைந்த பால், கருவில்லாத பால் (Sterilzed milk), பால்தூள், பாலாடை என்று விதவிதமாகப் பக்குவம் செய்து பிரித்துப் பாலை விற்பனை செய்கிறார்கள். இந்தியாவிலுள்ள விலையில் ஐந்தில் ஒரு பங்குக்கு ஆஸ்திரேலியாவில் சுத்தமான பால் கிடைக்கிறது; பாலில் தண்ணீர் சேர்க்கும் பழக்கம் அங்கே இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஜனத் தொகையைப் போலப் பதினேழு மடங்கு கால்நடைகள் இருப்பதாலும், நாட்டின் பெரும் பகுதி வறண்ட பிரதேசமாக இருப்பதாலும், தண்ணீரைவிடப் பால் எளிதாகக் கிடைக்கிறது. கிளாக்ஸோ, ஓவல்டின், ஹார்லிக்ஸ், நெசில்ஸ், காட்பரீஸ் போன்ற பால் உணவுத் தொழிற்சாலைகள் அங்கே பெருவாரியாக இருக்கின்றன. ஆஸ்திரேலியாவில் ஓர் ஆண்டுக்கு நூறு கோடி காலன் பால் உற்பத்தியாகிறது. கிராமங்களிலும் நெடுந் தொலைவிலுள்ள விவசாயப் பண்ணைகளிலும் வாழும் குழந்தைகளுக்குக் கல்விநிலையங்கள் வாயிலாகக் கட்டணமின்றிப் பாலூட்டும் முறையை அரசியலார் வகுத்திருக்கின்றனர். நாட்டுப்புறத்துப் பசுக்களின் பாலெல்லாம் உழவர் குழந்தைகளுக்குப் பயன்படாமல் நகர மக்களுக்கு மட்டும் உதவும் கொடிய நிலை ஆஸ்திரேலியாவில் இல்லை.

அங்கே, பாலில் வெண்ணெய்ச் சத்து மிகுதியாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. வெண்ணெய் அந்த நாட்டின் பெரிய ஏற்றுமதியாக விளங்குகிறது. அதற்கேற்ற பாலைத் தயாரிப்பதில் பால் பண்ணையினர் முனைந்துள்ளனர். அரசியலாரின் நுண்கிருமிகளைச் சோதிக்கும் நிபுணர்கள் (Bacteriologists) இப் பண்ணைகளை அடிக்கடி பார்வையிடுகின்றனர்.

பால் பண்ணைகளில் பால் கறக்கவும், உணவு கொடுக்கவும், 300 டன் நிறையுள்ள வைக்கோல் "பேல்"களை அடுக்கி வைத்திருக்கவும் தனித்தனியே இடங்கள் உண்டு. அமெரிக்கரைப் போலவே ஆஸ்திரேலியரும் பாலைக் கையால் கறப்பதில்லை. பால் கறக்கும் கருவி (Milking Machine) யிலுள்ள குழாயைப் பசுவின் மடியில் அவர்கள் இணைத்துவிடுகிறார்கள். பாலைக் குளுமையாக்கும் கருவி பல பண்ணைகளில் இருக்கிறது. அப்பண்ணையின் பல இடங்களில் கறக்கப்படும் பால் முழுவதும் ஒரு கருவியினுள் விழும்படி குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன. பால் டப்பிகளைத் தானே கழுவிப் பின்னர் புதுப் பாலை அவற்றில் அடைத்துவிடும் இயந்திரங்களும் எல்லாப் பண்ணைகளிலும் உண்டு. இத்தகைய கருவிகள் ஆஸ்திரேலியாவிலேயே செய்யப்படுகின்றன. பால் பொருள்களைச் செய்யும் சிறந்த தொழிற்சாலையின் மூலதனம் 20 லட்சம் ரூபாய் வரை ஆகிறது.

இப்போது ஆஸ்திரேலியாவில் ஓரிடத்தில் ரோடோலாக்டர் (Rotolactor) என்னும் கருவி பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இயந்திரம் ஒரு நேரத்திலேயே ஐம்பது பசுக்களிலிருந்து பாலைக் கறந்து கணக்கிட்டு விடுகிறது.

—x—

12. மற்றத் தொழில்கள்

ஆஸ்திரேலியா இந்தியாவைப்போல இரண்டரை மடங்கு பரப்புள்ள நாடாக இருந்தும், இங்கே திருவாங்கூர்—கொச்சி இராஜ்ஜிய மக்களின் எண்ணிக்கைக்குச் சமமானவர்களே வாழ்கின்றனர்கள். சிறந்த போக்கு வரவு வசதிகளும் மின்சார வசதியும் விரைவான தொழில் வளர்ச்சியும் ஏற்பட்டிருப்பதன் விளைவாக ஆஸ்திரேலியா இன்று பொருளாதாரத் துறையில் நன்னிலை எய்தியுள்ளது. பிரிட்டன் தரவேண்டிய கடன் தொகையில் (Sterling Balances) பெரும் பகுதியைச் செலவு எழுதிக்கொள்ள ஆஸ்திரேலியர் சம்மதித்திருப்பதே இதற்குப் போதிய சான்று ஆகும்.

வெளிநாட்டு மூலதனம்

1860-ல் தங்கம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே ஆஸ்திரேலியாவின் தொழில் வளர்ச்சி தொடங்கிற்று. இப்போது அநேகமாக எல்லாவிதமான பொருள்களும் இராசயனக் கருவிகளும் மருந்துகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. அணுக்குண்டு விழுந்தால் பிரிட்டன் நாசமாகிவிடக்கூடியதை எதிர்பார்த்துப் பல தொழிற்சாலைகள் ஆஸ்திரேலியாவுக்கு மாற்றப்பட்டு வருகின்றன. அமெரிக்கரும் தம்மிடம் உள்ள உபரியான மூலதனத்தில் ஒரு பகுதியை ஆஸ்திரேலியாவில் முடக்கியுள்ளனர். குறைவான வரிகளை விதிப்பது, இடங்களை மான்யம் கொடுப்பது, மலிவான விலைக்கு மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்வது ஆகியவை ஆஸ்திரேலிய அரசியலாரால் உறுதி கூறப்பட்டிருப்பதாலும், தொழிற்சாலைகளின் நிருவாகத்தில்

பெரும்பான்மையான பங்கு உள்நாட்டினருக்கு இருக்க வேண்டுமென்ற நிபந்தனை இல்லாததாலும் (இந்தியாவுக்கு வரத் தயங்கும்) அமெரிக்க மூலதனம் ஆஸ்திரேலியாவுக்கு எளிதில் கிடைக்கிறது.

நாட்டிலுள்ள மூலப்பொருள்கள் திறமையுள்ள தொழிலாளர் (Skilled labour) பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரித்து, அதன் பயனாக நிலக்கரி, எஃகு இவற்றின் உற்பத்திகளையே அடுத்த ஐந்து ஆண்டுகளில் மிகுதியாக்க வேண்டுமென்று அரசியலார் முடிவு செய்திருக்கின்றனர். தொழில் வளர்ச்சிக்கு இவ்விரண்டுமே இன்றியமையாத பொருள்கள் ஆகும். இதனாலேயே இந்த முடிவு செய்யப்பட்டது.

பி. எச். பி.

ஆஸ்திரேலியாவில் மிகப் பெரிய தொழிற்சாலை புரோக்கன் ஹில் புரோப்ரயிட்டரி (Broken Hill Proprietory) என்பது; இது சுருக்கமாக 'பி. எச். பி.' எனப்படும். **புரோப்ரயிட்டரி** என்றால் தனிப்பட்ட சிலரைச் சேர்ந்த, கட்டுப்படுத்தப்பட்ட மூலதனம் உடைய குழு (Private Limited Company) என்று ஆஸ்திரேலியாவில் பொருள்படும்.

பி. எச். பி. நியூகாசில் என்ற இடத்தில் இருக்கிறது. நியூகாசில் ஆஸ்திரேலியாவின் தொழில் துறையின் தலைநகராக இருக்கிறது. இதை ஆஸ்திரேலியாவின் ஜாம்ஷெட்பூர் என்று அழைக்கலாம். நியூகாசிலில் 150 தொழிற்சாலைகளும் 5,000 மாணவருள்ள ஒரு தொழிற் கல்லூரியும் இருக்கின்றன. சுரங்கங்களிலிருந்து தொழிற்சாலைகளுக்கு நிலக்கரியைக் கொண்டுபோக ரயில்பாதை

களை இங்கே இத் தொழிற்சாலையினரே அமைத்திருக்கிறார்கள். உலகில் பெரிய வெள்ளிச் சுரங்கம் பி. எச். பி. யைச் சேர்ந்தது. முதலாவது உலகப் போர்க்காலத்தில் வெள்ளி உற்பத்தி செய்வதை விட்டுவிட்டு இக்குழுவினர் எஃகு உற்பத்தி செய்யத் தொடங்கினர். இப்போது இது மிகப் பெரிய எஃகு உற்பத்தி நிலையமாக விளங்குகிறது. ஆஸ்திரேலிய எஃகின் விலை அமெரிக்க எஃகின் விலையில் பாதிதான். ஆஸ்திரேலியா தனக்கு வேண்டிய நிலக்கரியில் நான்கில் மூன்று பங்கை உற்பத்தி செய்கின்றது. மீதத்தை இந்தியாவிலிருந்தும் மற்ற நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்கிறது.

விவசாயமும் தொழில் வளர்ச்சியும்

கோதுமை பயிரிடுவதும் கால்நடைகளை வளர்ப்பதும் தங்கம் தோண்டுவதும் முக்கியத் தொழில்களாக இருந்து வந்தன. 1930-க்குப் பின் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தாலும், நாணய மதிப்புக் குறைவாலும் எல்லா நாடுகளிலும் விவசாய வளர்ச்சி தொழில் வளர்ச்சி ஆகிய இரண்டும் ஏற்பட வேண்டுமென்ற கருத்து இங்கு வலுவடைந்தது. விவசாயப் பொருள்கள், தொழில் வளர்ச்சிக்குப் பயன்படுகிற மூலப்பொருள்கள் இவ்விரண்டில் ஒன்றை மட்டும் வெளிநாடுகளுக்கு விற்கும் கொள்கை நாட்டு நலனுக்கு ஏற்றதன்று என்று பொருளாதார நிபுணர்கள் கூறத் தொடங்கினர். இதன் விளைவாக ஆஸ்திரேலியாவில் வேறுபட்ட பல தொழிற்சாலைகள் தோன்றின.

அமெரிக்காவில் தொழில் வளர்ச்சி மிகுந்திருப்பதால், அந்நாட்டின் விவசாயச் சிறப்பை வெளி உலகத்

தார் உணருவதில்லை. விவசாயப் பொருள்கள் உற்பத்தியில் ஆஸ்திரேலியா அடைந்திருக்கும் வியத்தகு முன்னேற்றம் அந்த நாட்டின் தொழிற் சிறப்பை மறைத்து விடுகிறது. தொழிற்சாலைகள் செய்யும் பல பொருள்களுக்கு இரண்டாவது உலகப் போர்க் காலத்தில் அவசியம் ஏற்பட்டது. பிரிட்டிஷ் தொழிற்சாலைகள் மீது குண்டு விழுந்தது. போரில் ஜப்பான் ஈடுபட்டது. யு—போட்களால் நேச நாடுகளின் கப்பல்களுக்குச் சேதம் ஏற்பட்டது. இந் நிகழ்ச்சிகளின் பயனாக ஆஸ்திரேலியாவின்மீது நேச நாடுகள் அக்கரை காட்டத் தொடங்கின. 1941-க்குப் பின் அமெரிக்காவும் பிரிட்டனும் உதவி செய்ததால் உலகின் தொழில் வல்லமையுள்ள நாடுகளுள் ஒன்றாக ஆஸ்திரேலியா விளங்குகிறது. மின்சார நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக 150 கோடிப் பவுன் வெளிநாடுகளில் திரட்டப்பட்டிருக்கிறது. இரசாயனப் பொருள்களும், மோட்டார்களும் கப்பல்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன ; (சூயஸ் கால்வாய்க்குக் கிழக்கே) தொழில் துறையில் ஆஸ்திரேலியாவுடன் மற்ற நாடுகள் போட்டியிடுவதும் எளிதன்று. 1938-ல் ஆஸ்திரேலியாவின் மொத்த வருமானம் (National Income) 803 மிலியன் பவுனாக இருந்தது ; 1949-ல் இது 1225 மிலியனாக உயர்ந்தது. இதன் மூலம் ஆஸ்திரேலியாவின் தொழில் வளர்ச்சியை உணரலாம்.

சர்க்கரைத் தொழில்

சர்வதேச ஒப்பந்தப்படி உற்பத்தி செய்ய அனுமதிக்கப்பட்ட 9 லட்சம் டன் சர்க்கரையை ஆஸ்திரேலியர் ஆண்டுதோறும் உற்பத்தி செய்கின்றனர். (இந்தியாவில் 13 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தியாகிறது.)

சர்க்கரை ஆலைகளால் அந்த நாட்டுக்கு ஆண்டுதோறும் 12 கோடி ரூபாய் லாபம் கிடைக்கிறது. (இந்திய சர்க்கரையின் விலை மிகுதியாக இருப்பதால், இந்திய மக்களுக்கு ஆண்டுதோறும் 56 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது.) 'கின்னியர்' (Kinnear) என்ற கரும்புச் சாகுபடி செய்யும் கருவி இயந்திரக் கலப்பையுடன் இணைக்கப் பட்டுள்ளது; இது கரும்பை இருபுறமும் வெட்டிக் கட்டுக்கட்டாகக் கட்டிவிடுகிறது. பக்குவமான கரும்பைத் தனித்த ஓர் இயந்திரத்தின் உதவியால் வெட்டி, மீண்டும் அதை ஆஸ்திரேலியர் நடுகின்றனர். ஒரு கரும்பிலிருந்து 12 கரும்புகள் விகிதம் விளைவதால் ஏக்கருக்கு 20 டன்னுக்குமேல் 30 டன் வரை கரும்பு மகசூல் கிடைக்கிறது. ஒவ்வொரு கரும்புக்கும் அதனதன் சுய எடை (Specific gravity)க்கு ஏற்ப விலை கொடுக்கப் படுகிறது; சர்க்கரைச் சத்து மிகுதியுள்ள கரும்புகளுக்குக் கூடுதலான விலை கொடுக்கப்படுகிறது. சில மருத்துவ முறைகளாலும், காயவைத்தும் கரும்புச்சாறு சுத்தம் செய்யப்படுகிறது. இதனின்றும் கிடைக்கும் பொருள் துகளாக்கப்பட்டு ரிபைனரிஸ் (Refineries) என்ற தொழிற்சாலைகளில் வெண்ணிறச் சர்க்கரை உருவாகிறது, இத்தகைய சர்க்கரையை ஆஸ்திரேயர் ஆண்டுதோறும் தலைக்கு 109 பவுண்டுகள் (இந்தியாவில் 10 பவுண்டுக்கும் குறைவு) உட்கொள்ளுகின்றனர்.

ஜாம் தொழிற்சாலைகள்

'ஜாம்' (Jam) என்பது சத்து நிறைந்த இனிப்பான ஓர் உபஉணவு. நமக்குச் சட்னி அல்லது ஊறுகாய் பயன் படுவதுபோல் ஐரோப்பியருக்கு 'ஜாம்'

பயன்படுகிறது. இரண்டு பங்கு சக்கரையும் ஒரு பங்கு பழச்சாறும் சேர்ந்து நீராவியால் சூடாக்கப்படுகிறது. ருசியையும் நிறத்தையும் சரிபார்த்த பிறகு, சிறு தகர டப்பிகளில் அடைத்துச் 'சீல்' வைத்துக் குளிரான இடத்துக்குக் கொண்டுபோகப்படுகின்றது. 'ஜாம்' தொழிற்சாலைகளில், 10,000 தொழிலாளர் வேலை செய்கின்றனர்; ஆண்டுதோறும் பல கோடி ரூபாய் மதிப்புள்ள ஜாம் தயாராகிறது.

துணி

ரயான் என்னும் செயற்கைப் பட்டு தயாரிக்கும் பெரிய தொழிற்சாலைகள் உலகப் புகழ்பெற்ற **கோர்ட்டால்ட்ஸ்** (Courtaulds) கம்பெனியாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஆஸ்திரேலியாவில் துணி உற்பத்தி மிகக் குறைவு: பிரிட்டிஷ் துணி அங்கு இறக்குமதியாகின்றது. சில ஆண்டுகளாக இந்தியத் துணி—குறிப்பாகப் பக்கிங்ஹாம் கர்னடிக் மில் சரக்குகள்—ஓரளவு விற்பனையாகி வருகின்றன.

அரசியலார் உதவி

இணையற்ற பொருளாதார நிபுணராகிய **காலின் கிளார்க்** (Colin Clark) வகுத்த திட்டமாக வரையறுக்கப்பட்ட பொருளாதார முறை (planned Economy)யை அரசியலார் அமலுக்குக் கொண்டு வந்திருக்கின்றனர்.

விவசாயத்துக்கும் மற்றத் தொழில்களுக்கும் விஞ்ஞானத்தொழில் ஆராய்ச்சி நிலைய வாயிலாக அரசியலார் பேருதவி செய்து வருகின்றனர். இதன்

தலைவர் **சர் டேவிட் ரிவட்** என்பவர். இவர் சென்னையிலுள்ள அரசி மேரி கல்லூரித் தலைவியாயிருந்த **மிஸ் ரிவட்**டின் இளவல். இந்தியாவுக்கு வந்து விஞ்ஞான முன்னேற்றத்துக்குச் சில திட்டங்களை வகுத்துத் தரும்படி சர் டேவிடை நம் முதலமைச்சர் அழைத்திருப்பதாக மிஸ் ரிவட் என்னிடம் கூறினார். ஆஸ்திரேலிய விஞ்ஞானிகளுள் குறிப்பிடத்தக்க மற்றொருவர் **ஹோவார்டு ப்ளோரி** (Howard Florey); இவர் பெனிசிலின் (Penicillin) கண்டு பிடித்தவருள் ஒருவர்.

பெனிசிலின் செய்யும் தொழிற்சாலைகளை அரசியலாரே நடத்துகின்றனர். மற்ற இரசாயனப் பொருள்களை இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் என்ற பிரிட்டிஷ் வாணிபக் குழுவினர் செய்கின்றனர். அமெரிக்க, ஜெர்மன் தொழிற்சாலைகளுக்கும் ஆஸ்திரேலியாவில் கிளைகள் உள்ளன. ‘பேடன்ட்’ உரிமையுடையவர்களுக்குச் சிறிது பணம் கொடுத்துவிட்டு, அமெரிக்கப் பொருள்களைச் செய்யும் குழுக்களை ஆஸ்திரேலியர் அமைத்திருக்கின்றனர்.

தொழிற் குழுக்கள்

தொழில் வளர்ச்சி பற்றிய அதிகாரங்களுள்ள தொழிற் குழுக்கள் (Industrial Councils) நாடு முழுவதும் நிறுவப்பட்டிருக்கின்றன. இவை, அந்தந்தத் தொழிற்சாலை ஊழியரின் ஊதியத்தை வரையறை செய்கின்றன; உற்பத்தியாகும் பொருள்களின் அளவையும் தரத்தையும் விலையையும் முடிவு செய்கின்றன; அந்தக் கம்பெனிப் பங்குதாரர்களுக்குப் பிரித்துக் கொடுக்கவேண்டிய லாப ஈவுத் தொகையை

(Dividend) வரையறை செய்கின்றன ; ஒவ்வொரு தொழிலும் எத்தனை தொழிற்சாலைகள் இருக்கலாம் என்று வரம்பு ஏற்படுத்துகின்றன ; தொழிற் கல்விப் பயிற்சியை மேற்பார்வையிடுகின்றன.

—x—

13. தொழிலாளர் நிலை

அடிப்படைச் சம்பளம்

ஆஸ்திரேலியாவில் தொழிற்சங்க உறுப்பினர் மட்டுமே வேலையில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். தொழிலாளருள் இன்ன இன்ன வேலை செய்பவருக்கு இன்ன இன்ன சம்பளம் கொடுக்கவேண்டுமென அரசியலார் சட்டம் இயற்றியிருக்கின்றனர். வீட்டு வேலைக்காரர் உட்பட யாரையும் வாரத்துக்கு ஆறு பவுனுக்குக் குறைந்த சம்பளத்துக்கு ஒருவரும் வேலைக்கு நியமிக்க முடியாது. ரொட்டி சுடுபவருக்கு ரூ. 60-ம், சமையல்காரருக்கு ரூ. 60-ம், தோட்டக்காரருக்கு ரூ. 55-ம், மரங்களிலிருந்து பழம் பறித்து அடுக்குபவருக்கு ரூ. 45-ம் சம்பளமாக **ஒவ்வொரு வாரமும்** கொடுக்கப்படுகிறது.

விடுமுறை நாள்

ஆஸ்திரேலியத் தொழிலாளருக்கு விடுமுறை நாட்கள் மிகுதியாக உண்டு. இதைப்பற்றி ஒரு வேடிக்கைக் குறிப்பு வழங்குகிறது. அது பின்வருமாறு : “ ஓர் ஆண்டுக்கு 365 நாட்கள் உண்டு. நாளொன்றுக்கு எட்டு மணி நேரம், அதாவது மூன்றில் ஒரு பகுதியே தொழிலாளர் வேலை செய்கின்றனர் ; இது ஓராண்டில்

122 நாட்கள் மட்டும் வேலை செய்வதற்குச் சமமாகும். சனி, ஞாயிறு விடுமுறை நாட்கள்—ஓராண்டில் மொத்தம் 104 நாட்களும்—கிறிஸ்துமஸ், புத்தாண்டு விழா, சுதந்திர தினம், பேங்கு விடுமுறை நாட்கள் ஆகியவைகளில் 5 நாட்களும் நீங்களாக, 13 நாட்களே தொழிலாளர் வேலை செய்கின்றனர். இதற்கு எதிராக ஒவ்வொரு தொழிலாளிக்கும் சம்பளத்துடன் ஓராண்டுக்கு 14 நாட்கள் ஓய்வு கிடைப்பதால் தொழிலாளர் ஒரு வேலையும் செய்யாமல் சம்பளம் பெறுகின்றனர் !"

வீட்டு வசதி

தொழிலாளருக்காகவும், ஐரோப்பாவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு இடம் பெயர்ந்து வருவோருக்காகவும் அரசியலார் நகரங்களிலும், விவசாயப் பண்ணைகளிலும் மாதந்தோறும் பல ஆயிரம் புது வீடுகளைக் கட்டிய வண்ணமாய் இருக்கின்றனர். அரசியலாரும் நகராண்மைக் கழகங்களும் கட்டி யிருக்கிற வீடுகளின் வாடகை அவற்றில் குடியிருப்பவரின் வருவாயைப் பொறுத்தது. உதாரணமாக ஐந்து அறைகள் உள்ள ஒரு பலகை வீட்டுக்கு ஒரு தொழிலாளி வாரத்துக்கு 13 ரூ. வாடகை கொடுக்க வேண்டும். அதே வீட்டிற்கு ஒரு வியாபாரி ரூ. 31 கொடுக்கவேண்டும். ஒரு செங்கல் வீட்டிற்குத் தொழிலாளி ரூ. 17-8-0ம், வழக்கறிஞர் ரூ. 45-ம் வாடகை கொடுக்க வேண்டும். நம் நாட்டில் இந்திய அரசியலார் மாதம் 200 ரூபாய்க்குக் குறைவாகச் சம்பளம் வாங்கும் தம் ஊழியருக்காகப் புதுடில்லியில் **லோடி காலனி** என்ற நகரை அமைத்துள்ளனர் ; ஒரே மாதிரியான வீடுகளுக்கு,

அந்தந்த ஊழியரின் சம்பளத்தில் 10-ல் ஒரு பங்கு வீட்டு வாடகையாக வசூலிக்கப்படுகிறது.

தொழிற் கட்சியின் ஆட்சி

1910 முதல் (சில இடைவேளைகள் நீங்கலாக) 1949 வரை தொழிற்கட்சி*யின் ஆட்சி ஆஸ்திரேலியாவில் நடைபெற்றது. தொழிலாளருக்கு நன்மைதரும் பல சட்டங்களை இக்கட்சியினர் இயற்றி யிருக்கின்றனர். தொழிற்கட்சியின் முதல் அமைச்சில் சுரங்கத் தொழிலாளிகள் இருவரும் துறைமுகத் தொழிலாளி, கொத்தர், தச்சர், அச்சுக் கோக்கும் தொழிலாளி ஆகியோரில் ஒவ்வொருவரும் அமைச்சராக இருந்தனர். 1949 வரை முதல் அமைச்சரா யிருந்த **ஜே. பி. சீப்லி** (Chiefly) என்பவர் ரயில்வேத் தொழிலாளராய் இருந்தவராம். ஆஸ்திரேலியக் கவர்னர்-ஜெனரலாயிருக்கும் மகாகனம் W, J. **மக்கெல்** (McKell) ஒரு காலத்தில் இறைச்சிக் கடையொன்றில் ஊழியரா யிருந்தவராம்.

அங்கு இல்லை !

தொழிலாளருடைய மனம் கொதிக்கும்படியாகச் செல்வர் நடந்து கொள்வதில்லை. தொழிலாளரைத்

* மிதவாதக் கட்சி, கிராமக் கட்சி இவற்றின் கூட்டு அரசு இப்போது நடந்து வருகிறது. இக்கட்சிகள் தொழில்களைப் பொதுவுடைமையாக்குவதை எதிர்க்கின்றன. பொருளாதாரக் கட்டுப்பாடுகளை நீக்க உறுதி கொண்டுள்ளன. கம்யூனிஸ்ட் கட்சி 1949 இறுதியில் நடந்த தேர்தலில் படுதோல்வி அடைந்தது; இப்போது இக்கட்சி தடை செய்யப்பட்டிருக்கிறது.

தாழ்த்தி அடக்கிவிட ஒருவரும் முயலுவதில்லை. ஒரு சிலர் உயர்ந்து வாழ, வேறு பலர் தாழ்ந்து தலை கொடுக்க வேண்டும் என்று ஒருவரும் நினைப்பதில்லை.

சோஷலிஸ நாடு

நம் நாட்டில் போர்க்காலத்தில் துணி, சர்க்கரை, மண்ணெண்ணெய் போன்ற பொருள்களின் உருவில் கடவுள் சிலர்மீது தன் அருளைப் பொழிந்தது போல, ஆஸ்திரேலியாவில் கம்பளி (Wool) வடிவமாகத் தோன்றிக் கடவுள் ஒரு சிலருக்கு மிகுந்த செல்வத்தைக் கொடுத்துள்ளார். இருந்தபோதிலும் இந்தியாவில் **பிர்லா**, பாகிஸ்தானில் **இஸ்பஹானி**, இலங்கையில் **கார்டினர்** பிரிட்டனில் **நப்பீல்ட்**, ஜெர்மனியில் **க்ரோப்**, அமெரிக்காவில் **ராக்பெல்லர்** ஆகியோருக்கு நிகரான தனிப்பட்ட செல்வர் ஆஸ்திரேலியாவில் இல்லை, மிகுதியான வரி அந்த நாட்டில் விதிக்கப்படுவதே இதற்குக் காரணம். இன்றைய உலகில் நல்ல சோஷலிஸ நாடாக ஆஸ்திரேலியா விளங்குகிறது.

வேலையில் ஆர்வம்

ஆஸ்திரேலியர் நல்ல உழைப்பாளிகள் ; சரியாக வேலை செய்து பிழைக்க வேண்டுமென்ற அவர்களது மனப்பான்மையைக் கீழ்க்காணும் வழக்கால் அறியலாம் :—

வேலை நன்றாகச் செய்ய வேண்டும்— எதற்குத்
தெரியுமா ? காசு வாங்கத்தான்,
காசு நிறைய இருக்க வேண்டும்—எதற்குத்
தெரியுமா ? உணவு வாங்கத்தான்

உணவு நிறைய உண்ண வேண்டும்—எதற்குத்
தெரியுமா? பலத்துக்காகத்தான்.
பலமும் நன்றாக இருக்க வேண்டும்—எதற்குத்
தெரியுமா? வேலை செய்யத்தான்.

—x—

14. சமூக நலத் திட்டங்கள்

அரசியலாரின் கடமை

உள்நாட்டுக் கலகங்களையும் வெளிநாட்டுப் படையெடுப்பையும் தடுப்பதிலேயே 1900 ஆம் ஆண்டுவரை எல்லா அரசியலாரும் குறியாக இருந்தனர். போர் ஏற்பட்டால், அதன் செலவுக்காக வரிகளைக் கூடுதலாக விதிப்பது வழக்கமாக இருந்தது. சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவதே அரசியலாரின் பெரிய வேலையாக இருந்ததால், வழக்கறிஞரே அமைச்சுப் பதவிகளில் இருந்தனர். தொழில் வளர்ச்சி ஓங்க ஓங்க, அரசியலாரின் கடமையைப்பற்றிய கருத்தும் மாறுதலடைந்தது. செல்வம் உடையவருக்கும் இல்லாதவருக்குமிடையேயுள்ள வேறுபாடுகளைக் குறைக்க வேண்டுமென்றும், செல்வரிடம் மிகுதியான வரிகளை வசூலித்து, அந்த (வருவாயிலிருந்து, மக்களுக்குப் பயன்படும் பல பணிகளை அரசியலார் செய்ய வேண்டுமென்றும் இப்போது கருத்து நிலவி வருகிறது. "**தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்**" என்று பாரதியார் கூறியதும் இக்கருத்தை உணர்த்தவேயாம். எல்லா நாடுகளிலும் மக்களுடைய வாழ்க்கை நிலை உயர

வேண்டும் என்ற கொள்கையை ஐக்கிய நாடுகள் சபையும் ஏற்றுக்கொண்டிருக்கிறது; இந்தக் கொள்கையை நடைமுறையில் கடைப்பிடிப்பதற்காக உணவு விவசாய மன்றமும் (FAO), ஆசியாவுக்கும் தூரக்கிழக்கு நாடுகளுக்குமான ஐ. நா. வின் பொருளாதாரக் குழு (UNECAFE)வும் பாடுபட்டு வருகின்றன. தொழிலாளருக்கான வேலை நேரம், ஓய்வு, சம்பளம், வயதுபற்றிய சட்டங்கள், தோட்டங்களிலும் சுரங்கங்களிலும் வேலை செய்வோரின் சுகாதார வசதிகளைக் கவனிக்கச் சட்டங்கள், பெண் தொழிலாளருக்குப் பாதுகாப்பு அளிக்கும் சட்டங்கள் ஆகிய இவை எல்லா நாடுகளிலும் ஏற்பட்டுள்ளன. இத்தகைய சட்டங்கள் மட்டும் போதியவையாகா. சமூக ஏணியின் கீழ்ப்படியிலுள்ள மக்களுக்கு ஆக்க வழியில் ஆதரவு தருவதும் அரசியலாரின் அடிப்படையான பொறுப்பாகும். இதையொட்டியே வணிகரும் பொருளாதார அறிஞரும் எல்லா நாடுகளிலும் அமைச்சர் பதவி பெற்றுள்ளனர். தனி நபர்கள் செய்த சில பணிகளையும், இன்றைய நாகரிக வாழ்வுக்கு இன்றியமையாத பல வசதிகளையும் அரசியலார் செய்ய முன்வந்துள்ளனர். இவை **சமூக நலத் திட்டங்கள்** எனப்பெயர் பெற்றிருக்கின்றன. இவற்றை இயற்றும் அரசியலாருக்குப் **பராமரிப்பு அரசியலார்** (Welfare State) என்ற பெயருண்டு.

ஐவகைத் திட்டங்கள்

ஆஸ்திரேலியாவிலுள்ள சமூக நலத் திட்டங்கள் ஐந்து வகைப்படும். அவையாவன :—

1. ஆக்கவேலையில் கொள்ளத்தக்கவை

இவையாவன :—கட்டாயக்கல்வி, நூல் நிலையம், பொழுது போக்குக்கான ஏற்பாடுகள், மின்சார வளர்ச்சி, நீந்து குளங்கள் அமைத்தல் என்பவை.

2. சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்

நாட்டு மக்கள் அனைவருக்கும் வேலை தேடிக்கொடுப்பதை அரசியலார் தம் முக்கிய பொறுப்பாக ஒப்புக்கொண்டிருக்கின்றனர். வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டுமானால், உற்பத்தி பெருகி ஏற்றுமதியும் மிகுதியாக வேண்டும். ஆஸ்திரேலியப் பொருள்களை வாங்கும் நாடுகள் செழிப்பாக இருந்தால்தான், ஆஸ்திரேலியாவின் ஏற்றுமதி குறையாதிருக்கும். ஆகையால், உலக முழுவதும் பொருளாதார நிலை சீர்கெடாமலிருப்பதற்கான முறைகளை வகுக்க வேண்டுமென்று சான்பிரான்சிஸ்கோ மாநாட்டில் ஆஸ்திரேலியர் கோரினர். ஆஸ்திரேலியாவில் வேலையில்லாமல் ஒருவரும் துன்பப்படுவதில்லை. வயது வந்த ஒருவர் உடல் நலமின்றியிருந்தால், அல்லது வேலையை விட்டுவிட நேர்ந்தால், அவருக்கும் அவருடைய குடும்பத்துக்கும் உரிய உதவித் தொகையை அரசியலார் கொடுக்கின்றனர். இறந்தவரின் கிரியைச் செலவு செய்தல் பயித்தியம் பிடித்தவருக்கு உதவி செய்தல் போன்றவையும் அரசியலாரின் கடமைகளாக இருக்கின்றன.

3. சம்பள உதவித் திட்டங்கள்

ஓய்வு பெற்றவர்களுக்கும், உடலுறுப்புக்கள் குறைந்தவர்களுக்கும், விதவைகளுக்கும் அரசியலார்

உதவிச் சம்பளம் (Pension) கொடுக்கின்றனர். மணமாகாதவர்கள் மணம் செய்துகொள்ளுவதற்கும், பெற்றோர் தம் குழந்தைகளை வளர்ப்பதற்கும் கடன் கொடுத்து உதவ அரசியலார் திட்டம் வகுத்திருக்கின்றனர்.

4. சூழ்நிலையை மாற்றுவதற்கான திட்டங்கள்

இவையாவன ;—கழிவு நீரைச் கடத்தவும், தூய தண்ணீர் வசதி செய்யவும், சேரிகளைச் சுத்தப்படுத்தவும் புதிய நகரங்களை நிருமாணிக்கவும் அமல் செய்யும் திட்டங்கள்.

5. மூலதன உதவித் திட்டங்கள்

வீடு கட்டவும், சிறு தொழில்களைப் புதிதாகத் தொடங்கவும், குடும்ப வாழ்க்கையை நடத்தவும் மக்களுக்கு இன்றியமையாத அடிப்படை மூலதனத்தை அரசியலார் தருகின்றனர்.

தேசீய மராமத்து வேலைத்திட்டம்

வெள்ளம் அல்லது பூமி அதிர்ச்சி போன்றவை ஏற்பட்டால் மக்களுக்கு ஏற்படும் இன்னல்களைத் தணிப்பதற்காகத் "தேசீய மராமத்து வேலைத்திட்டம்" (National Works Programme) ஒன்றை அரசியலார் தயாரித்து வைத்திருக்கின்றனர். அவசர நிலைமை ஏற்பட்டால், பள்ளிக்கூடங்களும் மருத்துவச்சாலைகளும் வீடுகளும் கட்டவும், நீர்ப்பாசன வேலைகளைத் தொடங்கவும், புதிய ரயில் பாதைகளும் சாலைகளும் அமைக்கவும் அரசியலார் உடனே கட்டளையிடுவர்.

தேசீய நலநிதி

தொட்டில் முதல் சுடுகாடு வரை மக்களின் நலத்தைப் பேணப் பெருவாரியான வசதிகளை அரசியலார் செய்திருக்கின்றனர் என்பது மேற்கூறியவற்றிலிருந்து தெரியவரும். வருமான வரியில் கிடைக்கும் தொகையில் ஒரு குறிப்பிட்ட பகுதி தனிச் சேமிப்பாக வைக்கப் படுகிறது. வேலையாட்களுக்குச் சம்பளம் கொடுக்கும் ஒவ்வொருவரும் சம்பளத்திற்குத்தக்கபடி ஒரு சிறு பகுதியைப் பிடித்துக்கொண்டு அதை அரசியலாருக்குச் (Pay-roll Tax) செலுத்துகின்றனர். இவை **தேசீய நல நிதி** (National Welfare Fund) யில் சேர்க்கப்படுகின்றன. இந்த நிதியிலிருந்து சமூக நலத் திட்டச் செலவுகள் செய்யப்படுகின்றன.

போரின் படிப்பினை

இரண்டாவது உலகப் போரில் பலவாறுகத் துன்பப்பட்ட பிரிட்டன் ஆஸ்திரேலியாவைப் பின் பற்றிச் சமூக நலத்திட்டங்களை வகுத்திருக்கிறது. பொருளாதாரத் துறையில் ஏற்படும் மாறுதல்கள் மக்களைப் பாதிக்காதபடி தடுக்கவும், வறுமைப் பயத்தை நீக்கவும் பொருட் பெரியார்களின் செல்வ நிலையும் ஈகைத்திறனும் போதியவையாகா என்பது 1929—30-ல் நிலவிய உலக நிலையின் படிப்பினை.

இந்தியாவில் ஜனத்தொகை பெருகிக்கொண்டிருக்கிறது. ஏழ்மை தாண்டவமாடுகிறது. வாழ்க்கைத் தரம் கேவலமான நிலையில் இருக்கிறது. சுகாதார நிலையைப் பற்றிக் கூறலிற் கூருமை நன்று. நமது அரசியலாரின் ஊழியரும் தொழிலாளரும் வேலை நேரத்தில் தம்

குடும்பக்கவலைகளையும் பொருளாதார நெருக்கடியை யுமே நினைத்துக்கொண்டிருக்கின்றனர். நாட்டு நல னிலோ, உற்பத்திப் பெருக்கத்திலோ அவர்கள் தக்க கவ னஞ்செலுத்த முடிவதில்லை. இந்த நிலைமை மாறி, நாடு செழிப்படைய வேண்டுமானால், இன்னும் சில ஆண்டு களிலாவது, சமூக நலத் திட்டங்கள் இந்தியாவிலும் அமலுக்கு வரவேண்டும்.

—x—

15. பத்திரிகைகள்

தமிழ்நாட்டின் ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்குள்ள ஆஸ்திரேலியாவில் 30 தினசரிப் பத்திரிகை களும், நூற்றுக்கணக்கான வார மாத இதழ்களும் வெளியாகின்றன. இவை பிரிட்டிஷ் பாணியில் தொடங் கின; பெரும்பாலும் அமெரிக்கப் பத்திரிகைளின் அமைப்பைப் பின்பற்றுகின்றன. ஒரு சில பத்திரிகை கள் பிரிட்டிஷாராலும் மற்றவை அமெரிக்கச் செல்வாக் குக்கு உட்பட்ட குழுக்களாலும் நடத்தப்படுகின்றன.

வெளிநாட்டுச் செய்திகள்

1941 வரை ஆஸ்திரேலியர் வெளிநாட்டு நிகழ்ச்சி களைப் பற்றிக் கவலைப்படவில்லை. இரண்டாவது உல கப்போரில் ஆஸ்திரேலியரில் ஆறுபேருக்கு ஒருவர் போர் முனைக்குச் சென்றதால் மற்ற நாடுகளைப் பற்றி அறியும் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டது; ஆசிய நாடுகளின் பிரச்சினைகளிலும் அவர்கள் கவனம் செலுத்தத் தொடங்கினர். பிசிபிக் பெருங்கடல் பகுதியுடன் உறவு

கொள்ளும் கழகம் (Institute of Pacific Relations), அரசியல் சாத்திரக் கழகம் (Institute of Political Science), உலக விவகார ஆஸ்திரேலிய சபை (The Australian Institute of International Affairs), இளைஞர் கிறிஸ்தவர் சங்கம் (Y. M. C. A.) போன்றவை ஆஸ்திரேலியாவுக்கும் மற்ற நாடுகளுக்கும் நல்லுறவை வளர்க்க, இடையருது பாடுபட்டு வருகின்றன. இவைகளின் பணியைப்பற்றி ஆஸ்திரேலியப் பத்திரிகைகளில் தக்க விவரங்கள் வெளியாவதில்லை.

இந்தியச் செய்திகள்

இந்தியாவைப் பற்றிய செய்திகள் சில ஆண்டுகளாக ஆஸ்திரேலியப் பத்திரிகைகளில் இடம் பெற்று வருகின்றன. ஜெய்ப்பூர் காங்கிரசுக்குத் தலைமை வகித்த **டாக்டர் பட்டாபி சீத்தாராமையா**வின் பேருரை, காஷ்மீர் போர், புனவில் நடந்த ரஞ்சிட் ரோபி கிரிக்கட் பந்தயம், இந்திய ஆஸ்திரேலிய வியாபாரம் பற்றிய செய்திகள் ஆகியவை நான் அங்கிருந்தபோது வெளியாகின. ஆனல், நாம் விரும்பும் முறையில், இந்தியாவில் நடைபெறும் ஆக்க வேலைகள் பற்றிய செய்திகள் வெளிவரவில்லை. ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்தில் இந்தியப் பத்திரிகை முதலாளிகளைப்போலவே ஆஸ்திரேலியப் பத்திரிகை முதலாளிகளும் பங்குதாரர்களாகச் சேர்ந்திருப்பதால், தக்க முறையில் இந்தியச் செய்திகள் இனிமேல் பிரசுரிக்கப்படும் என எதிர்பார்க்கலாம். ஆஸ்திரேலியாவிலுள்ள இந்திய ஹைகமிஷனரின் விளம்பர அதிகாரி ஆஸ்திரேலியப் பத்திரிகைகளில் இந்தியாவைப் பற்றி வெளிவரும் தவருன செய்திகளை அண்மையில் மறுத்துக் கூறிவருவது இருண்ட வானத்தில் நட்சத்

திரம் தெரிவது போன்றதாகும். ஆஸ்திரேலியாவின் எல்லைகளான பீஜி, சிங்கப்பூர், இந்தோனேஷியா ஆகிய இடங்களில் பரவியுள்ள இந்தியக் கலாசாரமும் வாழ்க்கை முறையும் ஆஸ்திரேலியாவிலும் தெரிய வேண்டுமானால், ஆஸ்திரேலியாவிலும் இராமகிருஷ்ண மடத்தின் கிளை ஒன்று ஏற்படுவது இன்றியமையாதது.

பத்திரிகைகளின் கூட்டு முயற்சிகள்

வணிக வானொலி நிலையங்களை (Commercial Broadcasting stations) ஆஸ்திரேலிய பத்திரிகைகள் நடத்துகின்றன. இப் பத்திரிகைகள் பலவற்றின் கூட்டு முயற்சியால் பத்திரிகைக் காகிதம் (News-print) செய்யும் ஆலை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் உற்பத்தி ஆண்டுதோறும் 80,000 டன். எட்டு லட்சம் பிரதிகள்வரை விற்பனையாகும் சில பத்திரிகைகள் இருப்பதால் பெரும் அளவு பத்திரிகைக் காகிதம் அங்கே இறக்குமதியாகிறது.

ஆதாரமில்லாத செய்திகள்

ஆதாரமில்லாத செய்திகளைப் பரப்பி, இச்சைகளையும் பகைமை உணர்ச்சியையும் தூண்டக்கூடிய புதிய வெளியீடுகள் புற்றீசல்போல் வெளிவந்து கொண்டிருக்கின்றன. "படகு கவிழ்ந்தது", "ரயிலிலிருந்து விழுந்து மரணம்", "காதலர் படுக்கையில் தீப்பிடித்து மாண்டனர்"—இத்தகைய அவலத் தலைப்புக்களைக் காண்பவரின் உள்ளத்தைக் கவரவல்ல முறையில் வெளியிடும் ஆஸ்திரேலியப் பத்திரிகைகளின் தரம் மிக உயர்ந்தது என்று சொல்ல இயலாது. உணவுப் பஞ்சமுள்ள ஆசிய நாடுகளில் வாழும் குழந்தைகள் போதிய

பால் கிடைக்காமல் தவிக்கின்றனர் என்றும், ஆஸ்திரேலியர் இந்த நாடுகளுக்குப் பாலே மிகுதியாக அனுப்ப வேண்டும் என்றும் பத்திரிகைப் பேட்டி ஒன்றில் யான் குறிப்பிட்டேன். இதைத் தவிர யான் கூறிய மற்றக் கருத்துக்களை எல்லாம் ஆஸ்திரேலியப் பத்திரிகைகள் வெளியிட்டன!

குழுக்களும் மக்கள் கருத்தும்

ஆஸ்திரேலியப் பத்திரிகைகளில் பல, ஏனைய பத்திரிகைகளைப் போலவே, ஒரு சில குழுக்களால் நடத்தப்படுகின்றன. மக்களின் கருத்தை அறிய முயலாமலே, நிறவெறிக் கொள்கையை இவை ஆதரிக்கின்றன.

எல்லோரும் நிருபர்கள்

ஏதாவது ஒரு விபத்து அல்லது நிகழ்ச்சி நடைபெறும்போது அந்த இடத்தில் ஒரு பத்திரிகையின் நிருபர் இல்லாவிட்டால், அந்தப் பத்திரிகையில் அதைப் பற்றிச் செய்தி வருவதில்லை. மற்றப் பத்திரிகைகளில் மட்டுமே வெளிவருவதால் அதுபோன்ற செய்திவராத பத்திரிகையின் செல்வாக்குக் குறைந்துவிடக்கூடும். இதற்கு மாற்றாக எந்தச் செய்தியையும் நிருபரல்லாதவர்களும் பத்திரிகைக்கு அனுப்புவதும் பத்திரிகைக்காரர் அவர்களுக்குச் சன்மானம் கொடுப்பதும் ஆஸ்திரேலியாவில் வழக்கமாக இருந்து வருகிறது.

புகழ்பெற்ற பத்திரிகைகள்

தினசரிப் பத்திரிகைகளுள் **சிட்னி மார்னிங் ஹெரால்டு** (The Sydney Morning Herald), **மெல்பர்ன் ஆர்கஸ்** (Melbourne Argus), இரண்டும் குறிப்பிடத்

தக்கவை. மற்றப் பத்திரிகைகள் சிறு அளவில் குறைந்த பக்கங்களுடன் வெளிவருவன. வாரப் பத்திரிகைகளுள் சிறந்தது **ஆஸ்ட்ரலேசியன் போஸ்ட்** என்பது. டைஜஸ்ட் பத்திரிகைகளும் மிகுதியாக உள்ளன. இவற்றுள் தலையானது **ஆஸ்ட்ரலேசியன் டைஜஸ்ட்** என்பது. மாத சஞ்சிகைகளுள் முக்கியமானது **வாக்எபவுட்** (Walkabout) என்பது; 'நேஷனல் ஜியோக்ராபிகல் மகாசின்' என்ற சீரிய அமெரிக்கச் சஞ்சிகையைப்போல இதுவும் சிறந்த படங்களும் நல்ல கட்டுரைகளும் உடையது. ஆஸ்திரேலிய பூகோள சங்கத்தார் இதை வெளியிடுகின்றனர். பூகோள ஞானத்தைப் பரப்புவதே இச் சங்கத்தாரின் நோக்கமாகும்.

தி ஆஸ்ட்ரேலியன் அவுட்லுக் (The Australian Outlook) என்ற மாத இதழில் வெளிநாடுகளைப்பற்றிய ஆதாரமான பல கட்டுரைகள் வெளிவருகின்றன. இரண்டாயிரம் பேரே இதைப் படிக்கக் கூடும். எல்லா ஆஸ்திரேலியரும் படிக்கும் வெளியீடுகள் பல உள; விளையாட்டுகளைப் பற்றிய தனித்த செய்திகள், படங்கள், கட்டுரைகள் இவற்றில் அடங்கியிருக்கும். **இன்றைய ஆஸ்திரேலியா** (Australia Today) என்ற ஆண்டு மலர் ஒன்றை ஆஸ்திரேலிய அரசியலாரின் உதவிகொண்டு ஒரு பத்திரிகை குழு வெளியிடுகின்றது. இது ஓர் ஆதாரமான புத்தகம்; அரிய தகவல்களுடன் கூடியது.

நூல் மதிப்புரை

ஆஸ்திரேலியப் பத்திரிகைகள் தங்கள் நாட்டில் வெளியாகும் நூல்களைப் பற்றிக் கவனம் செலுத்துவதில்லை என்றும், பிறநாடுகளில் வெளியாகும் நூல்

7

களையே மிகுதியாகப் பாராட்டுவதாகவும் அந்த நாட்டில் பலர் என்னிடம் குறை கூறினர். மிகச் சிறந்த ஆஸ்திரேலிய எழுத்தாளரைக்கூட பாராட்ட ஆஸ்திரேலியப் பத்திரிகைகள் முன்வராததால், ஆஸ்திரேலியருள் ஒருவருக்குக்கூட இன்னும் நோபல் பரிசு கிடைக்கவில்லை என்றும் கேள்விப்பட்டேன். விஞ்ஞானி **சி. வி. ராமன்,** கணித மேதை காலஞ் சென்ற **இராமனுஜம்** ஆகியோரின் கட்டுரைகள் பிரிட்டிஷ் பத்திரிகைகளிலேயே முதன் முதலில் வெளிவந்ததையும் நாம் ஈண்டு மனத்திற் கொள்ளலாம்.

ஓர் ஆஸ்திரேலியத் துணுக்கு

வயதான ஒருவர் ஒரு பத்திரிகையின் அலுவலகத்துக்கு வந்தார்.

வந்தவர் :—என் தம்பி இறந்துவிட்டார். அதைப் பத்திரிகையில் போட என்ன ஆகும்?

பத்திரிகைக்காரர் :—அங்குலத்திற்கு 3 ஷில்லிங்.

வந்தவர் :—அடேயப்பா! அவன் $6\frac{1}{2}$ அடி உயரம் இருந்தானே!

—x—

16. வானொலி

ஆஸ்திரேலியாவில் அரசியலார் 30 வானொலி நிலையங்களையும் வணிகர் 102 வானொலி நிலையங்களையும் நடத்துகின்றனர்.

அரசியலாரின் நிலையங்கள்

தபால் இலாகாவின் ஒரு பகுதியாகிய ஆஸ்திரேலியப் பிராட்காஸ்டிங் கமிஷன் (A. B. C.) **ரேடியோ ஆஸ்திரேலியா** என்ற சிற்றலை நிலையங்கள் வாயிலாக வெளிநாடுகளுக்கும், A என்ற நடுஅலை, பெரிய அலை நிலையங்கள் மூலமாக உள்நாட்டுக்கும் ஒலிபரப்புகின்றது. இவை அனைத்தும் அரசியலாரைச் சேர்ந்தவை. செய்திகள், அரசியலாரின் அறிக்கைகள், காலநிலைப் பற்றிய குறிப்புகள், பொருளாதார நிலைபற்றிய மதிப்புரைகள், விவசாயத் தொழில் பற்றிய கருத்துக்கள் இவற்றை நாட்டு மொழியிலும், வெளிநாடுகளுக்கான நிகழ்ச்சிகளைப் பழமொழிகளிலும் இந்நிலையங்கள் ஒலிபரப்புகின்றன இந்திய வானொலி நிலையத்தார் தொகுத்து பதிவுசெய்து அனுப்பும் சிறப்பான நிகழ்ச்சிகளை (Recorded Features) ஆஸ்திரேலிய அரசியலாரின் வானொலி நிலையங்கள் ஒலிபரப்புகின்றன. வானொலி லைசன்சுக் கட்டண வருவாய் இவற்றுக்கு மட்டுமே உண்டு. ஆஸ்திரேலியாவில் வானொலி லைசென்சுக் கட்டணம் ஒரு பவுன். ஆனால், வானொலிக் கருவி வைத்திருக்கும் இடத்திலிருந்து 250 மைல்களுக்குள் அரசியலாரைச் சேர்ந்த நிலையம் இல்லாவிட்டால், அரைப்பவுன் கட்டினால் போதுமானது.

வணிகரின் நிலையங்கள்

வணிகர் நடத்தும் வானொலி நிலையங்கள் உள்நாட்டுக்கு மட்டுமே ஒலிபரப்புகின்றன. இவைகளுக்கு B நிலையங்கள் என்று பெயர். A நிலையங்களில் நிகழ்வது போன்ற நிகழ்ச்சிகளுடன் விளம்பரங்களையும் B நிலையங்கள் ஒலிபரப்புகின்றன. விளம்பரங்களுக்குக்

கிடைக்கும் வருவாய் வாயிலாகத்தான் B நிலையங்கள் நடைபெறுகின்றன.

பிரிட்டனிலும் இந்தியாவிலும் அரசியலார் மட்டுமே வானொலி நிலையங்களை நடத்துகின்றனர். அமெரிக்காவில் வணிகர் மட்டுமே இவற்றை அமைத்திருக்கின்றனர். இரண்டுவித நிலையங்களும் இருப்பது ஆஸ்திரேலியாவின் சிறப்பு.

பொதுவான கொள்கைகள்

இந்த இருவகை நிலையங்களுக்கும் பொதுவான கொள்கையை ஆஸ்திரேலியப் பாராளுமன்றம் நியமிக்கும் ஒரு குழுவினர் வரையறுக்கின்றனர். என்னென்ன நிகழ்ச்சிகள் நிகழலாம். எத்தகைய விளம்பரங்களை ஒலி பரப்பலாம் என்பதை இக் குழுவினர் முடிவு செய்கின்றனர். புதிய வானொலி நிலையங்கள் ஏற்படுத்தவும் இவர்கள் அனுமதி கொடுக்கின்றனர். டெலிவிஷன் என்னும் தொலைக்காட்சி நிலையங்கள் மெல்பர்னிலும் சிட்னியிலும் நிறுவுவதற்கும் இக் குழுவினர் அனுமதி கொடுத்துள்ளனர் ; இவை 1951-ல் இயங்கத் தொடங்கும்.

வழக்கங்கள்

எல்லா நிலையங்களும் சேர்ந்து சில பொதுவான வழக்கங்களை (Code of Broadcasting practice) ஏற்படுத்திக்கொண்டுள்ளன. இவற்றுள் சிலவற்றைக் குறிப்பிடுவோம் : இழிவான விகடத் துணுக்குகளையும் அரசியலாரின் சட்டத்தை மீறிய எதையும் ஒலி பரப்புவதில்லை. “கடவுள்” என்ற சொல் மரியாதைக்கு அறிகுறியான இடங்களில் மட்டுமே பயன்படுத்தப்படும்.

வானொலிகளும் பத்திரிகைகளும்

போட்டாபோட்டியால் இருவகை நிலையங்களும் செவ்வனே நடைபெறுகின்றன. பல பத்திரிகைகள் இருப்பதற்குப் பதிலாக ஒரு பத்திரிகை மட்டுமே நாட்டில் வெளியானால், நிலைமை எவ்வாறு இருக்கும்? இதைப் போன்றே ஒரு வானொலிக் குழுவே இருப்பதும் தீயது ஆகும்.

தேர்தல் காலத்தில் வானொலி

1951-ல் நம் நாட்டில் பொதுத் தேர்தல் நடக்கவிருப்பதால், *1949*-ல் நடந்த தேர்தலில் ஆஸ்திரேலிய அரசியலாரின் வானொலி நிலையங்கள் எவ்வாறு ஈடுபட்டு உழைத்தன என்பதை இங்கே குறிப்பிடுவது பயனுடையதாகும். எல்லா அரசியல் கட்சிகளுக்கும் வானொலி வாயிலாகத் தங்கள் கொள்கைகளை வெளியிட, திட்டங்களைப் பரப்ப, மக்களுடைய ஆதரவு தேடச் சரிசமமான வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. தேர்தலில் மூன்று கட்சிகள் கலந்து கொண்டன. நாளொன்றுக்கு ஆறு மணி நேரம் தேர்தல் பிரசாரத்திற்கு ஒதுக்கப்படும் என வானொலி நிலையத்தார் அறிவித்தனர். அதன்படி அரசியலாரின் கட்சிக்கு 3 மணி நேரமும், மற்றக் கட்சிகளுக்கு 3 மணி நேரமுமாகக் கட்சிகள் தங்களுக்குள் பிரித்துக்கொண்டன. தேர்தல் பேச்சுக்களில், சொற்பொழிவாளர் தம் விருப்பப்படி எதைப்பற்றி வேண்டுமானாலும் பேச அனுமதிக்கப்பட்டனர். மற்ற நாட்களிலும் கூடப் பேச்சை முன்னரே எழுதி வானொலி நிலையத்தாருக்கு அனுப்பும் வழக்கம் அங்கே இல்லை; தனிப்பட்ட எந்தத் தலைவர் மீதும்

சொல்லம்புகள் எய்யக்கூடாது என்ற பொதுவான கட்டுப்பாடு மட்டும் உண்டு.

குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள்

ஆஸ்திரேலிய வானொலி நிலையத்தார் குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகளில், நல்ல உச்சரிப்புடையவர்களை மட்டுமே கலந்துகொள்ளச் செய்கின்றனர்; இந்த நிகழ்ச்சிகளில் கொச்சையான வார்த்தைகளை பயன்படுத்துவதில்லை. சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பது, சீலம், குணம், சுத்தம் ஆகியவை குழந்தைகளுக்கு ஏற்படும் வண்ணம் நிகழ்ச்சிகளை அமைக்கின்றனர். 'புத்திக் கூர்மையும் வீரமும் நிறைந்தவர்களாகவே' நடிகர் நடிக்கின்றனர். குழந்தைகளின் மனத்தில் பயம் தோன்ருமலிருப்பதற்காக விரைவாகத் துப்பாக்கியால் சுடுதல், பயங்கரச் சிரிப்பு, கேலிச் சிரிப்பு, திடீரென்று முடிவடைதல் முதலியவை நிகழ்ச்சிகளில் சேர்க்கப்படுவதில்லை.

பாமரரும் பாராளுமன்றமும்

ஆஸ்திரேலியப் பாராளுமன்றத்து நிகழ்ச்சிகளை அந்த நாட்டு வானொலி நிலையங்கள் ஒலிபரப்புகின்றன. எந்தெந்த நிகழ்ச்சிகளை ஒலிபரப்பலாம் என்பதைப் பாராளுமன்றத்தின் உறுப்பினர் சிலர் முடிவு செய்கின்றனர். கேள்வி நேரத்தின் நிகழ்ச்சிகளை மட்டும் மற்ருெரு முறை இரவின் முற்பகுதியில் ஒலிபரப்புகின்றனர். பாராளுமன்ற உறுப்பினர் பேசுமுன்னர் அவர் யார், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர், எந்தத் தொகுதியின் பிரதிநிதி என்ற விவரங்களை வானொலி அறிவிப்பாளர் தெரிவிக்கிருர். பல கட்சிகளின் கருத்துக்களும் மக்களுக்குத்

தெரியவேண்டும் என்பதே இந்த நிகழ்ச்சிகளின் நோக்கம்.

பாராளுமன்றத்தில் விவாதங்கள் நடைபெறும் முறையையும், மசோதாக்கள் சட்டமாக உருவாகும் விதத்தையும் வானொலி அறிவிப்பாளர் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்க வைப்பதும் ஆஸ்திரேலிய நிலையங்களின் சிறப்பு. குடியாட்சியின் அடிப்படைக் கருத்துக்களை எல்லா மக்களும் அறிந்துகொள்ள இந்த நிகழ்ச்சிகள் பயன்படும்.

—x—

17. அரசியல் பிரிவுகளும் தலைநகரும்

ஆஸ்திரேலியாவில் ஆறு இராஜ்ஜியங்கள் உள்ளன. அவையாவன : குயின்ஸ்லாந்து, நியூ சௌத் வேல்ஸ், விக்டோரியா, தெற்கு ஆஸ்திரேலியா, மேற்கு ஆஸ்திரேலியா, டாஸ்மேனியா என்பன. நியூ சௌத் வேல்ஸ், விக்டோரியா ஆகிய இராஜ்ஜியங்களின் செல்வாக்கால் மற்ற இராஜ்ஜியங்களுக்குக் கெடுதலான சட்டங்கள் நிறைவேறக்கூடாதெனக் கருதி, ஆஸ்திரேலியப் பாராளுமன்றத்து மேல்சபையாகிய செனேட்டில் ஓர் இராஜ்ஜியத்துக்கு ஆறு பிரதிநிதிகள் விகிதம் 36 பிரதிநிதிகளே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

வெளிநாடுகளின் பிரதிநிதிகள்

அமெரிக்கா, சீனா, ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகள் ஒவ்வொன்றிலும் ஆஸ்திரேலியா முழுவதற்கும் ஒரு தூதரே இருந்து வருகிறார். லண்டனில் மட்டும்

அவரைத் தவிர ஆஸ்திரேலிய இராஜ்ஜியங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு தனிப் பிரதிநிதியும் இருந்து வருகிறார். இதற்குக் காரணம் ஒவ்வோர் இராஜ்ஜியத்துக்கும் பிரிட்டனுடன் தனித்த உறவு இருப்பதேயாகும். இந்த முறையைப் பின்பற்றி, இந்தியாவுக்குள்ள தூதர்களுடன் சென்னை இராஜ்ஜியமும், பர்மா, இந்தோசைனு, இலங்கை, மலேயா, சயாம் ஆகிய நாடுகளுக்குப் பிரதிநிதிகள் அனுப்ப நம் இந்திய அரசியலார் இசைவு தெரிவித்தால் நன்மை ஏற்படும்.

கட்டாய வாக்குப்பதிவு

மக்களாட்சி வெற்றிகரமாக நடைபெற வேண்டுமானல், பொதுமக்கள் அரசியல் பிரச்சினைகளில் ஈடுபடவேண்டும். ஆகையால் தேர்தல்களில் எல்லோரும் கட்டாயமாக வாக்குப் பதியவேண்டும் என்ற சட்டம் ஆஸ்திரேலியாவில் இருந்து வருகிறது. "இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன?" என்ற மனப்பான்மையால் தம் வாக்கைப் பதியாத ஆஸ்திரேலியர் தலைக்கு 2 பவுன் அபராதம் கொடுக்க வேண்டும். மறைவாக வாக்குப் பதியும் முறை (Secret Voting) ஆஸ்திரேலியாவில்தான் தோன்றியது என்பதையும் இங்கே குறிப்பிடலாம்.

தலைநகர் ஏற்பட்ட விவரம்

முக்கியமான இரண்டு இராஜ்ஜியங்களும் தங்கள் எல்லைக்குள்ளேயே ஆஸ்திரேலியத் தலைநகரம் ஏற்பட வேண்டுமென்று விரும்பின. இறுதியில், புதிய தலைநகரை நியூசௌத்வேல்ஸ், விக்டோரியா இராஜ்ஜியங்களின் தலைநகரங்களுக்குச் சம தொலைவில் அமைப்ப

தென்ற சமரச முடிவு ஏற்பட்டது. இவ்வாறு ஏற்பட்ட தலைநகரமே கான்பரா ஆகும். இதை ஆஸ்திரேலியர் **கான்ப்ரா** என்று உச்சரிக்கின்றனர்.

விமான நிலையம்

கான்பராவின் விமான நிலையம் மிகச் சிறியது. அதைவிடச் சிறியவை உலகிலேயே ஒரு சிலதான் இருக்கலாம். அதை "விமானம் இறங்கும் இடம்" (Landing Ground) என்று கூறுவதே பொருந்தும். நான் ஏறிச் சென்ற விமானம் அங்கே சேர்ந்தபோது ஏதோ இயந்திரக் கோளாறினுல், இடையில் ஒரு பள்ளத்தாக்கில் விமானி எங்களை இறக்கிவிட்டதாக எண்ணினேன். மலைகளும் மரங்களும் நகரை மறைத்திருப்பதே இவ்வாறு நான் எண்ணும்படி செய்தது. கான்பரா மரங்கள் நிறைந்த நகரம்; 25 லட்சம் மரங்கள் அங்கே உண்டு. இந்த மரங்கள்தான் பாலைவனத்தைச் சோலைவனமாக்கியுள்ளன.

கான்பராவும் நம் தலைநகராகிய புது டில்லியைப் போலவே, வியாபாரத்திலோ, மற்றத் துறைகளிலோ சிறப்புப் பெறவில்லை; அரசியல் தலைநகராக இருப்பது ஒன்றுமட்டுமே இரு நகரங்களுக்கும் பெருமையைத் தருவதாகும். இரு நகரங்களிலும் தவறி விழுந்தால் ஒரு சிவில் சர்வீஸ் அலுவலாளர்மீதோ, வெளி நாட்டுத் தூதர்மீதோதான் விழவேண்டும். புது டில்லியைப் போலவே கான்பராவிலும் இரண்டாவது உலகப் போரில் உயிர் நீத்த வீரரின் நினைவாகப் பெரியதொரு மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது; இரு தலைநகரங்களிலும் மிகுதியான சைகிள்களைக் கண்டேன். புது டில்லி

யைப் போலவே, கான்பராவும் தனிச் சட்டசபையோ மந்திரிகளோ இன்றி, மத்திய அரசியலாரால் நேரடியாக ஆளப்படுகிறது. புது டில்லியில் ஒரு நகரக்குழு (Municipal Committee) இருக்கிறது; கான்பராவில் இதுகூட இல்லை. டில்லியின் பிரதிநிதி இந்தியப் பாராளுமன்றத்தில் இருப்பதுபோல், கான்பராவின் பிரதிநிதி ஒருவர் ஆஸ்திரேலியப் பாராளுமன்றத்தில் இருக்கிறார்; ஆனால் இவர் கான்பராவைப் பற்றிய விவாதங்களில் மட்டுந்தான் தம் உரிமைகளைப் பயன்படுத்தலாம்.

டில்லியில் எட்டாவது தடவையாக இந்தியத் தலைநகர் புது டில்லியாக நிருமாணிக்கப்பட்டிருக்கிறது. பரம்பரையாகத் தலைநகராக இருந்த இத்தகைய பெருமை கான்பராவுக்குக் கிடையாது. குதுப்மினாரையோ, செங்கோட்டையையோ அங்கே காண இயலவில்லை. இந்திய வரலாற்றில் சிறப்பான இடம் பெற்றுள்ள பிருதிவிராஜ், ஷாஜஹான், அக்பர், அவுரங்கசீப், ஆகியோரின் பெயர்கள் புது டில்லியின் சாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இன்றைய ஆஸ்திரேலியாவின் வரலாறு பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே தொடங்குவதால், சென்ற தலைமுறையினர் சிலர் பெயரே கான்பராச் சாலைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பெரிய சாலைகள் இராஜ்ஜியத் தலைநகரங்களின் பெயரால் அழைக்கப்படுகின்றன.

இப்போது கான்பராவில் 17,000 மக்களே உள்ளனர். 15 ஆண்டுகளுக்கு முன்னர் ஏறத்தாழ இதே ஜனத்தொகையிருந்த புது டில்லியில் இப்போது போரினாலும் நாட்டுப் பிரிவினையாலும் மற்றக் கார

ணங்களாலும், பல லட்சம் மக்கள் வாழ்கின்றனர். கான்பராவும் வருங்காலத்தில் வளர்ச்சியடையக் கூடுமென எதிர்பார்த்து, ஒரு லட்சம் மக்களுக்கு வேண்டிய சாலைகளும், தண்ணீர், சுகாதார, மின்சார வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. இந்திய ஹைகமிஷனரின் மாளிகையும் மற்றத் தூதர்களின் கட்டிடங்களும், பாராளுமன்றக் கட்டிடமும் தலைநகரிலுள்ள அழகான கட்டிடங்களுள் சில. விஞ்ஞான சோதனைச் சாலைகளும் வானிலை ஆராய்ச்சி நிலையமும் ஒரு மலைமீது அமைந்துள்ளன.

கான்பராவும் டில்லியைப் போலவே திட்டமிட்டுக் கட்டப்பட்ட அழகிய நகரம். நகரமைப்புக் கலையில் இன்றைய உலகம் பெரு முன்னேற்றம் அடைந்திருப்பதற்கு இவ்விரண்டும் தக்க சான்றுகளாக விளங்குகின்றன. அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனைப் போலவே கான்பரா அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் உருவத்தை வரைந்தவர் **வால்டர் பர்லி கிரிபின்** என்ற அமெரிக்கச் சிற்பி. புது டில்லியை அமைத்தவரும் இந்த அறிஞரே யாவர்.

கான்பராவின் தட்ப வெப்ப நிலை தனிச் சிறப்புடையது. "மேகம் இல்லாத வானம், உறைக்காத வெய்யில், நடுக்காத குளிர்" என்று அதை விளக்கிச் சொல்லலாம்.

---

18. போக்கு வரவு

பிரிட்டனைப்போல் 60 பங்கு உள்ள ஆஸ்திரேலியா பலவிதங்களில் பிரிட்டனுக்கு உட்பட்டிருக்கிறது. வெளிநாட்டு வாணிபம் பிரிட்டனுடன் மிகுதியாக நடைபெறுகிறது. இதற்கேற்ற நிலைமையை ஒட்டாவா ஒப்பந்தம் உண்டாக்கிற்று. ஆஸ்திரேலியாவுக்கும் மற்ற நாடுகளுக்கும் தொலைப் பேச்சுப் (டெலிபோன்) போக்கு வரவு லண்டன் வாயிலாகவே நிகழ்கிறது. சிட்னியிலிருந்து பம்பாய்க்கு டெலிபோன் வாயிலாகப் பேச நான் பல மணிநேரம் காத்திருந்து பொறுமை இழந்தேன். சிட்னி டெலிபோன் அலுவலகத்தைக் கேட்டபோது "பம்பாய்க்கும் லண்டனுக்குமிடையே டெலிபோன் கம்பிகள் அறுந்துவிட்டபடியால் இந்தியாவுடன் இப்போது டெலிபோன் வாயிலாகப் பேச இயலாது!" என்று விடை கிடைத்தது. இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் நேரடியான டெலிபோன் போக்குவரவு ஏற்பட இப்போதுதான் முயற்சி நடந்துவருகிறது.

ரயில்

ஆஸ்திரேலிய அரசியலார் கடந்த பத்து ஆண்டுகளில் செய்திருக்கும் ஒரு பெரிய சீர்திருத்தம் ரயில் போக்கு வரவு பற்றியது. பலவிதமான அளவுகள் (Gauge) உள்ள ரயில் பாதைகள் இருந்ததை அவர்கள் ஒன்றுபடுத்தியுள்ளனர். 4 அடி $8\frac{1}{2}$ அங்குலம் அகலமுள்ள ரயில் பாதைகள் மட்டும் இப்போது ஆஸ்திரேலியாவில் உண்டு. இது தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்திருக்கிறது. இந்தியாவில் 5'6", 3' $2\frac{3}{4}$", 2' 6" ஆகிய அகலங்களுள்ள ரயில் பாதைகள் இருப்ப

தால், திண்டுக்கல்லிலிருந்து பூனவுக்கோ அல்லது புதுக்கோட்டையிலிருந்து கொச்சித் துறைமுகத்துக்கோ பொருள்களை ரயில்மூலம் நேரடியாக அனுப்ப இயலாது. 'ரயில் அகலம்' (Gauge) மாறும் இடங்களில் சரக்குகளை ஒரு வண்டியிலிருந்து மற்றொரு வண்டிக்கு மாற்ற வேண்டும். இதனுல் வீண்வேலையும் விலைவாசி ஏற்றமும் ஏற்படுகின்றன. பிரயாணிகளும் துன்பப்பட நேரிடுகிறது. போக்குவரவு நேரமும் மிகுதியாகிறது. நாட்டின் முன்னேற்றத்துக்கு அடிப்படையான இந்தப் பிரச்னையில் மக்களும் அரசியலாரும் தக்க கவனம் செலுத்தவேண்டும்.

விமானம்

ஆஸ்திரேலியாவில் ஆகாய விமானப் போக்கு வரவு விரிவாகவும் நல்ல முறையிலும் நடந்து வருகிறது. இதற்குக் காரணங்கள் விஞ்ஞான முன்னேற்றத்தை அவர்கள் பயன்படுத்துவதும், ஆஸ்திரேலியாவில் நிலப் பரப்பு பெரிதாக இருப்பதுமாகும். ஆஸ்திரேலியாவில் 30,000 மைல் தொலைவிற்கு நாள்தோறும் விமானங்கள் போய்வந்தவண்ணமாய் இருக்கின்றன. 134 விமான நிலையங்கள் இருப்பதும் முக்கியமாகக் கவனிக்கத் தக்கது. பெரிய நகரங்களில் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் விமானங்களுக்கும், பொருள்களை ஏற்றிச் செல்லும் விமானங்களுக்கும் தனித்தனி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

உள்நாட்டுக்குள் செல்லும் விமானங்களில் அமெரிக்காவுக்கு அடுத்தபடி மிக வசதியானவற்றை ஆஸ்திரேலியாவில் கண்டேன்; 3,000 மைல்கள் நான் ஆகாய

விமானப் பிரயாணம் செய்தது இன்பமான அனுபவமே. ஆஸ்திரேலிய விமானங்களில் பிரயாணம் செய்வோர் விபத்துக்குள்ளானால் ஒவ்வொருவருக்கும் 1000 பவுனை விமானக் குழுவினர் கொடுத்து விடுகின்றனர். இது பிரயாணிகளுக்குக் கிடைக்கும் இலவசமான ஏற்பாடாகும்.

இந்தியப் பெருங்கடல் வழியாக மேற்கு ஆஸ்திரேலியாவிலுள்ள பெர்த் நகரிலிருந்து தென்னுப்பிரிக்காவுக்கு விமானப் போக்குவரவு ஏற்படுத்த ஆஸ்திரேலிய விமானிகள் முடிவு செய்துள்ளனர்.

ஆஸ்திரேலிய அரசியலார் ஆகாய விமானக் கம்பெனி ஒன்றை நடத்துகிறார்கள். வணிகர் நடத்தும் ஒரு கம்பெனியும் அங்கு உண்டு. வெளிநாடுகளுக்குச் செல்லும் விமானங்களையுடைய கம்பெனிகளில் அரசியலார் 9 கோடி ரூபாய் முடக்கி இருக்கின்றனர்; உள் நாட்டுப் போக்குவரவுக்கான விமானக் கம்பெனியில் 11 கோடி ரூபாய் முதலீடு செய்திருக்கின்றனர். விமானத் தொழில் ஆராய்ச்சியிலும், விமானக் கம்பெனிகளுக்கு மான்யம் கொடுப்பதிலும் அரசியலார் பல கோடி ரூபாய் செலவிடுகின்றனர்.

ஆஸ்திரேலியாவில் விமானங்களைப் பயன்படுத்துவோர் மிகுதி. விமானக் கட்டணங்கள் மலிவாயிருப்பதால் அங்கே ரயில்களின் வருவாய் குறைந்துவிட்டது; விமானத்தில் செல்லும் மக்கள் ரயிலில் பிரயாணம் செய்யவேண்டுமென்ற கருத்தோடு, ரயில்வே கம்பெனியார் கீழ்க்கண்டது போன்ற விளம்பரங்களை வெளியிடுகின்றனர் :—

ஒருவர் ஒரு விமானக் கம்பெனி அலுவலகத்துக்குத் துக்குச் சென்று, "7-20க்குச் சிட்னிக்கு விமானம் புறப் படுவதாகக் கால அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக் கிறது. இப்போது மணி 7-50 ஆகிவிட்டது. இன்னும் விமானம் புறப்படவில்லை" என்று உரக்கக் கூவினர்.

அங்கிருந்த ஊழியர், "மூடுபனியாக இருக்கிறது. அதனால் விமானம் உரிய காலத்தில் புறப்பட இயல வில்லை" என்று காரணம் கூறினர்.

"உங்கள் கால அட்டவணையையும் இனி நம்பமாட் டேன். உங்கள் விமானங்களையும் நம்பி மோசம் போக மாட்டேன்," என்று சொல்லிவிட்டு, அந்தப் பிரயாணி கோபமாக வெளியேறினர். அது முதல் அவர் ரயிலி லேயே பிரயாணம் செய்து வருகிறார்.

பிரயாணங்களுக்கு ஏற்றது விக்டோரியா இராஜ் ஜிய ரயில்தான்*

---

16. ஆஸ்திரேலியாவும் நியூசீலந்தும்

நாடும் மக்களும்

நியூசிலந்து என்பது ஆஸ்திரேலியாவுக்கு 1200 மைல் தென் கிழக்கேயுள்ள தீவுகளின் பொதுப் பெயராகும். அங்கே 15 லட்சம் மக்கள் வாழ்கின் றனர். குடியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் கொள்கை அங்கே இல்லை: பல ஆயிரம் இந்தியர் எல்லா

* ஆஸ்திரேலியாவில் இராஜ்ஜிய அரசியலாரே ரயில் வேக்களை நடத்துகின்றனர்.

உரிமைகளுடனும் அங்கே நல்வாழ்வு வாழ்கின்றனர் இவர்களிற் பலர் அங்கேயே மணம் செய்து கொண்டிருக்கின்றனர். சொந்தமாகப் பழத்தோட்டங்கள் உடையவர்கள் உண்டு. மாரீஸ் (Moaris) என்ற ஆசிய இனத்தவர் நியூசீலந்தில் ஒரு லட்சம் பேருளர்; இவர்களும் பிலிப்பைன்ஸ், மலேயா மக்களும் ஒரே கலாசாரத்தின் வழித்தோன்றல்கள்.

" ஆஸ்திரலேசியா "

அமெரிக்காவுக்குக் கனடாவும் இந்தியாவுக்குப் பாக்கிஸ்தானும்போல ஆஸ்திரேலியாவுக்கு நியூசீலந்து இருக்கிறது. இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் இந்தியத் துணைக் கண்டம் (Indian Subcontinent) என்ற பொதுப் பெயர் வழங்குகிறது. டென்மார்க், நார்வே, சுவீடன் இம்மூன்று நாடுகளுக்கும் **ஸ்காண்டிநேவியா** என்ற பொதுப் பெயர் உண்டு. இவைபோல, ஆஸ்திரேலியாவுக்கும் நியூசீலந்துக்கும் சேர்த்து **ஆஸ்திரலேசியா** என்னும் பொதுப் பெயர் வழங்கி வருகிறது. ஆசியாவின் தென்கிழக்கிலுள்ள சில நாடுகளுக்குத் தென்கிழக்கு ஆசியா என்று பெயருள்ளது போல, **தெற்குப்பகுதி** என்ற பொருளில் ' ஆஸ்திரலேசியா ' என்ற பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும். லத்தீன் மொழியில் **ஆஸ்திரல்** என்பதற்குத் தெற்கு என்பது பொருள்.

ஆப்பிரிக்காவையும் ஐரோப்பாவையும் இணைக்கும் இஸ்ரேல் இராஜ்ஜியம் ஆசியப் பெரு நிலப்பரப்பில் இருக்கிறது.

துருக்கியும் எகிப்தும் ஆசியப் பெரு நிலப்பரப்பில் இல்லாவிட்டாலும், ஆசிய நாடுகளே ஆகும். இவற்

றிற்கு மாருக ஆசியக் கலாசாரமில்லாத மக்களே மிகுதி யாக வாழும் ஆஸ்திரேலியாவும் நியூசீலந்தும் ஆசியா வின் எல்லையிலேயே இருப்பதால் இவ்விரு நாடுகளும் ஐரோப்பிய நாடுகளைவிட நம் நாட்டுடன் மிகுந்த உறவு கொண்டுள்ளன. அரசியல் விவகாரங்களில் ஆஸ்திரேலி யாவும் நியூசீலந்தும் ஆசிய நாடுகளாகக் கொள்ளப்படு வதும் இங்கே கவனிக்கத் தக்கது.

இந்த இரண்டு நாடுகளுக்கும் மிக நெருங்கிய உறவு இருந்து வருகிறது. இந்த நாடுகள் சிக்கலான பிரச்சினை களைத் தீர்க்கக் கையாளும் முறைகளை நாம் ஆராய்ந்து அறிந்து பயனடையலாம். இந்தியாவும் பாக்கிஸ்தானும் போலவே ஆஸ்திரேலியாவும் நியூசீலந்தும் பிரிட்டிஷ் பேரரசுக்கு உட்பட்ட நாடுகளாக இருக்கின்றன. தற்காப்பு, வெளிநாட்டுக் கொள்கை, விமானப் போக்கு வரவு, பொருளாதாரத் திட்டமிடுதல் ஆகியவைபற்றி ஆஸ்திரேலிய நியூசீலந்து அரசியலார் அடிக்கடி கருத் துக்களைப் பரிமாறிக் கொள்ளுகின்றனர். மற்ற நாடு களுடன் எந்தப் பிரச்சினையைப் பற்றியும் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கு முன்பாக ஒருவரை ஒருவர் கலந்து கொள்ளுகின்றனர். பசிபிக் பெருங் கடலிலுள்ள தீவுகளைப்பற்றிப் பொதுவான ஒரு கொள் கையைக் கடைப்பிடித்து வருகின்றனர். அங்குள்ள கிறிஸ்தவ மடாதிபதிகளை இரு அரசியலார்களும் ஆதரிக் கின்றனர். தெற்குக் கடல் தீவுகளிலுள்ள சுதேச மக்களின் நலனைக் காக்க ஐக்கிய நாடுகள் சபை வாயி லாக ஒரு கமிஷனை நியமிக்க இவ்விரு நாடுகளும் முயன்று வருகின்றன. இருநாடுகளுக்கும் பொதுவான காரியங்களைக் கவனிக்கும் இயக்கங்களை ஆதரிக்கவும்

இரு அரசியலார்களும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

கூட்டு மாநாடுகள்

இரு நாட்டு அமைச்சர்களும் 1944 முதல் ஒவ்வோர் ஆண்டிலும் கான்பராவில் ஒரு முறையும் வெலிங்டனில் ஒரு முறையுமாக இருமுறை கூடுகின்றனர். நிரந்தரமான அலுவலகங்களை (Permanant Secretariats) ஆஸ்திரேலிய அரசியலார் நியூசிலந்துத் தலைநகரிலும், நியூசிலந்து அரசியலார் ஆஸ்திரேலியத் தலைநகரிலும் நிறுவி இருக்கின்றனர்.

பொருளாதார நிலை

ஆஸ்திரேலியாவை விட நியூசீலந்தில் விவசாயம் சிறப்பான நிலையில் இருக்கிறது. ஆனால் ஆஸ்திரேலியாவைப்போல நியூசீலந்து செல்வச் செழிப்புள்ளதாக இல்லை. பெருந் தொழில்கள்கள் அங்கே கிடையா. அங்கே இருக்கும் சில சிறு தொழிற்சாலைகள் ஆஸ்திரேலியக் கம்பெனிகளின் உட்கிளைகளே (Subsidiaries); செம்மறி ஆட்டுக்குட்டிகளும் உறைந்த பாலுமே அந்த நாட்டின் குறிப்பிடத்தக்க ஏற்றுமதிகள்.

20. முடிவு

இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் தோல்வியடைந்ததன் விளைவாக, இந்தியாவைப் போலவே ஆஸ்திரேலியாவும், கீழ்த்திசை நாடுகளிடையே ஒரு சக்தியாக விளங்குகிறது. அடுத்த சில ஆண்டுகளில் ஆஸ்திரேலியா பல துறைகளில் மேலும் முன்னேற்றம்

அடையும்; உலக விவகாரங்களில் இந்த நாட்டின் முக்கியத்துவம் வளரும்.

இந்திய ஆஸ்திரேலிய நல்லுறவை வளர்க்கும் நோக்கத்தோடு **இந்தியா லீக்** (India League) என்ற கழகம் ஆஸ்திரேலியாவில் அண்மையில் தோன்றியிருக்கிறது.

இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே படிப்படியாக வியாபாரம் பெருகிக்கொண்டே வருகிறது. ஆஸ்திரேலியாவுடன் நம் நாட்டைவிடக் கூடுதலாக வியாபாரம் செய்யும் நாடுகள் பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா ஆகிய மூன்றுமே. நம் இருநாடுகளுக்குமிடையே நேரடியான கப்பல் போக்குவரவு ஏற்படுத்த ஒரு கப்பல் கார்ப்பரேஷன் நிறுவப்பட்டிருக்கிறது. அந்நாட்டோடு மேலும் நெருங்கிய நட்புக்கொள்ளப் பல துறைகளில் நமது முதலமைச்சர் **ஜவஹர்லால் நேரு** முயன்று வருகிறார். ஆஸ்திரேலிய முதலமைச்சர் இவ்வாண்டின் இறுதியில் புது டில்லியில் சில நாட்கள் தங்குவார். இவைகளின் விளைவாக அந்நாட்டுக்கும் நம் நாட்டுக்கும் மேலும் நெருங்கிய நட்பும் தொடர்பும் ஏற்படும் என உறுதியாக நாம் நம்பலாம். சமூக சுகாதார, கல்வி, தொழில் துறைகளில் நம் நாடு முன்னேறினால், ஆஸ்திரேலியரும் தமது கொள்கையை மாற்றிக் கொள்ளுவர் என எதிர்பார்க்கலாம்.

ஆஸ்திரேலியாவிலிருந்து நம் நாடு அறியக்கூடிய படிப்பினைகள் சில உண்டு. அவற்றை இங்கே குறிப்பிட்டுக் காட்டுவோம்.

ஆஸ்திரேலிய நாட்டின் விரைவான வளர்ச்சிக்கு அடிப்படையான காரணம் அங்குள்ள அரசியல் கட்சிக

ளிடையே நிலவும் கருத்து ஒற்றுமையேயாகும். நாட்டின் முக்கியத் தொழில்களை அரசியலார் உடைமையாக்குவதை எல்லா ஆஸ்திரேலியக் கட்சிகளும் ஒப்புக் கொண்டுள்ளன. பேங்குகளையும் எஃகுத் தொழிற்சாலைகளையும் அரசியலார் நடத்துவது பற்றிமட்டும் அங்கு வேறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. பிரிட்டிஷ் பேரரசு நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்குக் குறைவான சுங்கவரி விதிப்பது (Imperial Preference), வெள்ளை ஆஸ்திரேலியக் கொள்கை, கம்யூனிசத்தை எதிர்ப்பது, பிரிட்டனுடன் நெருங்கிய உறவு கொண்டிருப்பது ஆகியவற்றிலெல்லாம் ஆஸ்திரேலியக் கட்சிகள் ஒற்றுமையாயிருக்கின்றன. நம் நாடும் தக்க முன்னேற்றம் அடைவதற்குத் துணையாக, இந்தியா பாகிஸ்தான் உறவு, சில அடிப்படைத் தொழில்களை அரசியலார் நடத்துவது, மொழிவாரி இராஜ்ஜியங்கள் அமைப்பது, இராஜ்ஜியங்களுக்கு மிகுதியான உரிமைகள் வழங்குவது, பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டமிடுவது, மதச் சார்பில்லாத அரசு, நடுநிலைமையான வெளிநாட்டுக் கொள்கை ஆகியவைபற்றி எல்லாக் கட்சியினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அடிப்படைகள் வகுக்கப்படவேண்டும்.

ஒரு நிகழ்ச்சி

இறுதியாக, ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆஸ்திரேலியாவிலிருந்து சிங்கப்பூருக்கு நான் பிரயாணம் செய்த கப்பல் புறப்படவிருந்த அன்று, பிரீமாண்டில் துறைமுகத்துக்கு அருகிலுள்ள பெர்த் நகரை அடைந்தேன். ஆஸ்திரேலியப் பிரயாணத்தின்

கடைசி நாளாக இருந்ததால், என்னிடமிருந்த ஆஸ்தி ரேலிய நாணயங்களை நான் செலவு செய்துவிட்டேன். மலேயா நாணயம் மட்டும் என்னிடம் 'டிராவலர்ஸ் செக்' ஆக இருந்தது. புத்தாண்டு புலர்ந்த மகிழ்ச்சியில் உல் லாசமாய்க் கடலில் நீந்தச் சென்ற சிலரைக் காணுததால் அவர்களை மீட்கக் கப்பலிலிருந்த லைப்போட் (Life Boat) கள் சென்றுவிட்டன வென்றும், அதனுல் கப்பலின் புறப்பாடு 5 நாட்கள் தாமதித்து விட்டதென்றும் கப்பல் அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும், பிரயாணி களுக்கு அந்த நாட்களுக்கும், இலவசமாகக் கப்பலில் உணவு தந்தனர். மற்றச் செலவுகளுக்குப் பணமில்லை ; பேங்குக்கு விடுமுறை நாட்களாக இருந்ததால், மலேயா நாணயத்தை மாற்ற வழியின்றி நான் தவித்தேன். எனக்குப் பண உதவி செய்யக்கூடிய ஆஸதிரேலிய நண் பர்கள் அங்கிருந்து 3000 மைல் தொலைவிலுள்ள மெல் பர்ன், சிட்னி நகரங்களில் மட்டிலுமே இருந்தனர். இந்தக் கட்டத்தில் கப்பல் அதிகாரிகள் தாமே எனக்கு 100 ரூபாய் தந்தனர் ; லண்டன் நகரிலுள்ள கப்பல் கம் பெனியார் பெர்த்—சிங்கப்பூர் பிரயாணத்திற்கு உரிய கப்பல் கட்டணமாகிய 40 ஆஸ்திரேலியப் பவுன்களுக் குப் பதிலாக 40 பிரிட்டிஷ் பவுன்களை என்னிடம் வசூ லித்து விட்டதாகவும் இந்த வேறுபாடு ரூபாய் 100 என்றும் கூறினர். இவ்வாறு ஆபத்துக் காலத்தில், நம்மில் சிலருக்குக் கடவுள் கருணை காட்டுகிருர் ; வேறு சிலருக்கு.........?